கல்கி

KALKI 10-3-1974 50 காசு





இன்பமயமான கனவுக் காட்சி...
மபத்லால் துணிமணிகளின் ஆட்சி!

இன்பமயமான ஒரு கனவு...
அழகு ஆட்சி நடத்தும் உங்கள்
துணிமணிகளைப் பார்க்கும்
விழிகளெல்லாம் உங்களை விட்டு
அகல மறுக்கின்றன. திடுமென
விழிப்பு...கனவல்ல நனவே என்பதை
உணர்கிறீர்கள். பாலியெஸ்டர்
இழைகலந்த கவின்மிகு ஷர்ட்டிங்,
ஸூட்டிங் அல்லது ரெடிமேட்
ஆடைகள் அணிந்த நீங்கள்
உண்மையிலேயே கவர்ச்சியின்
நடுநாயகமாக விளங்குகிறீர்கள்!

மபத்லால் க்ரூப்
அளிக்கும்
நேர்த்தியான துணிமணிகள்

டெரோஸெல்
பாலியெஸ்டர் இழைகலந்த
ஷர்ட்டிங்குகள்


டெரோஃபில்
பாலியெஸ்டர் ஃபிலமென்ட்
யார்ன் துணிகள்






எஸ்டர்காட்
பாலியெஸ்டர்
இழைகலந்த
ஸூட்டிங்குகள்


மபத்லால் அப்பேரல்
அளிக்கும்
கவர்ச்சிமிக்க
ரெடிமேட்
ஆடைகள்

AIYARS-M. 339 TM

BHOPAL





மின்சக்தித் துறையிலே மிக உயர்ந்த பெயர்

எளிய முறையிலே துவங்கி, எழுச்சியும் செயல் வேகமும் துடித்திடும் மாபெரும் நிறுவனமாக வளர்ந்துள்ளது BHEL (போபால்). இன்று, மின் சக்தியின் உற்பத்தி, இடம் விட்டு இடம் செலுத்தல், பயன்படுத்தல் ஆகியவற்றுக்கான கனரக மின் கருவிகளின் துறை யிலே மதிப்பிற்குரிய பெயராகத் திகழுகிறது BHEL (போபால்)

BHEL - (போபால்) நிறுவனத்திலே, கைதேர்ந்த பொறியியல், தொழில்நுட்ப வல்லுனர்களின் குழாம்கள், தன்னிறைவுள்ள, தனிநோக்க ஆராய்ச்சி—உற்பத்தி யூனிட்டுகள் மூலம் இயங்கிவருகின்றன. உலகின் எப் பகுதிக்கும் வேண்டியிருக்கும் எவ்வகையான, எந்த அளவுள்ள கனரக மின்கருவிகளின் விசேஷத் தேவைகள் அனைத்துக்கும் ஈடுகொடுக்கும் செயல்திறன் படைத்துள்ளவை இந்த யூனிட்டுகள்.

இதோ எங்கள் கருவிகளின் வரிசை :

- வாட்டர் டர்பைன்கள், அவற்றுக்கேற்ப 200 மெவா. வரை ஜெனரேட்டர்கள்.
- ஸ்டீம் டர்பைன்கள், டர்போ-ஜெனரேட்டர்கள், மற்றும் கண்டென்ஸர்கள்.
- 400 MVA வரை யூனிட் ரேட்டிங்குகளும்; 400 KV வோல்டேஜும் உடைய டிரான்ஸ்பார்மர்கள்.
- உயர் வோல்டேஜ் ஸ்விட்சுகியர்—220 KV
- திட்ட நோக்கிலுள்ள மிகப் பெரிய சைஸ்கள் வரைக்கும் AC மற்றும் DC மோட்டார்கள்.
- கண்ட்ரோல்கியர் மற்றும் கண்ட்ரோல் பேனல்கள்.
- எலக்ட்ரிக் மற்றும் டீஸல் எலக்ட்ரிக டிராக்ஷன் எக்விப்மென்ட்.
- ரெக்டிஃபையர்கள் மற்றும் கெபாசிட்டர்கள்.
- வோல்டேஜ் டிரான்ஸ்பார்மர்கள் (மின் காந்த மற்றும் கெபாசிட்டர் ரகங்கள்) மற்றும் கரெண்ட் டிரான்ஸ்பார்மர்கள்—400 KV உள்ள வோல்டேஜுகளுக்காக.

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிட்., போபால்

(இந்திய அரசாங்க நிறுவனம்)

மக்களுக்காக சக்தி

JAISONS-3344



கல்கி

பொருளடக்கம்

பிரமாதீச, மாசி 26 ■ மார்ச் 10, 1974


கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00

மேலட்டை: பூங்காவின் எழில் கண்டும்
பூக்காத உள்ளம் உண்டோ?

வண்ணப்படம் : ரவீந்திர பல்லா

வாய்நாற்றம் உங்களை விலகி நிற்கச் செய்கிறது...





கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.
அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையினாலேயே— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே,
உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும்விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

DC-G.20 TH

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 32

தலைவலி திருகுவலியாகிறது!

ஆண்டுக்கு 212 கோடி ரூபாய் வசூலிக்கப் புதுப் புது வரிகளை அமைச்சர் சாவன் விதித்திருக்கிறார். இத்துடன் ரயில்வே அமைச்சர் திரு எல். என். மிச்ரா, தமது பங்குக்குப் பிரயாணக் கட்டணங்கள் மூலமும், சரக்குக் கட்டணங்கள் மூலமும் 137 கோடி ரூபாய் வசூலிக்கப் போகிறார் என்பதையும் கூட்டிப் பார்த்தால் வரும் ஆண்டில் பாரத மக்கள் தாங்க வேண்டிய புது வரிச் சுமை 350 கோடி ஆகிறது. அவர்கள் வாழ்க்கை முன்னெப்போதையும்விட கடினமானதாக இருக்கும் என்பதற்குக் கட்டியம் கூறியாகிவிட்டது.

நேர்முக வரிகளைக் காட்டிலும் மறைமுக வரிகள் மூலமே அதிகமான நிதியைத் திரட்ட முடியும் என்பதைப் புரிந்து . கொண்டு செயலாற்றியிருக்கிறார் அமைச்சர் சாவன்.

மறைமுக வரிகள் என்பது மறைமுகமாக மக்களைத் தாக்குவதே ஆகும். இந்தவரிகள் விதிக்கப்பட்டுள்ள பொருள்களின் விலைவாசிகள் மட்டுமின்றிப் பொதுவாகவே உணவுப் பொருள்கள் உட்பட, எல்லாப் பொருள்களின் விலைகளும் உயரும். இது பொருளாதாரத்தில் வரி விதிப்பின் இயற்கையான உடன் விளைவு. எனவே பணக்காரர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் பொருள்களுக்குத்தான் மறைமுக வரிகள் விதிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் வேணுமானால் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் அல்லல்படப் போகிற மக்களின் வாழ்வில் திருப்தி என்பது மருந்துக்குக் கூட இராது. சாமானிய மக்களையும் அமைச்சர் அப்படியொன்றும் விட்டு வைத்ததாகத் தெரியவில்லை. சிமெண்ட், பற்பசை, காகிதம் இவற்றின் விலை உயர்வாலும் ரயில்வே கட்டணங்களின் உயர்வாலும் கீழ்த்தர, மத்தியதர மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். தபால் கார்டு விலையைப் பத்து பைசாவிலிருந்து பதினைந்து பைசாவுக்கும் அதேபோல் உள்ளூர்க் கடிதம், கவர், தந்திக் கட்டணம் ஆகியவற்றையும் உயர்த்தியுள்ளதை ''ஏழைமையை ஒழிக்க'' இந்திரா அரசுடன் ஒத்துழைக்கக் காத்திருக்கும் பரம ஏழையும் வரவேற்க முடியாது! போதாக் குறைக்கு பட்ஜெட்டுக்கு மறுநாள் ஏற்றிவிக்கப்பட்டுள்ள பல ரக பெட்ரோலியம் எண்ணெய்களின் விலை உயர்வும் சேர்ந்து கொண்டு மக்களைத் திணற அடிக்கப் போகிறது.

பற்பசைக்கு வரி விதித்திருப்பது இதுதான் முதல் தடவையாகும். பற்பசையை உபயோகிப்பவர்கள் எல்லோரும் வசதி படைத்த வர்க்கத்தினர் என்பது நிதி அமைச்சரின் முடிவா?

மாதச் சம்பளம் வாங்கும் வர்க்கத்தினருக்கு வருமான வரியில் ஓரளவு சலுகை காட்டியதற்கு நன்றி சொல்லத்தான் வேண்டும் என்றாலும் விலைவாசி உயர்வுகள் இந்தச் சலுகைகளை விழுங்கி ஏப்பம் விட்டுவிடும்!

உயர்ந்த வருமானம் உள்ளவர்களின் வருமான வரி விகிதம் கணிசமாகக் குறைக்கப்பட்டிருப்பதால் சேமிப்பு அதிகரிக்கவும், தொழில்களில் முதலீடு செய்யவும் வாய்ப்பு அதிகரிக்க இடமுண்டு; இதனால் தொழில் வளம் பெருகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இங்கும் வருமான வரிச் சலுகையை ஈடுகட்டச் சொத்து வரியை உயர்த்தியுள்ளது அரசாங்கம். மேலும் உற்பத்திப் பெருக்கத்துக்கோ தொழிலகங்களின் விஸ்தரிப்புக்கோ உதவுமாறு எந்தவிதமான வரிச் சலுகையும் தொழிலகங்களுக்குக் காட்டவில்லை.

ரயில்வே சரக்குக் கட்டண விகிதங்கள் அனைத்தும் அந்தந்தத் தொழில்களின் உற்பத்திச் செலவில் இணைந்து அடக்க விலையை உயர்த்தி, அந்தந்தப் பொருள்களின் விலையை உயர்த்தும்.

இவ்வளவு வரிகளுக்குப் பின்னரும் ரயில் துறையிலும், பொதுத் துறையிலும் பற்றாக்குறை முற்றிலும் ஈடு செய்யப்படவில்லை. அதாவது நோட்டு அச்சடித்து இக்குறையை ஈடுசெய்யும் சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்யும். பணவீக்கமும், விலை உயர்வும் தவிர்க்கப்படவில்லை என்பதோடு அவை அதிகரிக்கவும் வழி வகுக்கப்பட்டுள்ளன. தலைவலி திருகுவலியாகிறது!

அ. தி. மு. க. வுக்கு அரிய வாய்ப்பு

புதுச்சேரி தேர்தல்களிலிருந்து புலனாகும் உண்மைகள் பல. ஐந்தாண்டு காலம் அங்கே ஆட்சி புரிந்த திராவிட முன்னேற்றக் கட்சியிடம் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது ஒன்று. பெயருக்கு மட்டுமே இரண்டு ஸ்தானங்கள் இக்கட்சிக்கு இருக்கின்றன. முற்றிலும் நம்பிக்கை இழந்துவிட்ட கட்சியாக இது அங்கே காட்சி தருகிறது.

புதிய காங்கிரசும் பழைய காங்கிரசும் ஒன்றாக இணைந்து — இல்லை, தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்டு — நடத்திய கூட்டுப் பிரசாரம் எதிர்பார்த்த அளவு பலன் தரவில்லை. இது இரண்டாவது உண்மை. புதிய காங்கிரசும், பழைய காங்கிரசும் சில இடங்களைப் பிடித்திருந்தாலும் அரசு அமைப்பதற்கு வேண்டிய பெரும்பான்மை ஸ்தானங்களை மக்கள் அவர்களுக்கு அளிக்கவில்லை. வோட்டுப் பெற நடந்த பரிசோதனை இத்துடன் முடிந்து விடுமா, அல்லது பின்னரும் நீடிக்குமா? பிரதமர்—காமராஜ் நட்பு தாற்காலிகமானதுதானா? இவையெல்லாம் இப்போதைக்குக் கேள்விக் குறிகளே.

அ. தி. மு. க.—கம்யூனிஸ்ட் கூட்டணிக்குக் கிடைத்த வெற்றியும் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுத் தரவில்லை. என்றாலும் திண்டுக்கல்லில் அ.தி.மு.க. நாட்டிய ஜெயக்கொடி குருட்டாம்போக்காக ஏற்பட்ட அதிர்ஷ்டவசமான வெற்றியல்ல என்பதையும், அதற்குப் பெருமளவு ஆதரவு பரவலாக, புதுவையிலும் தமிழ்நாட்டிலும் உறுதியாகவே இருக்கிறது என்பதையும் அவர்களின் வெற்றி எடுத்துக் காட்டுகிறது.

மிகப் பெரும்பான்மை பலம் இல்லாமல் போனாலும் சட்டசபையில் அதிக எண்ணிக்கையுள்ள பெரிய கட்சி என்ற முறையில் அ.தி.மு.க. அரசு அமைக்கலாம். அ.தி.மு.க.—கம்யூனிஸ்ட் கூட்டணி அமைச்சரவை அமைய வாய்ப்பிருக்கிறது. ஆளும் கட்சியும், எதிர்க் கட்சிகளும் சம பலம் உள்ளவர்களாக இருப்பதால், மிகுந்த ஜாக்கிரதையுடனே ஆட்சி புரிய வேண்டிய அவசியம் உண்டு. ஸ்திரமான ஆட்சிக்கு உதவாவிட்டாலும் நல்ல ஆட்சிக்கு இத்தகைய அமைப்பு நன்மையே. இதை அ. தி. மு. க. தலைவர் உணர்ந்து பேசியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அ. தி. மு. க.வின் அரசியல் விவேகத்தை வெளிக்காட்டப் புதுவை அரிய வாய்ப்பை அளித்திருக்கிறது.

தமிழ் நாட்டிலே...

தீரன்

தஞ்சையில் காகித ஆலை

தஞ்சை மாவட்டத்தில் பெரிய மிராசுதார்களான குன்னியூர் குடும்பத்தினர் மன்னார்குடியின் அருகேயுள்ள குமாரபுரத்தில் ஒரு தொழிலகத்துக்கு அடிக்கல் நாட்டியுள்ளனர். தொழிற்சாலையின் பெயர்: 'குன்னியூர் அட்டைக் காகித ஆலை.'

இதுவரை தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் அறுவடைக்குப் பின் கிடைக்கும் பெரும் பகுதி வைக்கோல் எதற்கும் பயன்படாமல் வீணாகி வந்தது.


புதிதாகத் தொடங்கப்படுகிற இந்த ஆலையின் நிர்வாகிகள் குறுவை அறுவடைக்குப் பின் கிடைக்கும் வைக்கோலின் பெரும்பகுதியைத் தங்கள் மூலப்பொருளாகப் பயன்படுத்தப் போகிறார்கள்.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு இது மகிழ்ச்சியளிக்கும் செய்தியாகும். இத்தொழிற்சாலை இன்னும் ஆறு மாதக் காலத்தில் பூர்த்தியடைந்து செயல்படத் தொடங்கும் என்று தெரிகிறது. இதன் மானேஜிங் டைரக்டர் கே. என். துரைசாமி குறைந்த காலத்தில் எல்லாப் பூர்வாங்க வேலைகளையும் முடித்து விரைவில் தொழிற்சாலையை இயக்க அல்லும்பகலும்அயராது பாடுபட்டுவருகிறார்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள பணம் படைத்த மக்கள் விரைந்து பல புதிய தொழில்களைத் தொடங்கும் விஷயத்தில் கோனை மாவட்ட மக்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் குன்னியூர் குடும்பத்தினர் பரம்பரையாகவே புகழ் பெற்றவர்கள் என்றும், இன்றுள்ள அக் குடும்பத்தின் சகோதரர்கள் இந்த ஆலையை அமைக்க முன்வந்தது பாராட்டுக்குரியது என்றும் அடிக்கல் நாட்டு விழாவுக்குத் தலைமை வகித்த தமிழக உணவுத்துறை அமைச்சர் மன்னை நாராயணசாமி வாழ்த்தியிருக்கிறார். நாமும் வாழ்த்துகிறோம்.

தந்திரம் பலிக்கவில்லை

பாண்டிச்சேரியில் எப்படியும் தி. மு. க.வை வெற்றி பெறச் செய்து விடவேண்டும் என்ற ஆவலில் செய்யப்பட்ட தந்திரங்கள் எதுவுமே பலிக்கவில்லை. "பிரதமர் காமராஜுடன் ஒரே மேடையில் பேசினாரே தவிர யாருக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று சொல்லவே இல்லையே?" என்று திரு கருணாநிதி துஷ்பிரசாரம் செய்ததும்பயன்படவில்லை. இதற்கும் மேல் ஒரு படி அதிகமாகச் சென்று தி. மு. க. ஆதரவுள்ள ஒரு பத்திரிகை உ. பி. தேர்தலுக்காகத் திரு காமராஜ் கூறியதாகச் சில கருத்துக்களைத் திரித்து வெளியிட்டு அதன் ஆயிரக்கணக்கான பிரதிகளை விலையே பெறாமல் இலவசமாகப் பாண்டிச்சேரி வீதிகளில் வாரியிறைத்தது. அந்தத் துஷ்பிரசாரத் தந்திரமும் பயன் படவில்லை. மக்கள் விழிப்பாக இருந்து தி. மு. க.வைத்


புதுவையில் புயல் உருவாகியிருக்கிறது. அது சென்னையை நோக்கி நகரலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது!
ஓட்டை ஒடசல் பித்தளை ஓட்ட வாங்கறதுமா?
பூவுடன் கல்!

தவிர மற்றக் கட்சிகளைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். தோற்ற பின் ஜனநாயகம், நேர்மைகள் பற்றி அறிக்கை விடும் தமிழக முதல்வர் தேர்தலுக்கு முந்திய தமது கட்சியின் பிரசாரங்களிலும் அதை ஓரளவாவது கடைப்பிடிக்க முயன்றிருக்கலாம்.

துப்பாக்கியும் தூய்மையும்

சிலைகள், விக்கிரகங்கள், கோவில் நகைகள், பிற உடைமைகள் எதுவும் திருட்டுப் போகாமல் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒவ்வோர் ஆலயத்தின் காவலருக்கும் துப்பாக்கி தரப்படும் என்றும், துப்பாக்கியை எப்படி உபயோகிப்பது எனப் பயிற்சியும் அளிக்கப்படும் என்றும் தமிழ் நாடு இந்து அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் தஞ்சையில் பேசும் போது கூறியிருக்கிறார். கோவில் உடைமைகளைப் பாதுகாப்பதில் அவருக்குள்ள சிரத்தையைப் பாராட்டலாம் என்றாலும் இந்த விஷயத்தில் துப்பாக்கியை விட மனத்தூய்மையே பயன்படும் என்பது நமது கருத்து. பல்லாயிரம் கோயில்களையும், அவற்றின் விலைமதிக்க ஒண்ணாத தங்க வைர நகைகளையும் இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக நமது முன்னோர்கள் மனத்தூய்மையாலும் பக்தியாலுமே பாதுகாத்து வந்திருக்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். மனத் தூய்மையும் 'தெய்வச் சொத்து' என்ற மதிப்போடு கூடிய பக்தியும் இல்லாவிட்டால் துப்பாக்கிகள் இருந்தும் கூட அவற்றை நம்மால் பாதுகாக்க முடியாமல் போய் விடலாம். தூய்மையும் பக்தியுமே முக்கியம். துப்பாக்கி வெறும் கருவிதான்.

'கன்ஸ்யூமர் யூனியன்'

கடைகளிலிருந்து பொருள்களை வாங்குவோர், உபயோகிப்போர்களுக்கு வழிகாட்டவும், கலப்படம், நிறுவையில் அளவுகள் குறைதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கும் உதவுகிற கன்ஸ்யூமர் யூனியனின் தென் பகுதிக் கிளை சென்னையில் ஒரு பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது. இப்பொருட்காட்சி மார்ச் மாதம் இரண்டாவது வாரம் சென்னை தேனாம்பேட்டையிலுள்ள 'தி குரோவ்' பங்களாவில் நடைபெறவிருக்கிறது என்று திரு எஸ். ஓய். கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார். அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், நாடுகளில் உள்ளது போல் கன்ஸ்யூமர் (பண்டங்களை வாங்கி உபயோகிப்போர்) இயக்கத்தை ஒற்றுமைப் படுத்தவும், வலுப் படுத்தவும் இப்பொருட்காட்சி மூலம் இங்கே முயற்சி செய்யப் போகிறார்கள்.

இது விஷயமாகத் தொடர்பு கொள்ள விரும்புகிறவர்களுக்கு விலாசம்: ஸதர்ன் கன்ஸ்யூமர் யூனியன், தி. குரோவ், சென்னை-18

விதைகளில், உரங்களில் ஊழல்

யூரியா போன்ற 'உரங்களை மூட்டை மூட்டையாகப் பதுக்கி வைத்திருந்தவர் கைது.' 'உரங்களில் கலப்படம்' — என்பன போன்ற செய்திகளை நாள் தவறாமல் தினசரிகளில் பார்க்கிறோம்.

வேலூரில் மாவட்டக் கலெக்டர் முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் அரசாங்க விதைகள், உரம் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட குறைகளைக் கவனித்தால் சிரிக்கத்தான் தோன்றுகிறது.

''பூச்சிகளை அழிக்கத் தெளிக்கும் பூச்சி கொல்லி மருந்தால் பூச்சிகள் சாவதில்லை. பயிரே வாடிச் செத்துப் போகிறது.''

''அதிகாரிகள் கம்பு விதைகள் கொடுக்கிறார்கள். ஆனால் அதைக் கொண்டு போய் வயலில் விதைத்தால் எதுவுமே முளைப்பதில்லை! இப்படி முளைக்காத கம்பு, கடலை, நெல் விதைகளை நாங்கள் வாங்க வேண்டும் என்று அதிகாரிகள் எங்களை இம்சிக்கிறார்கள்.''

''மிக்சர் உரம் என்று கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து விவசாயிகளுக்குக் கொடுக்கும் உரங்களில் பெரும் பகுதி மணல் கலக்கப்பட்டிருக்கிறது.''

''மீன் வளர்ப்பு என்ற பெயரில் பத்து ரூபாய் மதிப்புள்ள மீனை வளர்க்கக் கொடுத்து விட்டுச் சில மாதங்களிலேயே அதிகாரிகள் வந்து 500 ரூபாய் கட்டச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்.''

கூட்ட முடிவில் இக் குறைகளையெல்லாம் தவிர்க்க முயல்வதாகக் கலெக்டர் வாக்களித்திருக்கிறார். உரங்களால், விதைகளால்தான் நாட்டில் பசுமைப் புரட்சி விளைய முடியும். உரங்களிலும், விதைகளிலுமே ஊழல் இருந்தால் 'ஊழல் புரட்சி'தான் விளையும். பசுமைப் புரட்சி விளையாது.

ராஜாஜி சிந்தனை

யுத்தத்தில் வெற்றிகரமாகப் போரை நடத்தும் பொறுப்பு, தளபதிகள் மேல் நிற்கிறது. அதைப் போலவே ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் பலருள் சமுதாயத்தின் பாரத்தைத் தாங்கி நடத்தும் ஆற்றல் கொண்ட சிலர் மேல் அந்தப் பொறுப்பு நிற்கிறது. தளபதிகளின் ஆற்றலே அவர்கள் மேல் போரின் பொறுப்பை ஏற்றுகிறது. சமுதாய நிர்வாகத்தின் பொறுப்பும் அதைத் தாங்க வல்லார் மேல் நிற்கும். ஆற்றலுடன் பொறுப்பும் வந்து சேருகிறது. சமுதாயத்தின் காரியங்களைத் தைரியமாகவும் தளர்ச்சியில்லாமலும் செய்து நிறைவேற்றுவது, ஆற்றல் பெற்றவர்களின் கடமை.

ஓம் முருகா !

திருச்சிராப்பள்ளி குமாரவயலூர் குமாரப் பெருமானுக்கு

தங்கக் கவசத் திருப்பணி

தலைவர்: திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள். தென்னாட்டின் தலைசிறந்த பிரார்த்தனை தலம், குமாரவயலூராகும். வளமான வாழ்வு வேண்டுவோர் — வற்றாத செல்வம் வேண்டுவோர், வாட்டிடும் நோய் அகல வேண்டுவோர்—வயலூர் நோக்கி வந்து கொண்டே இருக்கின்றார்கள். வள்ளல் முருகப்பெருமானும் அருளை வாரி வாரி வழங்கிக்கொண்டே இருக்கின்றார்.

வாரி வழங்கி வரும் வயலூர் வள்ளலுக்கு ''தங்கக் கவசம்'' செய்ய வாரி வள்ளல் தலைமையிலே ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 700 பவுன் அல்லது 5600 கிராம் தங்கம் தேவைப்படுகிறது. ஊன் உடம்பை அலங்கரிக்கும் ஆபரணங்கள் வயலூரானின் அருளுருவை அலங்கரிக்கும் தங்கக் கவசத்தில் சேர்ந்தால் எத்தனை சிறந்த பயன் நமக்கு ஏற்படும்! சிந்தித்து சிறந்த பணியில் சிறப்பாக ஈடுபடுங்கள்.

தங்கக் கவச திருப்பணியில் பங்குபெற விரும்புவோர் தங்க நகைகளாக கீழே கண்ட முகவரிக்கு அனுப்பி அச்சு ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

A. A. வெங்கடாசலம், B. A.,
நிர்வாக அதிகாரியும் கூட்டுப் பொருளாளரும்
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
குமாரவயலூர் அஞ்சல், திருச்சி மாவட்டம்.

Space donated by:

SRI SUBBATHAL ALAGAPPA TRUST
1, Whannels Road
Egmore, Madras - 600008

அம்பாளின் ஸ்வரூபம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

"நீதான் பரமேச்வரனின் சரீரம்" என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் அம்பிகையைப் பார்த்துச் சொல்கிறார். சரீரத்துக்குள் உயிர் இருக்கிறது. உயிர்களுக்கெல்லாம் உயிராக ஒரே மூல வஸ்துதான் இருக்கிறது. அந்த மூல வஸ்துவான பிரம்மம்தான் பரமேச்வரன் என்றால், அதன் இத்தனை தோற்றங்களுமே பராசக்தி. இது அவ்வளவும் அதற்குச் சரீரமாகவும், அது இவற்றுக்குப் பிராணனாகவும் இருக்கிறது. பிரபஞ்சம், அதிலுள்ள ஜீவராசிகள், அவற்றின் மனசு, புத்தி, சித்தம், அகங்காரம் எல்லாம் பரமேச்வரன் என்ற உயிருக்குச் சரீரம் மாதிரி. இது அத்தனையும் சாட்சாத் அம்பாள்தான். உடலும் உயிரும் மாதிரி பிரம்மமும் பிரம்ம சக்தியும் பிரியாமல் இருக்கின்றன. உடலில் எல்லா இடங்களிலும் உயிர் ஓடுகிற மாதிரி பராசக்திக்குள் முழுக்கப் பிரம்ம தத்துவமேதான் நிறைந்திருக்கிறது.

இப்படி அம்பாள் பரமேச்வரனோடு பிரிக்க முடியாமல் கலந்திருப்பதைத்தான் ஒரு மாதிரியாக, இவள் பாதி — அவர் பாதி ஒன்று சேர்ந்தது போல் அர்த்தநாரீச்வர ஸ்வரூபத்தில் பார்க்கிறோம். சொல்லும் பொருளும் போல் ஈச்வரனும் அம்பிகையும் பிரிக்க முடியாமல் ஐக்கியமாயிருக்கிறார்கள் — வாக் அர்த்தா விவ — என்று மகாகவி காளிதாஸர் சொல்கிறார். நான் 'பசு' என்று சொன்னால் அது 'ப' என்கிற ஒரு சத்தமும் 'சு' என்கிற ஒரு சத்தமும்தான். சொல்லின் சத்தத்திலோ அல்லது எழுத்திலோ அந்த மிருகம் எங்கே இருக்கிறது என்று கேட்டால் எப்படிச் சொல்வது? எப்படியிருக்கிறது, எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனாலும் இந்த வாக்கைச் சொன்னவுடன் அர்த்தம் உண்டாகிவிடுகிறது. வாக்கும் அர்த்தமும் பிரிக்க முடியாதபடி இருக்கின்றன. இப்படித்தான் பிரபஞ்சத்தில், ஜீவராசிகளில், அவற்றின் எண்ணங்கள், காரியங்கள் ஆகியவற்றில் பிரம்மம் எங்கே எப்படி இருக்கிறது என்று தெரியாவிட்டாலும், இது எல்லாம் 'சொல்' என்றால் இதற்குப் 'பொருளாக' அந்த நிலைப் பொருள் இருக்கிறது.

அம்பாளுடைய ஸ்வரூபம் என்ன என்றால் நாம் பார்க்கிற எல்லா உருவங்களும்தான் — உருவங்கள் மட்டுமில்லை, எண்ணங்கள், காரியங்கள் எல்லாமும்தான். அவளின்றி நம் சரீரம், மனசு, உயிர் எதுவும் இல்லை. 'சரீரம் த்வம் சம்போ:' — 'நீ பரமேச்வரனின் சரீரமாயிருக்கிறாய்' என்று ஸௌந்தர்ய லஹரியில் சொல்கிற ஆசார்யாள், அடுத்த சுலோகத்தில், 'நீதான் சூட்சுமமான மனமாக இருக்கிறாய்' என்கிறார். அந்த மூலமான மனசிலிருந்து, சூட்சுமமான ஆகாசம் உண்டாயிற்று. அது மேலும் மேலும் ஸ்தூலமாகி, காற்று, அக்னி, ஜலம், மண் எல்லாம் வந்தன. இதெல்லாமும் நீதான் என்கிறார். நீ இல்லாமல் வேறு எதுவுமே இல்லை என்கிறார்:


த்வயி பரிணதாயாம் நஹிபரம்.

'சம்புவுக்கு நீ சரீரம் என்று முதலில் சொன்னாலும், சம்பு—சரீரம் என்ற பேதங்கள் இல்லாமல் ஒன்றாக இருந்ததும் நீதான். நீயேதான் விச்வம் என்கிற சரீரமாகப் பரிணமித்தாய்' — த்வம் ஏவ ஸ்வாத்மானம் பரிணமயிதும் விச்வ வபுஷா. 'எங்களிடம் இருக்கிற துளித் துளி ஞானத்துக்கும் ஆனந்தத்துக்கும் மூலமான பரம ஞானமும், பரமானந்தமும் நீதான். இந்த ஞானத்தையும் ஆனந்தத்தையும் அநுபவிப்பதற்கே ஒன்றாக இருந்தவள், இரண்டு மாதிரி ஆகி சிவயுவதி என்ற பாவத்தைத் தாங்கியிருக்கிறாய்' என்கிறார்.

எங்கேயும் ஒன்று இருக்கிறது என்றால் அதற்குத் தனி உருவம் எப்படி இருக்க முடியும்? காற்று அநேகமாக எங்கேயும் செல்ல முடிகிறது; அதற்கு ரூபம் இருக்கிறதா? அம்பாளோ அதைவிட சூக்ஷ்மம். காற்று இல்லாத சூனியத்தை (Vacuum) கூட உண்டாக்குகிறார்கள். ஆனால் அவள் இல்லாத இடம் இல்லை. மனசு, எண்ணம் இதற்குள்ளும் இருக்கிறாள். அப்படியானால் அவளுக்கு எப்படி உருவம் இருக்க முடியும்?

எல்லாம் அவள் உருவம்தான்; அவளுக்கு உருவமே இல்லை என்று தெரிகிறது. ஆனால் இது நம் சாமானிய நிலையில் மனசுக்கு ஹிதமாக இல்லை. அவளிடமிருந்து நாம் வந்தோம் என்பதால், அவள் அம்மாவும் நாம் குழந்தைகளும் மாதிரி. அம்மா ஒருத்தி இருக்கிறாள் என்று குழந்தைக்குத் தெரிந்துவிட்டால் மட்டும் அது சந்தோஷப்படுமா? அவள் இருந்தால் மட்டும் போதாது. அவளைப் பார்க்க வேணும், பேச வேணும் என்று ஆசைப்படும்.

அவள் எல்லாமாக இருக்கிறாள் என்று நம் புத்தியால் உணர முடியவில்லை. அருவமாகவே அவளைத் தியானிக்க நமக்குப் பக்குவம் போதவில்லை. நமக்காகத்தான், நாம் அன்பு செய்வதற்காகத்தான், அவள் இப்போது காருண்யமும் லாவண்யமும் ஒரு ரூபமாகித் திவ்விய மங்கள விக்கிரகமாக வருகிறாள். ரூபமில்லாத நெய்யை நன்றாகக் குளிர வைத்தால் பாளம் பாளமாகப் பெயர்த்து எடுக்கிற மாதிரி கெட்டிப்பட்டுப் போகிறது அல்லவா? இப்படித்தான், 'க்ருத காடின்ய வத்' என்கிற நியாயப்படி, பக்தர்களுடைய நெஞ்சின் குளிர்ச்சியில் பரம சூக்ஷ்மமான அம்பிகை உறைந்து போய் ஸ்தூலமான திவ்விய ரூபம் கொள்கிறாள்.



எண்ணெயா? என்ன பிரமாதம்

.புஷ்பா.

யாரும் 'எள்' என்று சொல்லவில்லை; இருந்தாலும் 'எண்ணெய்' என்று இறங்கினார் துரை . . .

காட்சி 1

(துரைசாமி அவசரம் அவசரமாக ஆபீசுக்குள் நுழைகிறார். மானேஜர் பாஷ்யத்தின் மேஜையை நெருங்கி அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தரில் கையெழுத்துப் போடப் போகும்போது அவருடைய முகம் சட்டென்று சுருங்குகிறது.)

துரைசாமி: சார்! என்ன சார் இது! என் பெயருக்கு நேரே சிவப்புக் கோடு இழுத்து வைத்திருக்கிறீர்களே?

பாஷ்யம்: மணி என்ன ஆகிறது பாரும்! பத்தரை! ஆபீஸ் ஒன்பதரை மணிக்கு ஆரம்பமாகிறது ஐயா! நீர் இன்னிக்கு லேட்! அதனாலேதான் கோடு இழுத்திருக்கிறேன்!

துரை: என்ன சார் லேட்? ஒரு அறுபது நிமிஷம் லேட்டாக வந்திருக்கிறேன், அவ்வளவுதானே! இதற்குப் போய்ப் பிரமாதப் படுத்துகிறீர்களே!

பாஷ்: நானும் என்ன, காலே அரைக்கால் அங்குலத்துக்குத்தானே சிவப்புக் கோடு இழுத்திருக்கிறேன்...? நீர் அதற்குப் போய்ப் பிரமாதப்படுத்துகிறீரே!

துரை: உங்களுக்கென்ன ஸார்! சுலபமாகச் சொல்லி விட்டீர்கள்.. அந்த அக்கவுண்டண்ட் புண்ணியவான் இருக்கிறாரே, அவர் மூணு நாள் சிவப்புக் கோடு இருந்தால் ஒரு நாள் லீவை 'கட்' பண்ணிடுறார்...இந்த மாசத்திலே இது எனக்கு ஆறாவது கோடு!

பாஷ்: ஆமாம், நானும் கேட்கணும்னு தான் இருந்தேன்... நீர் ஏன் இப்போதெல்லாம் அடிக்கடி ஆபீசுக்கு லேட்டா வரீர்?

துரை: நீங்க என்னைக் கேட்க வேண்டிய கேள்வி இல்லை சார் இது!

பாஷ் (கோபத்துடன்): என்னது! என்ன சொன்னீர்?

துரை: அதாவது சார், அரபு நாடுகளின் அதிபர்களை நீங்கள் கேள்வி கேட்கணும் என்று தான் சொல்ல வந்தேன்!

பாஷ்: என்னய்யா உளறுகிறீர்?

துரை: எண்ணெய்ப் பிரச்னை என்னையும் பிடித்தாட்டுகிறது சார்..! வீட்டிலே சமைக்க காஸ் இல்லை; ஸ்டவ்வுக்குக் கெரஸின் கிடைக்கல்லே. 'கரி அடுப்பிலே சமைக்கப் போடறதுக்குள்ளே கால், கையெல்லாம் கழண்டு போயிடறது'ன்னு என் மனைவி கம்ப்ளெய்ண்ட் பண்ணறா...அது போகட்டும் என்றால், பஸ் ஸ்டாண்டுக்கு வந்தால் பஸ் சுலபத்திலே கிடைக்கிறதில்லே. கிடைச்சாலும் அந்தக் கும்பலிலே நசுங்கி, பிதுங்கி, கரைந்துதான் போக வேண்டியிருக்கு. டாக்ஸியிலே வரலாம்னா, நீங்க கொடுக்கிற சம்பளத்திலே கட்டுப்படியாகல்லே!...

பாஷ்: ஓய்! கடைசியிலே ஆபீஸ் மேலேயே பழியைப் போட்டுட்டீரே! இன்னும் கொஞ்ச நாழியானால் சம்பள உயர்வு கேட்டுக் கொடி கூடப் பிடிப்பீர் போலிருக்கிறது!

துரை: பின்னே என்ன சார்! உங்களுக்கென்ன? வீட்டுக்கு ஆபீஸ் கார் வருது; அதில் ஏறிண்டு 'டாண்'ணு ஒன்பதே காலுக்கு ஆபீசுக்கு வந்து எல்லோருக்கும் சிவப்புக் கோடு இழுத்து விடுகிறீர்கள்!

பாஷ்: வயிற்றெரிச்சலைக் கிளறுறீர் ஐயா! இனிமேல் ஆபீஸ் வேலைகளுக்கு மட்டும்தான் ஆபீஸ் காரைப் பயன்படுத்தணும்னு டைரக்டர் ஆர்டர் போட்டுட்டார்... இனிமேல் வீட்டுக்குக் கார் வராது. நானும் உம்மைப் போலப் பஸ்ஸிலேதான் வரவேண்டும்!

துரை: வெரி குட்! அப்போதான் ஸார் உங்களுக்கு என் கஷ்டம் தெரியும்!

பாஷ்: ஏன்யா துரைசாமி! நீர் என்னவோ 'அதைச் செய்துடுவேன், இதைப் புரட்டிடுவேன்'னு மார் தட்டிப்பீரே!... இந்த எண்ணெய்ப் பிரச்னைக்கு ஏதாவது செய்வதுதானே?

துரை: என்ன செய்யச் சொல்கிறீர்கள்? உங்களுக்கு வாரா வாரம் பத்து லிட்டர் கெரஸின் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா?

பாஷ்: அதெல்லாம் இல்லே ஐயா! பெட்ரோல், கெரஸின் இவற்றுக்குப் பதிலாக வேறு ஏதாவது கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குவதுதானே? உமக்கும் பெயரும் பணமும் எக்கச்சக்கமாகக் கிடைக்குமே!

துரை: நல்ல ஐடியா கொடுத்தீர்கள் சார்! ரொம்பத் தாங்க்ஸ்! நானும் இம்மாதிரி ஆராய்ச்சியில் இறங்கலாமா என்றுதான் நினைத்தேன்... ஆனால் உங்களைப் போல், எனக்கு ஊக்கம் தந்து, உற்சாகமூட்ட யாரும் முன்வரவில்லை. அப்படி நான் ஏதாவது புது எரிபொருள் கண்டுபிடித்தேன் என்றால் அதற்கு 'பாஷ்யம்' என்று உங்கள் பெயரைத்தான் வைப்பேன்!

பாஷ் (சந்தோஷத்தை அடக்கிக்கொண்டு) ஹிஹி... என் பெயர் எதற்காக ஐயா?

துரை: ஒருவேளை அந்த எரிபொருள் சரியாக எரியவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள், 'நாசமாய்ப் போன பாஷ்யம் சுத்தத் தண்டம்!' என்று உங்கள் மண்டையைத்தான் போட்டு உருட்டுவார்கள் எல்லோரும்! அதனாலே இந்த ஆபீஸிலே நிறையப் பேர் சந்தோஷப்படுவார்களே! அதற்காகத்தான் சொல்கிறேன்!

(துரைசாமி நகர்கிறார். பாஷ்யம் பற்களை நறநறக்கிறார், ஆத்திரத்துடன்.)

காட்சி 2

(துரைசாமி தமது வீட்டின் பின்புறத்தில் ஓர் அறையில் 'ஆராய்ச்சி'யில் ஈடுபட்டிருக்கிறார். ஓர் அடுப்பின் மீது பெரிய பித்தளைப் பாத்திரத்தில் கறுப்பு நிறத்தில் ஏதோ திரவம் கொதித்துக்கொண்டிருக்கிறது. துரைசாமி தமது மணிக்கட்டிலுள்ள கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அவரைச் சுற்றிலும் பெரியதும் சிறியதுமாகக் கண்ணாடிப் புட்டிகள், இலைகள், தழைகள், ஒரு கட்டு அகத்திக் கீரை, பக்கெட்டுகள் நிறையத் தண்ணீர் — இத்தனையும் காணப்படுகின்றன. மனைவி பார்வதம் உள்ளே நுழைகிறாள்.)

பார்வதம்: என்ன, காப்பி ஆறிப் போய்க் கொண்டிருக்கிறது. மசமசவென்று உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே!...காப்பியைச் சாப்பிட்டு விட்டு மற்ற ஜோலிகளைக் கவனித்தால்தானே எட்டே முக்காலுக்காவது ஆபீசுக்குப் புறப்பட முடியும்!

துரை: உஸ்! என்னைத் தொந்தரவு பண்ணாதே!... என் ஆராய்ச்சியில் குறுக்கிடாதே! போ அந்தண்டை!

பார்: ஆமாம், பெரிய ஆராய்ச்சி! அதுவும் அகத்திக் கீரையை வைத்துக் கொண்டு! துவாதசியன்றைக்கு இப்படி அகத்திக் கீரை கூட்டுப் பண்ணினாலும் சௌகரியமாக இருக்கும்!

துரை: அடி போடி மண்டுகமே! உனக்குத் துவாதசியும் பாரணையும்தான் தெரியும். வேறென்ன மண்ணாங்கட்டி தெரியும்! பார் முழுதும் பரவப் போகிறதடி உன் கணவனின் பெயர்! பெருமைப்பட்டுக்கொள்!... நெஞ்சை இப்போது முதலே நிமிர்த்தி வைத்துக்கொள் — மாலை போட்டுக் கொள்ளத் தயாரா! எனக்கு மாலை போட வருகிறவர்கள் உனக்கும் சேர்த்துப் போடுவார்கள்! பார்த்துக் கொண்டே இரு!

பார்: என்னுதான் எண்ணெய்க்குக் காயணும் என்பார்கள்... நீங்கள் எதற்கு இது மாதிரி ஆராய்ச்சியிலெல்லாம் இறங்க வேண்டும்!

துரை: பொறுத்திருந்து பாரடி! உன் புருஷனின் மகிமை உனக்குப் புலப்படும்... இதோ கொதிக்கிறதே அடுப்பிலே— அது என்னவென்று நினைக்கிறாய்?


பார்: என் வயிறு!... ஏன் இப்படிக் கிணற்றுத் தண்ணீரைக் குடம் குடமாய் இறைத்து ஆராய்ச்சி என்று 'வேஸ்ட்' பண்ணுகிறீர்கள்?

துரை: அது தண்ணீரில்லேடி! அபூர்வ மூலிகைக் கலவை! எண்ணெய்க்குப் பதிலாக நான் உருவாக்கும் அபார எரிபொருளுக்கான மூலப் பொருள்!

பார்: ஆமாம், இப்படித் திரவமாக எரிபொருள் கண்டுபிடிப்பதற்குப் பதிலாகத் திட வஸ்துவாக எதையாவது கண்டுபிடிப்பது தானே?

துரை: நீ என்னடி சொல்லவறே?

பார்: அதாவது தண்ணீருக்குப் பதிலா, களிமண் — கிளிமண் என்று எதையாவது வச்சுண்டு ஆராய்ச்சி பண்ணலாமே என்று சொன்னேன்!





"ஸ்ட்ராங் காப்பி அவருக்கு. லைட் காப்பி எனக்கு."

துரை: அதனாலே என்ன நன்மை என்கிறாய்?

பார்: உங்க ஆராய்ச்சிக்கு ஏகப்பட்ட மூலப் பொருள் உங்க மண்டையிலிருந்தே கிடைக்குமே! அதுதான் நன்மை!

(சொல்லிவிட்டு, சட்டென்று அப்பால் போகிறாள். தமது கோபத்தை அடுப்பை விசிறுவதில் காட்டுகிறார் துரைசாமி.)

காட்சி 3

(ஆபீஸில் துரைசாமி ஏதோ கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார். மானேஜர் பாஸ்யம் எதிரில் வந்து நிற்கிறார்.)

பாஸ்: என்னய்யா! உம்ம வேலையெல்லாம் எந்த மட்டில் இருக்கிறது!

துரை: கிட்டத்தட்ட முடிந்து விட்டது சார்... ஆனால் அகத்திக் கீரை பயன்படாது... முருங்கைக் கீரையோ, முள்ளங்கிக் கீரையோ தான் சரிப்பட்டு வரும்!

பாஸ்: என்னய்யா இது! ஆபீஸ் வேலையைப் பற்றிக் கேட்டால் என்னவோ உளறுகிறீர்! நீர் ஸ்டோர் டயத்திலே கீரைக் கடை நடத்துகிறீரா என்ன?

துரை (சமாளித்தவராக): ஹிஹி...நீங்கள் என் ஆராய்ச்சி பற்றிக் கேட்கிறீர்களோ என்று தப்பாக நினைத்து விட்டேன்... எக்ஸ்க்யூஸ் மீ!

பாஸ்: அடடே! நான்கூட அதை மறந்தே போய்விட்டேன் ஐயா! என்ன, ஏதாவது கண்டுபிடித்தீரா?

துரை: இன்னும் பத்தே நாட்கள்தான் சார்... நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது!

பாஸ்: அப்படியா?

துரை: ஆமாம் சார்! (ஒரு நிமிஷத் தயக்கத்துக்குப் பிறகு) சார், ஒரு சின்ன உதவி... நீங்கதான் பெரிய மனசு பண்ணி...

பாஸ்: சொல்லும்! என்ன வேண்டும், உமக்கு?

துரை: நம்ம ஆபீஸ் கார்!

பாஸ் (திடுக்கிட்டு): காரா? அது எதற்கு?

துரை: புதுசாக் கண்டு பிடிக்கிறேனே ஒரு எரிபொருள் — அதைப் பரிசோதித்துப் பார்க்கத்தான் ஒரு கார் தேவைப்படுகிறது!... என்னை நம்பி வேறு யார் சார் கார் கொடுப்பார்கள்?... அதனால்தான் உங்களைக் கேட்கிறேன்...

பாஸ்: சரி, தருகிறேன்... டைரக்டர்கூட அடுத்த வாரம் ஊரில் இருக்க மாட்டார். நீர் காரை எடுத்துக் கொண்டு போய் விட்டுப் பத்திரமாக....

துரை: திருப்பித் தந்து விடுகிறேன் சார்... கவலைப்படாதீர்கள்!

பாஸ் (சந்தேகத்துடன்): ஓய் துரைசாமி! காரை ஜாக்கிரதையாகப் பார்த்துப்பீர் அல்லவா — சேதம் கீதம் ஏற்படாதபடிக்கு?

துரை: விடுங்கள் சார் கவலையை!... அப்படி என் எரிபொருளாலே காருக்குக் கெடுதல் ஏதாவது நேர்ந்து விட்டதென்றாலும் சமாளித்துக் கொள்ள வழி இருக்கிறது!

பாஸ்: எப்படி?

துரை: நம்ம டிரைவர் முனிரத்தினத்துக் கிட்டே சொல்லி, காரை லேசா நம்ம ஆபீஸ் காம்பவுண்டுச் சுவரிலே நாலு தரம் முட்டச் சொல்றேன். தற்செயலா நிகழ்ந்த விபத்துன்னு சொல்லி, டைரக்டரை நம்ப வைத்து விடலாம்!

பாஸ்: ஓய்! நல்ல கிரிமினல் மூளையா உமக்கு!

துரை: எல்லாம் உங்களோட பழகிப் பழகி வந்த மூளைதான் சார் இது!

(மானேஜர் துரைசாமியை முறைத்துப் பார்த்துவிட்டு அப்பால் செல்கிறார்.)

காட்சி 4

(துரைசாமி தம் வீட்டு ஹாலில் உட்கார்ந்து ஏதோ பெரிதாக 'லிஸ்ட்' போட்டுக் கொண்டிருக்கிறார். அருகில் மனைவி பார்வதம், குழந்தைகள் சுபத்ராவும் கோபியும் இருக்கிறார்கள்.)

துரை: உம், பார்வதம்! உனக்கு என்னென்ன வேண்டும் சொல்லு! ஒரு வைர நெக்லேஸ், சிவப்புக்கல் வளையல், ஒரு ஜோடி- போதுமா?

பார்: என்ன லிஸ்ட் இது?

துரை: பெட்ரோலுக்குப் பதிலாக முருங்கை பிளஸ் முள்ளங்கி பிளஸ் அவரைக் கீரையைப் போட்டுக் கொதிக்க வைத்துப் புதுசாக ஓர் எரிபொருள் கண்டுபிடித்திருக்கிறேன் அல்லவா? அதை எங்க ஆபீஸ் காரிலே ஊற்றி, வண்டி எப்படி ஓடுகிறதென்று பரிசோதிக்கச் சொல்லி யிருக்கிறேன், டிரைவர் முனிரத்தினத்துக்கிட்டே ...... அநேகமாக ஸக்ஸஸ் ஆயிடும்... அதனாலே...

பார்: அதனாலே என்ன?



அஸல் சிங்கார் (Shingar) கும்கும்
ஜாடிக்கும் போலிக்கும் உள்ள வித்தியாசம்.

உங்களுக்குத் தெரியுமா?

எளிதில் கண்டுகொள்ளலாம்—ஒவ்வொரு ஜாடியிலும்
இதுபோல் சிங்கார் (Shingar) என்ற பெயர் உள்ளது.



● அஸல் சிங்கார் குமகும் உங்கள் முகத்திற்குக் கெடுதல் செய்யாது. எரிச்சலூட்டாது: ● அதில் அடங்கிய பொருள் ஒவ்வொன்றும், மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகளால் அங்கீகரிக்கப் பட்டது. ● உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் கண்டிப்பான தர நிர்ணயக் கட்டுப்பாடு—தீவிரமான விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது. ● எந்த உடைக்கும், எந்த உளகிலக்கும் பொருந்தும், சொக்கும் அழகுள்ள பல விதமான சாயல்கள். சிங்கார் கும்கும்—பாரத நாட்டின் பொழுகு திலகம்.

பாரமவுண்ட் ப்ராடக்ட்ஸ்,
பம்பாய்-400 004

Shingar
கும்கும்

everest/732/SP/tm



Shilpi HPMA 36a/73 Tam
வலிமிகுந்த தலைவலிக்கு
மிக விரைந்த விடுதலை!
ஒரே ஒரு
அவேதன்®
ப்ளஸ்
SQUIBB
SARABHAI CHEMICALS PVT.LTD.
® இ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். எஸ்.வி.பி.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.
சக்தி வாய்ந்தது,
விரைந்து
செயல்படுவது
அவேதன் ப்ளஸ்

துரை: இந்தப் புதிய எரிபொருள் கண்டு பிடிப்புக்காக எனக்கு நிறையப் பணம் கிடைக்குமே!... அதில் உனக்கு என்ன தேவையோ வாங்கித் தரலாம் என்றுதான்...

சுபத்ரா: அப்பா! எனக்கு ஒரு டஜன் கலர் பாக்ஸ்!

கோபி: எனக்கு ஒரு பைனாகுலர், ஒரு கடிகாரம்!

துரை: பேஷா வாங்கித் தரேன்!

(வாசல் பக்கம் நிழலாடுகிறது.)

துரை: பார்வதம்! யார் அங்கே பாரு!

(பார்வதம் எட்டிப் பார்த்துவிட்டு வருகிறாள்.)

பார்: யாரோ பிச்சைக்காரன் போல் இருக்கிறது!

(சொல்லி முடித்ததுடன், டிரைவர் முனி ரத்தினம் கோபத்துடன் வேகமாக உள்ளே நுழைகிறான்.)

முனி: பிச்சைக்காரன் இல்லே சார்!... நான்தான் டிரைவர் முனி! நல்ல வேலே பண்ணே சார் நீ!

துரை: ஏம்பா? என்ன ஆச்சு உனக்கு? இதென்ன தலைவிரிகோலமா வந்திருக்கே?

முனி: பெட்ரோலுக்குப் பதிலா இன்னாவோ கண்ணறாவியைக் கண்டு பிடிச்சிருக்கேன்னு சொல்லி, என்கிட்டே கொடுத்தியே சார் நீ?.. அதை ஊத்தி வண்டியை ஸ்டார்ட் பண்ணினேன்... படா பேஜாராப் போச்சு சார்!

துரை: ஏன், வண்டி ஓடல்லியா?

முனி: அ(த்)தை ஏன் கேக்கறே? எஞ்சின் அப்படியே பார்ட் பார்ட்டாத் தெறிச்சு விழுந்துடுச்சு சார்!

துரை: அதனாலென்ன? வண்டிக்கு ஆக்ஸிடெண்ட் ஆனமாதிரி நம்ம ஆபீஸ் காம்பவுண்டுச் சுவத்திலே நாலு இடி இடிக்க வேண்டியதுதானே? நான்தான் உன்கிட்டே சொன்னேனே?

முனி: அதையும் செய்தேன் சார்! இன்னா ஆச்சு தெரியுமா? காம்பவுண்டுச் சுவரு எந்தக் கண்டிராக்டர் தொரை கட்டினதோ 'தொப தொப'ன்னு வுளுந்தே பூட்டுது சார்!... நம்ம மானேஜர் பாஸ்யம் இன்னாடான்னு கன்னா பின்னான்னு திட்டாரு... நல்ல பேஜார்லே இழுத்து விட்டுட்டே சார் நீ!... டைரக்டர் கையிலே சொல்லி உனக்குச் சீட்டைக் கிளிச்சுடணும்னு பாஸ்யம் கத்திக்கிட்டிருக்காரு!

துரை: ஆ! (அப்படியே மயங்கிக் கீழே சாய்கிறார்.)

முனி (பார்வதத்திடம்): இன்னாம்மா பார்த்துக்கிட்டு நிக்கிறீங்க? ஓடிப் போயி ஒரு சொம்புத் தண்ணி கொணாந்து மூஞ்சி மேலே தெளியுங்க... மூர்ச்சை தெளிஞ்சுடும்!

பார்: அது முடியாதப்பா!

முனி (திகைத்து): முடியாதா?... இன்னாம்மா சொல்றீங்க நீங்க?

பார்: தண்ணீரை வச்சுண்டு ஆராய்ச்சி பண்ணறதாச் சொல்லிச்சொல்லிக் கிணத்துத் தண்ணி பூராவையுமே இறைச்சுட்டாரப்பா! கிணத்திலே இப்போ ஒரு சொட்டுத் தண்ணி கூடக் கிடையாது! கார்ப்பரேஷன் குழாயிலேயும் தண்ணி வரல்லே...ஐயோ, இப்ப நான் என்ன பண்ணுவேன்!...

(இப்போது டிரைவர் முனிரத்தினம் மயங்கி விழுகிறான்.)

வட்ட மேஜை

தமிழ்நாட்டில் தற்காலத்தில் மதமாற்றம் அதிகமாக நடைபெறுகிறது. சில நாட்களுக்கு முன் கூறை நாட்டில் ஒரு கிறித்துவ அன்பரின் குழந்தைக்குப் பெயர்சூட்டு விழா நடைபெற்றது. சிதம்பரத்திலிருந்து மத போதகர் வந்திருந்தார். அவர் செய்த விரிவுரை உண்மையில் மதத்தின் சிறப்பினை எடுத்துரைப்பதாக இல்லை; வந்த அன்பர்களில் பலர் இந்துக்கள். அவர், ''ஏகநாதர் ஒருவரே உயர்ந்த கடவுள். பிறர் எல்லாம் (இந்து சமயக் கடவுள்கள்) பல மனைவிகளை உடையவர்கள்; பல குழந்தைகளை உடையவர்கள். ஏகநாதர் ஒருவரே ரட்சிப்பை வழங்கக் கூடியவர். பிற பிற கடவுள்கள் எல்லாம்அசுரரையும் தேவரையும் கொன்றவர்'' என்று உண்மைகளைத் திரித்து ஏதேதோ கூறினார். ''என் தந்தை இறக்கும் தறுவாயில் எமன் வந்தான்; மிகவும் துன்பப்படுத்தினான்; 'ராமா, ராமா' என்று அவர் கூறியது துன்பத்தையே தந்தது; ஏகவே என்று நீங்கள் சொல்வீர்களானால் அது இதயபூர்வமாகச் சொல்வதாகும்; அவரே ரட்சிக்கவல்லார்'' என்று இழித்தும் பழித்தும் பலவாய்ப் பகன்றார்.

எனது நண்பர்கள் சிலர் இதனால் மிகவும் மனம் வருந்திய போதிலும் அழைப்பு அனுப்பிய தம் நண்பர் (கிறித்துவ அன்பர்) பொருட்டு வாளாவிருக்க நேர்ந்தது.

மதபோதகருக்கான பயிற்சி பெற்று, பிறருக்கு நல்லதைச் செய்ய வேண்டிய இவர்கள் இப்படி மற்ற மதங்களை, கடவுளரைக் குறைத்து, இகழ்ந்து பேசலாமா?

கொரநாடு
மாயூரம், 12—2—74 — எஸ். கிருஷ்ணமூர்த்தி


நாம் திருக்கோயில்களை அரசுடைமையாக்கி, தேசியமயப்படுத்த வேண்டும் என்று வேலூரில் பேசியதாக எண்ணி, அது பற்றித் ''தமிழ்நாட்டிலே...'' பகுதியில் எழுதியிருப்பதைப் படித்தோம். (கல்கி, 17-2-74 இதழ்.) அவ்விதம் நாம் கூறவில்லை.

அது பற்றி நம்முடைய கருத்து:

திருக்கோயில்களை, இந்து சமயத்தைச் சேர்ந்த மக்கள் தாங்களே ஆட்சி செய்து கொள்ளக்கூடிய பொதுமையான ஏற்பாடு தேவை — என்பதேயாம். தெளிவாகச் சொன்னால் சமயச் சார்பற்ற அரசின் தலையீட்டையும், தனி மனித உரிமை உணர்வுகளையும் தவிர்க்கவே இந்த ஆலோசனை சொல்லப் பெற்றது.. அரசுடைமையாக்குவது அல்லது தேசியமயப்படுத்துவது என்பது நமது கருத்து அல்ல.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

குன்றக்குடி
18—2—74 — குன்றக்குடி அடிகளார்



உங்களுக்கென ஒரு சொந்த வீடு

''வீடு பெற நில்!'' என்ற பழமொழி மோட்சம் பெறுவதற்கான நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும். லோகாயத வாழ்விலும், உணவு, உடை ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக முக்கிய இடம் பெறுவது 'உறையுள்'—அதாவது வீடு—ஆகும்.

வீடு கட்டுவது என்பது விளையாட்டு விவகாரமல்ல. அதற்குப் பணம் தேவை. தேவையான பணத்தை எந்தக் காலத்தில் சேமிப்பது என மலைக்க வேண்டாம். ''சொந்தத்தில் ஒரு வீடு'' என்ற கனவை நனவாக்க, அநேக பாலிசிதாரர்களுக்கு ஆயுள் இன்சூரன்சு உதவியிருக்கிறது. எல்.ஐ.சி யின் ''உங்களுக்கென ஒரு சொந்த வீடு'' **(OWN YOUR HOME)** திட்டம் பற்றிய விவரங்களறிய இன்றே உங்களருகிலுள்ள எல்.ஐ.சி. அலுவலகத்தை நாடுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை

EP LIC 10 73

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி



பதினேழாம் அத்தியாயம்

விடுதலை

வியர்க்க விறுவிறுக்க மூச்சு வாங்கிக் கொண்டு வந்த சத்ருக்னனின் முகத்தை மூவிரண்டு கண்கள் இமையையும் அசைக்காமல் ஆவலுடன் உற்று நோக்கின. ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கு ஒரு கண நேரம்கூடக் கொடுக்காமல், ''சத்ருக்னா! யாருக்கு என்ன செய்தி கொண்டு வந்தாய்?'' என்று தேவி கேட்டாள்.

''தாயே! இங்குள்ள மூன்று பேருக்கும் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறி, மூவருக்கும் வணக்கம் செலுத்தினான் சத்ருக்னன். பின்னர், ''தேவி! மகேந்திர பல்லவரின் முதல் செய்தி தங்களுக்குத்தான்! வீர பத்தினி என்னும் பெயருக்கு இதுகாறும் தாங்கள் உரிமை பெற்றது போல் வீரத் தாய் என்னும் பெயருக்கும் உரிமை பெறவேண்டிய காலம் இப்போது வந்து விட்டது என்று தங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். எட்டு மாதங்களுக்கு முன்பு அகமும் முகமும் மலர்ந்து பதியைப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தது போல் இன்று தங்களுடைய அருமைப் புதல்வரை அனுப்பி வைக்க வேண்டிய காலம் வந்து விட்டதாகத் தெரிவிக்கச் சொன்னார்!'' என்றான் சத்ருக்னன்.

விவரிக்க முடியாத உணர்ச்சி வெள்ளம் உள்ளத்தில் பொங்க, தோள்கள் பூரித்து வீங்க, தேகமெல்லாம் சிலிர்க்க, மாமல்ல நரசிம்மர்



அன்னையின் அருகில் பாய்ந்து சென்று அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார்.

''அம்மா! சக்கரவர்த்தியின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள் அல்லவா? அவர் எனக்கு அளித்த விடுதலையை நீங்களும் மனமுவந்து அளிப்பீர்கள் அல்லவா?'' என்று கேட்டார் மாமல்லர்.

''பொறு குழந்தாய்! செய்தியை முழுதும் கேட்போம்!'' என்றாள் தேவி.

மாமல்லர் உடனே திரும்பி, ''சத்ருக்னா! எனக்கு என்ன செய்தி கொண்டு வந்தாய்?'' என்று கேட்டார்.

''நல்ல செய்திதான் பிரபு! தங்கள் மனத்துக்கு உகந்த செய்திதான். நன்றி கொன்ற பாதகனான கங்க நாட்டு மன்னன் துர்விநீதன் சளுக்கப் புலிகேசிக்கு முன்னால் காஞ்சி அடைந்து விடவேண்டுமென்ற துராசையினால் விரைந்து வந்து கொண்டிருக்கிறான். பல்லவ குலத்துக்குக் கங்கர் குலம் பட்டிருக்கும் நன்றிக் கடனையெல்லாம் மறந்து விட்டு இந்தப் படு துரோகமான காரியத்தில் அவன் இறங்கியிருக்கிறான். அந்தத் துர்விநீதனுக்குத் தக்க தண்டனை அளிக்கும் பொறுப்பைத் தங்களுக்குச் சக்கரவர்த்தி அளித்திருக்கிறார். கழுக்குன்றத்தில் உள்ள படையுடன் தாங்கள் புறப்பட்டுச் சென்று, துர்விநீதன் காஞ்சியை அணுகுவதற்கு முன்னால் அவனை முறியடிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்!''

மாமல்லர் ஆவேசம் வந்தவரைப் போல் சத்ருக்னனிடம் ஓடிச் சென்று அவனைத் தழுவிக் கொண்டு, ''சத்ருக்னா! இவையெல்லாம் உண்மைதானே? நான் கனவு காணவில்லையே? நிஜமாகத்தானே சக்கரவர்த்தி என்னைக் கங்க நாட்டுப் படையுடன் போராடுவதற்குப் போகச் சொல்லியிருக்கிறார்?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''ஆம், பிரபு! இதெல்லாம் கனவல்ல உண்மைதான். இதோ 'விடைவேல் விடுகு'ம் கொடுத்தனுப்பியிருக்கிறார்'' என்று சத்ருக்னன் ஓலை ஒன்றை அவரிடம் எடுத்துக் கொடுத்தான்.

பல்லவ குலத்தின் சின்னங்களாகிய விடை (ரிஷபம்)யும் வேலும் பொறித்த அந்த ஓலையை மாமல்லர் படிக்கும் போது அவர் முகத்தில் உற்சாகம் பொங்கிற்று. படித்து முடிக்கும் சமயத்தில் அவருடைய புருவங்கள் சிறிது நெரிந்தன. நிமிர்ந்து பார்த்து, ''சத்ருக்னா! உன்னிடம் ஏதோ வாய்மொழியாகச் செய்தி அனுப்பியிருப்பதாகச் சக்கரவர்த்தி எழுதியிருக்கிறாரே! அது என்ன?'' என்று கேட்டார்.

''ஆம், பிரபு! எத்தனையோ சாம்ராஜ்ய கவலைகளுக்கிடையே பல்லவ நாட்டின் கலைச் செல்வத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் சக்கரவர்த்தியால் மறக்க முடியவில்லை. ஆயனச் சிற்பியாரும் அவர் மகளும் காஞ்சிக்கு வந்து விட்டார்களா என்று என்னைக் கேட்டார். 'இல்லை' என்று நான் தெரிவித்தேன். தாங்கள் போர்க்களத்துக்குக் கிளம்புவதற்கு முன்னால் நேரில் ஆயனர் வீட்டுக்குச் சென்று அவர்களைக் காஞ்சிக்கு அனுப்பி விட்டுப் போக வேண்டும் என்று தெரிவிக்கச் சொன்னார்.''

மாமல்லரின் மகிழ்ச்சி பூரணமாயிற்று. யுத்தத்துக்குப் போவதற்கு முன்னால் சிவகாமியைப் பார்த்து விடை பெற்றுக் கொண்டு போக அவர் விரும்பினார். இப்போது தயக்கமின்றி ஆயனர் வீட்டுக்குப் போகச் சௌகரியம் ஏற்பட்டுவிட்டது.

சிவகாமியின் விஷயத்தில் தம் மனநிலையை அறிந்துதான் சக்கரவர்த்தி அவ்விதம் செய்தி அனுப்பியிருப்பாரோ என்று ஒரு கணம் அவருக்குத் தோன்றியது. ஆனால், அவருக்குத் தம் மனநிலை எப்படித் தெரிந்திருக்க முடியும்? ஆ! தம் அருமைத் தோழர் பரஞ்சோதிதான் சொல்லி அனுப்பியிருக்கவேண்டும். இந்த எண்ணத்தினால் பரஞ்சோதியின் மேல் அவருக்கிருந்த சிநேக

உணர்ச்சி பன்மடங்கு பெருக, அருகே இருந்த அவருடைய கரத்தைப் பற்றித் தம் நன்றியைத் தெரிவிப்பதற்கு அறிகுறியாக அழுத்திப் பிடித்தார்.

பரஞ்சோதியோ, மனக் குழப்பத்துடன் சத்ருக்னனைப் பார்த்து, ''ஐயா! எனக்கும் ஏதோ செய்தி இருப்பதாகச் சொன்னீரே? அது என்ன?'' என்று கேட்டார்.

'' லக்ஷ்மணன் இராமனைப் பின் தொடர்ந்தது போல் மாமல்லரைத் தொடர்ந்து உங்களைப் போகும்படி சொன்னார். காஞ்சிக்குச் சக்கரவர்த்தியே சீக்கிரத்தில் வந்து கோட்டைப் பாதுகாப்பைக் கவனித்துக் கொள்வதாகச் சொன்னார்.''

''ஆஹா! என் அருமைத் தோழரும் என்னுடன் வருகிறாரா?'' என்று மாமல்லர் மேலும் பொங்கிய மகிழ்ச்சியுடன் பரஞ்சோதியைத் தழுவிக் கொண்டார்.

பிறகு, அன்னையை நெருங்கி அவளுடைய பாதங்களில் நமஸ்கரித்து, ''அம்மா ! விடை கொடுங்கள் '' என்றார்.

பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி கண்களில் அப்போது கண்ணீர் துளித்தது. ''குழந்தாய்! வெற்றி மாலை சூடி க்ஷேமமாய்த் திரும்பி வா!'' என்றாள்.

மாமல்லர் எழுந்து நின்றார். ஏதோ சொல்ல, எண்ணியவர் சிறிது தயங்கினார்.

'' மாமல்லா ! இன்னும் ஏதாவது சொல்ல வேணுமா ?'' என்று தேவி கேட்டாள்.

''ஆம், அம்மா! ஆயனரையும் சிவகாமியையும் பற்றித் தந்தை சொல்லியனுப்பியதைக் கேட்டீர்கள் அல்லவா?''


''கேட்டேன், நரசிம்மா! அதைப் பற்றி என்ன?''

''அவர்களைக் காஞ்சிக்கு அனுப்பி விட்டு நான் போர்க்களம் போகிறேன், அம்மா!''

''அப்படியே செய், குழந்தாய்!''

''சிவகாமி இங்கே இருக்கும்போது அவளைத் தாங்கள் மருமகளைப் போல் பார்த்துக் கொள்ள வேண்டும்!''

''மருமகளைப் போலவா? முடியவே முடியாது. அந்தத் தாயில்லாப் பெண்ணை என் சொந்த மகளைப்



போலவே பார்த்துக் கொள்ளுகிறேன், மாமல்லா!''

இதைக் கேட்ட மாமல்லர் புன்னகையுடன் ''இல்லையம்மா! மருமகளைப் போலவே பார்த்துக் கொண்டால் போதும்!'' என்றார்.

புவன மகாதேவியின் புருவங்கள் அப்போது நெரிந்தன. ''ஏன் அப்படிச் சொல்கிறாய், குமாரா! மகளைப் போல் பார்த்துக் கொள்கிறேன் என்று நான் சொன்னதை ஏன் மறுக்கிறாய்? ஒரு வேளை...'' என்று கூறிவிட்டுத் தேவி பரஞ்சோதியை நோக்கினாள். உடனே, அவளுடைய முகத்தில் மலர்ச்சி காணப்பட்டது. ''ஓஹோ! புரிந்தது! ஆயனரிடம் சிற்பம் கற்க வந்த பரஞ்சோதி ஆயனரின் மிகச் சிறந்த சிற்ப வடிவத்தையே கொள்ளை கொள்ளப் பார்க்கிறானா?'' என்றாள்.

மாமல்லர், பரஞ்சோதி இருவருடைய முகங்களும் அப்போது பெரிதும் வேதனையைக் காட்டின.

''இருக்கட்டும், அம்மா! தாமதிக்க நேரம் இல்லை. நாங்கள் புறப்பட வேண்டும். விடை கொடுங்கள்'' என்றார் மாமல்லர்.

*　　*　　*

சத்ருக்னன் காஞ்சிக்கு வந்து இரண்டு நாழிகைக்குள்ளே, குமார சக்கரவர்த்தியும், தளபதி பரஞ்சோதியும் காஞ்சிக் கோட்டையின் வடக்கு வாசல் வழியாகப் புறப்பட்டார்கள். திருக்கழுக்குன்றம் சென்று அங்கிருந்த தற்காப்புப் படைகளை மறுநாள் அதிகாலையில் புறப்பட ஆயத்தமாகும்படி கட்டளையிட்டார்கள். அன்று மாலையே ஆயனரின் வீட்டுக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்துவிட வேண்டும் என்றும், மறுநாள் அதிகாலையில் சைனியத்துடன் தாங்களும் கிளம்பி விட வேண்டும் என்றும் உத்தேசித்து நரசிம்மரும் பரஞ்சோதியும் புரவிகள் மீதேறி, ஒரு சிறு குதிரைப் படை தங்களைப் பின்தொடர விரைந்து சென்று ஆயனர் வீட்டை அடைந்தார்கள்.

போகும்போது சிவகாமியிடம் இப்படி இப்படிப் பேச வேண்டும், இன்னின்ன சொல்ல வேண்டும் என்பதாக மாமல்லர் எவ்வளவோ மனக் கோட்டைகள் கட்டிக் கொண்டு போனார். ஆனால், ஆயனரின் அரண்ய வீட்டை அடைந்தபோது, அவருடைய ஆகாசக் கோட்டைகள் எல்லாம் சிதறி விழுந்தன. வீட்டின் முன் கதவைப் பெரிய பூட்டுப் போட்டுப் பூட்டியிருந்தது. வீட்டுக்குள்ளேயும் வெளியிலும் பூரண நிசப்தம் குடிகொண்டிருந்தது!

பதினெட்டாம் அத்தியாயம்

பிரயாணம்

கார்த்திகை மாதத்தில் ஒருநாள் மாலை நேரத்தில் காஞ்சியிலிருந்து சிதம்பரம் போகும் சாலையில் கூண்டு இல்லாத இரட்டை மாட்டு வண்டி ஒன்று போய்க் கொண்டிருந்தது. அதில் சிவகாமியும் அவளுடைய அத்தையும் உட்கார்ந்திருந்தார்கள்.

வண்டிக்குப் பின்னால் சற்றுத் தூரத்தில் ரதி துள்ளி விளையாடிக் கொண்டும் ஆங்காங்கே சாலைகளுக்குப் பக்கங்களிலே முளைத்திருந்த புல்லை மேய்ந்து கொண்டும் வந்தது.

சுகப்பிரம்ம ரிஷி ஒவ்வொரு சமயம் ரதியின் முதுகின் மேல் உட்கார்ந்தும், சில சமயம் சிவகாமியின் தோளின்மேல் உட்கார்ந்தும், சில சமயம் வண்டிக்கு மேலாகப் பறந்தும் ஆனந்தமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

பின்னால் இன்னும் சற்றுத் தூரத்தில் புத்த பிக்ஷுவும் ஆயனச் சிற்பியாரும் பேசிக்கொண்டு நடந்து வந்தார்கள்.


*　　*　　*

அந்த வருஷம் ஐப்பசி மாதத்திலேயே மழை பிடித்துக் கொண்டு பதினைந்து நாட்கள் வரையில் விடாமல் பொழிந்தது. அதன் காரணமாக, ஏரிகள், குளங்கள் எல்லாம் தண்ணீர் நிறைந்து ததும்பிக் கொண்டிருந்தன. சாலை ஓரத்தில் ஓடைகளில் தண்ணீர் அலை மோதிக் கொண்டிருந்தது. ஆறுகள், வாய்க்கால்களில் இரு கரையையும் தொட்டுக் கொண்டு பிரவாகம் ஓடிக் கொண்டிருந்தது.

நன்செய் வயல்களில் இரண்டாம் போகத்து வேளாண்மை அப்போதுதான் ஆரம்பமாகியிருந்தது. புன்செய்க் காடுகளில் கம்பும் கேழ்வரகும் செழித்து வளர்ந்திருந்தன.

சாலையின் இருபுறத்திலும் வளர்ந்திருந்த மரங்களும் ஆங்காங்கே வயல்களுக்கிடையே காணப்பட்ட தென்னந் தோப்பு, வாழைத் தோட்டங்களும் கண்ணைக் குளிர்விக்கும் காட்சியளித்தன.

பெருமழை விட்டுப் பல நாட்கள் ஆகிவிட்டதாயினும், வானத்தில் இப்போதும் மேகத் திரள்கள் காணப்பட்டன. இவை இடையில் தங்குவதற்கு நேரமில்லாத நெடுந்தூரப் பிரயாணிகளைப் போல் ஆகாயத்தில் அதி வேகமாகப் பிரயாணம் செய்தன. சில சமயம்



ஆந்திரப் பிரதேஷ் அச்சிடும் தாளிலே அச்சிடும் போது... அசலும் நகலும் ஒன்றெனவே தோன்றும்.

உயர்ந்த பளபளப்பு, மழமழப்பு, உன்னத அச்சிடும் தரம்... இவற்றுக்கெனவே உருவாக்கப்படுகிறது ஆந்திரப் பிரதேஷ் அச்சிடும் தாள்—தெளிவான அச்சு கிடைக்கும். வண்ண வேறுபாடு இராது. எத்தனை பதிப்புக்கள் போட்டாலும் ஒவ்வொரு பதிப்பிலும் நுண்ணிய தெளிவு

mcm/app/11d tam

ஆந்திரப் பிரதேஷ் பேப்பர் மில்ஸ்
ரிஜிஸ்டர்டு ஆபீஸ் & மில்ஸ்: ராஜமுந்திரி (ஆ.பி.)
பம்பாய் ஆபீஸ்: ஸ்ரீனிவாஸ் ஹவுஸ்,
ஹஜாரிமால் சோமானி மார்க்.
ஹைதராபாத் ஆபீஸ்: 1-2-33/3 மதுபன்,
ககன்மஹால் ரோடு.

மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, ஸ்ரீனிவாஸ் ஹவுஸ், ஹெச். சோமானி மார்க், பம்பாய்-1.
மெஸ்ஸர்ஸ். சஞ்சய் & கம்பெனி, தால் சேம்பர்ஸ், 25, தலால் ஸ்ட்ரீட், பம்பாய்-1.
மெஸ்ஸர்ஸ். பிலாசிட் லிமிடெட், ஹரிலேலா ஹவுஸ், மின்ட் ரோட், பம்பாய்-1.
மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, இண்டஸ்ட்ரி ஹவுஸ், நடராஜ சினிமா பின்புறம், ஆஸ்ரம் ரோட், அஹமதாபாத்-9
மெஸ்ஸர்ஸ். பிலாசிட் லிமிடெட், 31, சௌரிங்கீ ரோட், கல்கத்தா-16.
மெஸ்ஸர்ஸ். பிலாசிட் லிமிடெட், 24, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1.
மெஸ்ஸர்ஸ். சஞ்சய் & கம்பெனி, 90, சுந்தர் நகர், புது டெல்லி-11.
மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, 4-4-288, இந்தர்பாக், சுல்தான் பஜார், ஹைதராபாத்.
மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, ஸ்ரீனிவாஸ் நிலயம், ஸ்ரீராம் நகர், ராஜமுந்திரி. (ஆ.பி.)



அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வெல்ல் ஆ:ப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி, உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வெல்ல் ஆ:ப் லவ் உங்களை அலங்கரிக்கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத்திரை அது.
ஹேலோ வெல்ல் ஆ:ப் லவ் டால்க் வாசமுள்ள அன்புத்திரை... அன்பைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வெல்ல் ஆ:ப் லவ்
டால்க்
NEW
Halo

HT.G.I.TH (R)

நீர்த் துளிகளை அள்ளித் தெளித்து விட்டுச் சிதறி மறைந்தன.

நீர் நிலைகளின் மீது தவழ்ந்தும் பசுமையான தோப்புக்களில் புகுந்தும் மழைத் துளிகளை அளாவியும் வந்து கொண்டிருந்த குளிர்ந்த வாடைக் காற்று உடம்பின் மீது பட்டபோது, துணியை இழுத்துப் போர்த்திக்கொள்ளத் தோன்றியது. ஆயினும், அது அபூர்வமான சுகத்தை அளித்தது.

அந்தக் குளிர்ந்த வாடைக் காற்றில் அடிபட்டதனால் பட்சிகளுக்குக் கூடத் தொண்டை கட்டிக் கொண்டதுபோல் தோன்றியது. சாதாரணமாய்க் 'கலகல' வென்றும் 'கிளுகிளு' வென்றும் கேட்கும் புள்ளினங்களின் குரல் ஒலியில் இப்போது 'கரகரப்பு'ச் சத்தம் கலந்திருந்தது.

* * *

வண்டியில் அத்தைக்கும் மருமகளுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது:

''இன்றைக்கு மழை பெய்யுமா, சிவகாமி?'' என்று அத்தை கேட்டாள்.

''மலையா? எங்கே இருக்கிறது?'' என்றாள் சிவகாமி.

''ஆமாம்; மழையைக் கண்டால் மயிலுக்குக் கொண்டாட்டம்தான்!'' என்றாள் அத்தை.

''மாலையில் வெய்யில் அடித்தால் கொண்டாட்டத்துக்கு என்ன குறைவு?'' என்றாள் சிவகாமி.

''என்ன சொன்னாய்?'' என்றாள் அத்தை.

''என்ன கேட்டீர்கள்?'' என்றாள் சிவகாமி.

கொஞ்சம் செவி மந்தமுள்ள அத்தைக்குப் பேசுவதிலே அதிகப் பிரியம். எனவே, அவ்வப்போது சிவகாமியிடம் ஏதாவது கேட்டுக் கொண்டும், சொல்லிக்கொண்டும் வருவாள். கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த சிவகாமி அத்தையின் பேச்சுக்களை மனத்தில் வாங்கிக் கொள்ளாமலேயே ஏதாவது பொருத்தமில்லாத மறுமொழி சொல்லுவாள். அது காதில் நன்றாய் விழாமல் அத்தை வேறு ஒன்றைக் கூறுவாள். இதே ரீதியில் அவர்களுடைய பிரயாணம் நடந்து கொண்டிருந்தது. காஞ்சியிலிருந்து ஏறக்குறைய ஆறு காத தூரம் அவர்கள் பிரயாணம் செய்திருந்தார்கள்.

மாரிக் காலத்து மாலைப் பொழுதில் வெளி உலகமானது எவ்வளவுக்குக் குளிர்ந்திருந்ததோ, அவ்வளவுக்குச் சிவகாமியின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. அதில் நிமலை நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தது. கொழுந்து விட்டெரியும் ஜ்வாலைகளுடனே அக்கினி ஆறு பிரவகித்துக் கொண்டிருந்தது.

மாமல்லரைப் பற்றி நாகநந்தி பிக்ஷு கூறிய விஷயங்கள் அவளுடைய மனத்தில் அத்தகைய பிரளயக் குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தன.

நம் அன்புக்குரியவர்களைப் பற்றிச் சாதாரணமாக ஏதேனும் கெடுதலான விஷயத்தைக் கேள்விப்பட்டால் நம் உள்ளம் சுலபத்தில் நம்புவதில்லை. 'அப்படியெல்லாம் இராது' என்று மனத்தைத் திருப்தி செய்து கொள்ளுகிறோம். அவதூறு சொல்கிறவர்களிடம் சண்டை பிடிக்கவும் ஆயத்தமாயிருக்கிறோம்.

ஆனால், எக் காரணத்தினாலாவது நமக்கு வேண்டியவர்களிடம் குற்றம் இருக்கிறதென்று நம்பும்படி நேர்ந்து விட்டால், உள்ளத்தில் கோபம் கொழுந்து விட்டு எரியத் தொடங்குகிறது. வேண்டியவர்கள் மீது மட்டு



மல்ல; உலகத்தின் மேலேயே கோபம் கொள்ளுகிறோம்.

இந்த மனித இயற்கை காதலர்களின் விஷயத்தில் ஒன்றுக்கு நூறு மடங்கு ஆகிறது.

காதலன் எவனும் தன்னுடைய காதலியைச் சாதாரண மானிடப் பெண்ணாகக் கருதுவதில்லை, தெய்வப் பிறவி என்றே கருதுகிறான். தேவலோகத்தில் அமிர்த பானம் செய்து கொண்டு ஆனந்த அமர வாழ்க்கை நடத்த வேண்டியவள் தன் பேரில் கொண்ட அன்பினாலேயே இந்தப் பூலோகத்

திலே வாழ்ந்து வருவதாகக் கருதுகிறாள்.

காதலியோ, குழந்தைப் பிராயத்திலிருந்து தன் மனத்தில் தானே சிருஷ்டி செய்து கொண்டிருந்த இலட்சிய புருஷனுக்குரிய சகல உத்தம குணங்களையும் காதலன் மீது ஏற்றி அவனைக் குற்றம் குறை இல்லாத தெய்விகப் புருஷனாகவே எண்ணிக் கொள்ளுகிறாள்.

ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்படும்போது மகத்தான ஏமாற்றம் உண்டாகி விடுகிறது. மலையின் சிகரத்திலிருந்து திடீரென்று அதல பாதாளத்தில் விழுகிறவர்களைப் போல் ஆகி விடுகிறார்கள்.

சிவகாமி தன் இருதயத்தில் ஓர் அற்புதமான திருக்கோயிலை அமைத்து, அதிலே மாமல்ல நரசிம்மரைத் தெய்வங்களுக்கெல்லாம் மேலான பர தெய்வமாகப் பிரதிஷ்டை செய்திருந்தாள்.

நாகநந்தி கூறிய நஞ்சு தோய்ந்த வார்த்தைகளினால் அந்தத் திருக்



கோயில் ஒரு நொடியில் இடிந்து தகர்ந்து விழுந்து விட்டது. அதிலே பிரதிஷ்டை செய்திருந்த தெய்வச் சிலையும் விழுந்து நொறுங்கிப் பொடிப் பொடியாய்ப் போய் விட்டது.

குமார சக்கரவர்த்தியைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறு அவ்வளவு சாமர்த்தியமாகவும் நம்பும்படியாகவும் அமைந்திருந்தது. சிவகாமி அவர் கூறியது அவ்வளவையும் அப்படியே நம்பி விட்டாள். இராஜ்யத்திலே அவ்வளவு பெரிய யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது, மாமல்லர் காஞ்சிக்குள்ளேயே ஒளிந்து கொண்டிருப்பதற்கு வேறு காரணம் என்ன இருக்க முடியும்?

போர்க்களத்திலே பரஞ்சோதியின் வீர தீரச் செயல்களைப் பற்றிய வரலாறுகள் காற்றிலே மிதந்து ஆயனரும் சிவகாமியும் வசித்த காட்டுக்குள்ளே கூட எட்டியிருந்தன. அதெல்லாம் உண்மை என்பதைப் பரஞ்சோதியை நேரிலே பார்த்த சிவகாமி தெரிந்து கொண்டிருந்தாள். தமிழ் படிக்கவும் சிற்பம் கற்கவும் வந்த பட்டிக்காட்டுப் பிள்ளை இப்போது பெரிய தளபதி ஆகி விட்டான். அரங்கேற்றத்தன்று அவன் யானை மீது வேல் எறிந்து தங்களைக் காப்பாற்றிய சம்பவமும் சிவகாமியின் உள்ளத்தில் அழியாதபடி பதிந்திருந்தது. பரஞ்சோதியின் வீர வாழ்க்கையோடு மாமல்லர் கோட்டைக்குள்ளே ஒளிந்திருந்ததை ஒப்பிட்டுப் பார்த்து, மாமல்லரைப் ''பயங்கொள்ளிப் பல்லவன்'' என்று நாடு நகரமெல்லாம் அழைப்பதில் வியப்பில்லை என்று சிவகாமி எண்ணினாள். இதனால், நாகநந்தியின் வார்த்தைகளில் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

ஒரு விஷயத்தில் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு, அதையொட்டிய இன்னொன்றிலும் நம்பிக்கை பிறப்பது இயல்பேயல்லவா? எனவே, மாமல்லரை 'ஸ்திரீலோலன்' என்று நாகநந்தி கூறியதிலும் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. வீர மன்னர்களுக்குப் பிறந்த தூர்த்தர்களான இராஜகுமாரர்களைப் பற்றி அவள் கதைகளிலே கேள்விப்பட்டதுண்டு. மாமல்லர் அவர்களிலே ஒருவர் என்று அவள் கனவிலும் நினைத்ததில்லை. ஆனால், அதுவும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று இப்போது தோன்றியது. ஆகா! மாய வார்த்தை பேசி ஏழைப் பெண்களைக் கெடுப்பதிலே அவர் கைதேர்ந்தவராயிருக்க வேண்டும்! கள்ளங்கபடமறியாத தன்னிடம் என்னவெல்லாம் சொல்லி ஏமாற்றினார்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்திலேயே தன்னை ஏற்றி வைத்து விடுகிறவர்போல் அல்லவா பசப்பினார்! புருஷர்கள்தான் எவ்வளவு நயவஞ்சகர்கள்? அதிலும் இராஜகுலத்தவர் எப்பேர்ப்பட்ட சுவிரக்கம் இல்லாத கிராதகர்கள்!

வழிப் பிரயாணத்தின்போது இந்த மாதிரி எண்ணங்கள் சிவகாமியின் உள்ளத்தில் அடிக்கடி தோன்றி நரக வேதனையளித்தன.

சில சமயம் அவளுக்குத் தன்னுடைய மனோராஜ்யத்தில் ஆசையுடன் நிர்மாணித்து வந்த இன்ப வாழ்க்கையாகிய கோட்டை இடிந்து

தூளாகிவிட்டபடியால், இனிமேல் தன் வாழ்க்கை என்றென்றைக்கும் சோகமய மாகவே இருக்கும் என்று தோன்றியது.

மாரிக் காலத்தின் முடிவில் வானத் தில் சிதறி ஓடிய மேகங்கள் சில மழைத் துளிகளை உதிர்த்துவிட்டுப் போகும் போது தன்னுடைய கதிக்காக உலகமே கண்ணீர் வடிப்பதாக அவள் எண்ணினாள்.

இந்த ஒரு வாழ்க்கை மட்டுமல்ல; இதற்கு முன்னர் எத்தனை எத்தனையோ ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் தன்னு டைய வாழ்க்கை இப்படியே சோக மயமா யிருந்ததாகத் தோன்றியது.

ஆனால், இரவில் எங்கேயாவது தங்கி யிருந்துவிட்டுக் காலையில் மறுபடி யும் பிரயாணம் தொடங்கும்போது ஜகஜ்ஜோதியாகச் சூரியன் உதயமாகி மரக் கிளையில் தங்கியிருக்கும் நீர்த் துளி களை வைரமணிகளாக ஒளி வீசச் செய் யும் காட்சியைப் பார்த்து விட்டுச் சிவகாமி சிறிது உற்சாகம் கொள்வாள்.

மாமல்ல நரசிம்மர் பயங்கொள்ளி, தூர்த்தர் என்று ஏற்பட்டதன் பொருட்டுத் தன் வாழ்க்கையை எதற் காகப் பாழாக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதுவாள். 'உலகம் எவ் வளவோ விஸ்தாரமானது; பல்லவ இராஜ்யத்துக்கு அப்பாலும் உலகம் இருக்கத்தானே செய்கிறது? தன்னிடம் அற்புதமான நாட்டியக் கலையும் இருக் கிறதல்லவா? அந்தக் கலையைப் பார்த்து அநுபவித்து ஆனந்தமடைய நாகநந்தி சொல்வதுபோல், உலகம் காத்திருக்கிறதல்லவா? எதற்காகத் தன் வாழ்க்கை பாழாகிவிட்டதாக எண்ணிக் கொள்ள வேண்டும்?...' இவ்விதம் எண்ணிச் சிவகாமி உற்சாகம் அடையப் பார்ப்பாள். தூர தூர தேசங்களிலே, பெரிய பெரிய சபைகளிலே தான் நாட் டியம் ஆடுவது போலவும், கணக்கற்ற ஜனங்கள் கண்டு களித்துத் தன்னைப் பாராட்டி உபசரிப்பது போலவும் கற்பனை செய்து கொண்டு களிப்புறு வாள்.

இத்தகைய மனோபாவத்துடனேயே சிவகாமி தன் தந்தையைப் பெரிதும் வற்புறுத்தி நாகநந்தி பிக்ஷுவின் யோசனையை ஒப்புக் கொள்ளச் செய் தாள். அதன் பேரிலேதான் இந்தப் பிரயாணம் அவர்கள் தொடங்கினார்கள்.

ஆனால், என்னதான் மனத்தை வேறு விஷயங்களில் செலுத்திப் பார்த் தாலும், எவ்வளவுதான் பிரயத்தனம் செய்து உற்சாகம் கொள்ளப் பார்த் தாலும், சாத்தியமாயில்லை. அவ்வப் போது குமுறிக் கொண்டு வந்த வேதனை உணர்ச்சியை மாற்ற முடிய வில்லை. பொங்கியெழுந்த ஆத்திரத் தீயை அணைக்க முடியவில்லை.


முக்கியமாக, அந்தி மயங்கி நாற்புற மும் இருள் சூழ்ந்து வந்த நேரங்களில் சிவகாமியினுடைய உள்ளத்தில் வேதனை யும் துயரமும் பெருகி அவளைச் சோகக் கடலில் மூழ்கச் செய்தன.

* * *

அன்று சாயங்காலம் அவ்வாறு சோகத்தில் ஆழ்ந்த உள்ளத்துடன் சிவ காமி கட்டை வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, அவளு டைய நினைவை வேறு பக்கம் இருப்பும் படியான சம்பவம் ஒன்று நேர்ந்தது.


சாலையில் அவளுக்கெதிரே ஒரு பெரும் படை வந்து கொண்டிருக்கிறது என்பதற்கு அறிகுறிகள் தென் பட்டன.

சங்கு, கொம்பு, தாரை, தப்பட்டை, பேரிகை, எக்காளம், சமுத்திரகோஷம் முதலிய வாத்தியங்களின் பேரொலியும், அநேக குதிரைகளும் மனிதர்களும் நடந்து வரும் காலடிச் சத்தமும், போர் வீரர்களுடைய பேச்சுச் சத்தமும், போர்முழக்கங்களின் கோஷமும் கலந்த பேரிரைச்சல் நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்கி வந்து கொண் டிருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் சைனியத்தின் முன்னணிப் படை வீரர்கள் அவர்களின் கண்ணுக்குத் தென்படலாயினர். (தொடரும்)





CMGC.I 216 TM


நாளும் உங்கள் உடலுக்குத் தேவை
23 அத்தியாவசியமான ஊட்டச்
சத்துக்கள்.
இதர உணவுப் பானங்கள் இவற்றிலே
எத்தனை தருகிறது என்று பாருங்கள்!
காம்ப்ளான்
23 ஊட்டச்
சத்துக்களையும் தருகிறது.
பருகுவீர் காம்ப்ளான்®
பரிபூரண உணவு
போஷாக்குப் பற்றுக்குறையிலிருந்து
பாதுகாக்கவே.
உலகெங்கும்
உபயோகிக்கப்
படுவது—
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில்
உருவானது.



உண்டி சுருங்குதல் உங்களுக்கு அழகு!

உடலைப் போஷிக்கும் இரைப்பையை எப்படிப் போற்றிப் பாதுகாப்பது? அதற்கு அளவாக வேலை கொடுப்பதே நாம் செய்யும் உதவி!

"உடன்றோடு வாழ்தல் அரிது!" என்று அவ்வைப் பாட்டி பழித்த 'இடும்பைகூர்' வயிறுதான் இரைப்பை. உணவின் வரவேற்பு அறை வாய் என்றால், இரைப்பை அதன் முக்கிய அலுவல் அறை. வாயிலே மெல்லப்பட்டு உமிழ் நீர்களுடன் கலந்து ஓரளவு பக்குவமான உணவு, மார்புப் பகுதியில் சுமார் பத்து அங்குலம் நீளமுள்ள உணவுத் தண்டு வழியே அலை அலையாக இறங்கி, இரைப்பையை எட்டுகிறது.

மார்புக் கூட்டின் கீழ், விதானத் தசையைக் கடந்ததும் மேலே நிற்பது இரைப் பை. வயிற்று உறுப்புக்களில் பெரியது இது. இதயத்தின் நேர் கீழே இருப்பது. நடு வயிறுவரை படர்ந்தது. மூன்று அடுக்குச் சதைகளால் ஆனது. அழகான பாத்திரம் போன்றது. மேலே உணவுக் குழாயை ஒட்டி ஒரு வழி. கீழே, வலது புறம், குடலுக்குப் போக ஒரு வழி. இதனிடையே விழுங்க விழுங்க எல்லாம் கொண்டு, அதற்கேற்ப உப்பிப் பருத்து இடம் கொடுக்கும் அதிசய உறுப்பு இரைப்பை. சாதாரணமாக இரைப்பை ஒன்றரை லிட்டர் உணவுப் பொருளைக் கொள்ளும்.

பொதுவாக ஆணின் இரைப்பையை விடப் பெண்ணின் இரைப்பை சற்றே சிறியது. மென்மையானது. உணவு அடைபடும் ஒரு கிடங்கு அல்ல இரைப்பை; உண்ட உணவு உடலுக்கு ஏற்பப் பக்குவமாகும் ஆலையே இது.

இரைப்பைக்குத்தான் எத்தனை பொறுப்புக்கள்! சூடான தேநீரானாலும் ஜில்லென்ற ஐஸ்கிரீமானாலும் இரைப்பையை அடைந்தவுடன் உடலின் வெப்பத்துக்கு அதை மாறச் செய்கிறது இரைப்பை.

இதற்கு முன்னமேயே உணவு கிட்டப் போகிறது என்ற நிலையில், அதை ஜீரணிக்க ஏற்ற சில சாறுகளைச் சுரக்கத் தொடங்கும் இரைப்பை. மாம்பழ வாசனை மூக்கைத் துளைத்தால், அதை வரவேற்க இரைப்பையில் நீர் ஊறும்! அடுத்த எட்டு பத்து நிமிடங்களுக்குள் மாம்பழம் கிட்டாவிட்டால், சுரப்பது நின்று விடும்!

இரைப்பையில் சுரக்கும் முக்கியமான நீர் ஹைடிரோ குளோரிக் அமிலம்; மற்றது பெப்சின் என்னும் ஜீரண ரசம். இரைப்பையில் சுரக்கும் சாற்றில் காணும் ஒரு பொருள் உணவிலிருக்கும் பி-12 வைட்டமினுடன் இணைந்து, ரத்தத்துக்குத் தேவையான சிவப்பு அணு உற்பத்திக்கு உதவுகிறது.

எல்லாம் கொள்ளும் இரைப்பை ஒருமுறை முழுதும் காலியாகச் சுமார் நான்கு மணி நேரமாவது பிடிக்கும். ஜீரணிக்கக் கஷ்டமான உணவானால் இன்னும் சற்று நேரமாகும். எளிய உணவானால் இரண்டு மூன்று மணி நேரத்திலேயே காலியாகி விடும். நிறைந்தபோது உப்பிய சுரைக்காயைப் போலக் காணும் இது காலியாகும்போது தொய்ந்த பையாகி விடும்.

உதட்டின் மேல் பரப்புப் போல இரைப்பையின் உள் சுவர் முழுவதும் வெல்வெட்டுப் பூச்சு ஒன்றிருக்கிறது. இரைப்பையில் நேரும் இரசாயன மாற்றங்கள் இரைப்பைச் சுவர்களை அரிக்காமல் பார்த்துக்கொள்வது இந்தப் பூச்சுத்தான்.

வயிற்றிலே உணவு சேர்ந்த அரை மணிக்குள் சீரணச் சாறு தன் பணியைத் தொடங்குகிறது. சுமார் இரண்டு மணி நேரம் இரைப்பை உட்சுவரில் கோழை போன்ற 'காஸ்டிரிக் சாறு' சுரந்து உணவைக் கலக்கிக் கரைக்கும்.

அரைத்த சந்தனத்தைப் பன்னீர் தெளித்துக் கரைத்துப் பிசைவது போல் இரைப்பையின் மேல்புறத்தில் உணவும் ஜீரணச் சாறும் கலந்து குழம்பாகிறது. இரைப்பையின் இடை விடாத தசை இயக்க அசைவால் மேல் பகுதியில் உணவு இரசாயன மாற்றம் அடைகிறது. அமிலம் சேரச் சேரக் கடினமான பொருள்களும் இளகுகின்றன; கரைகின்றன. போதிய அளவு பக்குவமானதும் இரைப்பையின் கீழ்ப் பகுதிக்குப் போகும். இங்கே கியூ வரிசையில் கூட்டம் நகர்வது போலச் சற்று நேரத்துக்கு ஒரு முறை குடல் வாய் திறந்து கவனம் கவனமாக இரைப்பையிலிருந்து வெளியேறும். குடல் வாய்ப் பகுதி 'பைலோரஸ்' என்ற பொருத்தமான பெயர் பூண்டிருக்கிறது. இந்தக் கிரேக்

கச் சொல்லுக்கு 'வாயிற் காவலன்' என்பது பொருள்.!

எப்போதாவது இரைப்பை தன் எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவிக்கும் அறிவிப்பே வாந்தி. உணவு மிகையாக இருந்தால் வாந்தியாக வெளியேற்றுகிறது. வாந்தி எடுப்பதே சில தொல்லைகளுக்கு நிவர்த்தியாகும். பஸ்ஸிலோ, கப்பலிலோ, சில பயணிகளுக்கு அந்த அசைவு பழக்கமாகாமல் வாந்தி வருவதுண்டு. உள் உறுப்பு நோய் அறிகுறியாகவும் வாந்தி வருவதுண்டு.

பசி என்னும் உணர்வு உடலியல் விளக்கத்துக்கு அப்பாற்பட்டது. மனம் வேறு விஷயங்களில் மிகத் தீவிரமாக ஈடுபடும் போது பசியே தெரிவதில்லை! இரைப்பை காலி என்பதை மனம் உணரும் நிலையே பசி!

சா தாரணமாக உணவு உள்ளே இருக்கும் போதுமட்டுமே சுரக்க வேண்டிய அமிலங்கள் சிலருக்குக் காலி வயிற்றிலும் சுரந்தபடி இருக்கும். இது ஒரு நோய் அடையாளம். வயிற்றுப் புண் என்னும் பெப்டிக் அல்சர் ஏன் வருகிறது? இது பரம்பரைப் பழக்கமாக இருக்கலாம். ஓயாது கவலையும் படபடப்பும்கூட ஒரு காரணமாகலாம். ஏனெனில் இந்தச் சாறு சுரக்கத் தூண்டுவதே சில நரம்புகள் தாம். புகையிலைப் பழக்கமும் குடிப் பழக்கமும்கூட ஒரு காரணம். மிகையாக மிளகாய், மிளகுக் காரங்களைச் சேர்த்துக் கொள்வதாலும் இது நேரலாம். இரைப்பையில் இந்தப் புண் இருந்தால் சொல்லி வைத்தாற் போல் குறிப்பிட்ட நேரத்தில் வயிறுவலிக்கும். சாப்பிட்ட அரை மணிக்குள்ளே என்றால் எப்போதும் அதே சமயம் வலிக்கும். ஒரு கவளம் ஏதாவது தின்றால் வேதனை குறையும். புளிச்ச ஏப்பம் வரும். வாந்தி எடுத்தால் நெஞ்சு எரியும். அமிலத்துக்கு மாற்றாக மருந்து குடித்தால் வேதனை குறையும்.

புண் என்று சந்தேகித்தால் வைத்திய உதவி நாட வேண்டும். கை வைத்தியம் போதாது. உணவுப் பழக்கங்களிலே கவனமாக இருக்க வேண்டும். சில சமயம் சிகிச்சை பத்துப் பன்னிரண்டு வாரம் வரை நீடிக்கும். இரைப்பை தொடர்ந்து காலியாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காலி வயிற்றில் அமிலச் சாறு தொல்லை விளைவிக்கும். இந்த நோயாளிகள் இரவில் படுக்கப் போகும் போது ஒரு விழுங்கு வெண்ணெய் தின்றால் சுரக்கும் சாற்றுக்கு வேலையாகும். எல்லாவற்றிலும் கடினமான நிபந்தனை, கவலைப் படாமல் இருப்பதேயாகும்.

இரைப்பைப் புண் தீவிரமானால் ரண சிகிச்சை செய்யவேண்டிய அவசியம் ஏற்படும். புண்பட்ட பகுதியை வெட்டி, மீதிப் பையைத் தைத்துவிடுவது ஒரு சிகிச்சை. இரைப்பை நீரை ஓயாது சுரக்கத் தூண்டும் 'வேகஸ்' என்ற நரம்பையே துண்டித்து இயங்காது செய்வது ஒரு சிகிச்சை. இதில் என்ன சங்கடம் என்றால், நரம்புத் துண்டிப்பால் இரைப்பை சுருங்கி விரிந்து கொஞ்சம் கொஞ்சமாக உணவைச் சிறு குடலுக்குத் தள்ளும் இயக்கமும் மந்தித்துப் போய்விடும். ஆகவே இரைப்பை உணவு, குடல் வாய் வழியே



உணவு அடைபடும் ஒரு கிடங்கு அல்ல இரைப்பை ; உண்ட உணவு உடலுக்கேற்பப் பக்குவமாகும் ஆலை !

போகும்வரை காத்திருக்காமல், நேரே சிறு குடலை எட்டும்படி ஒரு 'குறுக்குப்பாதை' இணைக்கும் ரண சிகிச்சையும் கூடவே செய்ய வேண்டியிருக்கும்!

இரைப்பைப் புண் முதலில் உட்சுவர்ப் பூச்சை அரிக்கத் தொடங்கும். பிறகு வலுவான மூன்றடுக்குத் தசையைத் துளைக்க ஆரம்பிக்கும். இடையிலே ஏதாவது இரத்தக் குழாயைச் சேர்த்துத் தொளைவிட்டுவிட்டால் போச்சு! ரத்தம் வாந்தியாக வெளிவரும். குழிப் புண் மேலும் அரித்து இரைப்பை உணவு வெளியே ஒழுகும் அளவு துளையிட்டு விட்டால் அது உயிருக்கு ஆபத்து. எந்த நேரமானாலும் உடனே அவசர சிகிச்சை செய்ய வேண்டியதுதான்.

இரைப்பைப் புண் முற்றிப் புற்று நோயாகி விடலாம். ஆனால் குடல் வாயருகே புண் வந்தால் அது புற்று நோயாவதில்லை. இரைப்பையில் புற்றுநோய் ஆபத்து. அது வேகமாக எங்கும் பரவிவிடலாம். ஆனால் தெரிந்தால்தானே சிகிச்சை செய்ய? ஆரம்பத்தில் அது இருப்பதே தெரியாமல் இருக்கும். நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் பசிக்கவில்லை என்றும், பசி மந்தித்து விட்டது என்

நும் அடிக்கடி சொன்னால் அவர்கள் வைத்தியரைப் பார்த்துப் புற்றுநோயின் ஆரம்ப நிலை இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

''வயதான தோஷம்தான். பசி எடுக்காததற்கு ஒரு வைத்தியமா?'' என்று பல படித்த பெரியவர்கள்கூட முதலில் அலட்சியமாக இருந்து, பின்னால் வருத்தப்படுவதுண்டு.

இரைப்பையில் புற்றுநோய் முற்றத் தொடங்கினால் ரத்தச் சிவப்பணு தயாரிப்பு குறையும். உடல் சோகை பிடித்துக் காணும். எடை குறையும். வயிறு கல் போல் கடினமாகிவிடும். குணமாக ரணசிகிச்சை ஒன்றே வழி.

உடலின் உணவுக் களஞ்சியமாக இருந்து உடலைப் போஷிக்கும் இரைப் பையை எப்படிப் போற்றிப் பாதுகாப்பது? அதற்கு அளவாக வேலை கொடுப்பதே நாம் செய்யும் உதவி. நான்கு மணி நேர இடைவெளிக்குள் இரு முறை உண்ணாமலிருப்பது பேருதவி. நாக்கு எத்தனையோ கேட்கும். அவை யெல்லாம் இரைப்பைக்கு ஆகாது. உண்ணும் உணவும் பருகும் நீரும் சுத்தமானதாக இருப்பது இரைப்பைக்கு நாம் ஆற்றவேண்டிய கடமை. கொதிக்கக் கொதிக்க எதையும் குடிக்க வேண்டாம். போகும் வழியில் நெஞ்சில் இரைக் குழாய் உள் பகுதியைச் சுட்டுப் புண்ணாக்கி விடும்.

உண்ணும்போது சின்னக் கவலைகள் மனத்தைத் தின்றுமல் பார்த்துக் கொள்வது மிக முக்கியம்.

கட்டுரை: தம்பி சீனிவாசன்

ஆலோசனை: டாக்டர் கே. ஜி. கிருஷ்ணசாமி

* *

ஆண்களுக்கு மட்டும்!

அகில உலக சகோதர மனப்பான்மையுடன் ஆரவாரமில்லாமல் அமைதியாகச் சமூகப் பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனம் ஒன்று 'மசானிக் லாட்ஜ்' என்பதாகும். ஆன்மிகம், அன்பு, சகோதரத்துவம், சத்தியம் ஆகிய நான்கு உணர்ச்சிகளின் அடிப்படையில் இயங்கி வருவது இந்த நிறுவனம். எம்மதத்தினராயினும் சரி, பரம்பொருளிடம் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் தான் சேர அனுமதிக்கப்படுவார்கள்.

சாலமன் அரசன் காலத்தில் அவனுக்காகக் கோவில் கட்டிக் கொடுத்த கட்டிடத் தொழிலாளிகளின் தொழிற் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த நிறுவனம் தோன்றியதாக வரலாறு. கட்டிடத் தொழிலாளியை ஆங்கிலத்தில் குறிப்பிடும் வார்த்தைதானே 'மேசன்'! அந்தத் தொழில் சின்னங்களாகிய வட்டம் வரையும் 'காம்பஸ்', நேர் மட்டத்தை அளக்கும் 'கயிறு', கோணங்களைக் கணக்கிடும் 'செட் ஸ்கொயர்' ஆகிய உபகரணங்களே இந்த நிறுவனத்தின் அடையாளப் பொருள்களாயின.

காம்பஸ் வரையும் வட்டம் குறிப்பிட்ட எல்லைக்குள் நேர்மையான வாழ்க்கை முறை அமைய வேண்டும். கயிறு காட்டும் நேர்க்கோடு போல, வாழ்க்கை சமயத்துக்கு ஏற்ப வளையாமல் செல்ல வேண்டும். கோணங்களை எங்கும் சமமாகக் காட்டும் ஸ்கொயர் போல வாழ்க்கையில் சமநோக்கு வேண்டும் என்பதுதான் இந்த உபகரணங்களுக்குப் பின்னால் உள்ள தத்துவங்கள்.

ஆண்களுக்குத் தான் இந்த நிறுவனத்தில் சேர வாய்ப்பு உண்டு! பெண்கள் அனுமதிக்கப் படமாட்டார்கள்!

இந்த மசானிக் லாட்ஜைச் சேர்ந்த உறுப்பினர்களாக உலகம் முழுவதும் ஏறத்தாழ நாற்பது லட்சம் பேர் இருக்கிறார்கள்!

பாரதக்கிளையின் தென் பகுதித் தலைவராக சேவையின் மூலம் உயர்ந்து கௌரவம் பெற்றிருக்கும் சென்னை உயர்நீதிமன்ற பிரதம நீதிபதி திரு வீராசாமி, இவ்வாண்டிலிருந்து பாரதம் முழுவதுக்கும் 'கிராண்ட் மாஸ்டர்' என்ற விருதைக் கொண்ட தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த விருதைப் பெற்ற முதல் தென்னிந்தியர் இவர்தான்.

இதற்காக இவரைப் பாராட்டும் ஆர்வம் கொண்டது அமெரிக்கன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சென்னைக் கிளை. திரு வீராசாமி அமெரிக்கன் கல்லூரியின் பழைய மாணவர் என்பதால் பழைய மாணவர் சங்கம் அவரைப் பாராட்டுவது பொருத்தம்தான் என்றாலும் இன்றைக்கு உயர்நீதிமன்ற பிரதம நீதிபதியாக அரும் பணியாற்றி வரும் அவர் தமிழர் அனைவருக்குமே பொதுவானவர் என்பதால் நாமும் வாழ்த்தி மகிழ்வோம்.

படம்: மதுரை அமெரிக்கன் கல்லூரி பழைய மாணவர்களின் சென்னைக் கிளை, மாநில கவர்னர் திரு கே. கே. ஷா அவர்களைக் கொண்டு அடையாளப் பரிசைத் திரு வீராசாமிக்கு அளிக்கச் செய்து அவரைப் பெருமைப்படுத்திக் கொண்டது.





ஐயரவர்களின் 120-ம் ஜெயந்தி இரு வாரங்களுக்குமுன் 25-2-74ல் அமைதியாகக் கொண்டாடப்பட்டது

பாடல் பெற்ற மேஜை!



மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் திருவாவடுதுறையில் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் பயின்று வந்தார். அப்போது பிள்ளை அவர்களின் முதல் மாணாக்கராகிய வித்துவான் தி. தியாகராஜ செட்டியார் கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக இருந்து வந்தார். பிள்ளையவர்களின் மனத்துக்கினிய மாணவராக ஐயரவர்கள் திகழ்ந்ததால், செட்டியாருக்கு ஐயரவர்கள் பேரில் அலாதி அன்பு.

ஒரு சமயம் கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் ஆரம்பித்த சமயத்தில் அந்தப் பள்ளிக்கூடத்தில் தமிழ்ப் பண்டிதர் வேலைக்குத் தக்க ஒருவரைச் சிபாரிசு செய்யும்படி கேட்டுள்ளதாகவும் சாமிநாதய்யர் இவ்வேலைக்கு வரச் சௌகர்யப்படுமோ என்றும் தியாகராச செட்டியார் வினவினார்.

அப்போது மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் "தியாகராச, இவருக்கு இப்போது என்ன அவசரம்? குடும்ப வாழ்க்கையே இவர் இன்னும் தொடங்கவில்லையே? உற்சாகமாகப் படிக்கின்றார். 'உத்தியோகத்துக்குப் போனால் படிக்க ஊக்கமிருக்காது. இன்னும் சில வருஷங்கள் படிக்கட்டும். வயதொன்றும் அதிகமாக வில்லையே?" என்று கூறினார். பின்னர் ஐயரவர்களோ, செட்டியாரோ இது பற்றி முயலவில்லை.

பிள்ளை அவர்கள் காலமான பிறகு சில வருஷங்கள் ஐயரவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்து வந்தார். தியாகராச செட்டியாரும் கும்பகோணம் கல்லூரியில் தொடர்ந்து பணியாற்றி வந்தார்.

செட்டியார் முதுமையினாலும் கண் உபத்திரவத்தினாலும் தொடர்ந்து உத்தியோகம் பார்க்க இயலாமற் போகவே கல்லூரி முதல்வரிடம் தமக்கு ஓய்வு கொடுக்கும்படி வேண்டினார். கல்லூரி முதல்வர், "தக்கவர் ஒருவரைத் தாங்களே பதிலுக்கு வைத்து விட்டு ஓய்வு பெறலாம்" என்று கூறினார். செட்டியாருக்கு உடனே ஐயரவர்கள் நினைவு வந்தது. திருவாவடுதுறைக்கு வந்து ஐயரவர்களைக் கும்பகோணம் கல்லூரி உத்தியோகத்தை ஏற்கும்படி வேண்டினார். ஆதீன



வித்வானாக இருப்பதால் ஐயரவர்கள் ஆதீனகர்த்தர் அனுமதித்தால் கும்பகோணம் கல்லூரிக்கு வருவதாய்க் கூறினார். ஆதீன கர்த்தரிடம் செட்டியார் மிகவும் நயந்து வேண்டி ஐயரவர்கள் கும்பகோணம் கல்லூரியில் பண்டிதராக அனுமதி பெற்று ஐயரவர்களுக்குத் தாம் வகித்த உத்தியோகத்தைப் பெற்றுக் கொடுத்தார். இந்த நிகழ்ச்சி ஐயரவர்களின் வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. தமிழ் மறுமலர்ச்சிக்கும் வகை ஏற்பட்டது. ஸ்ரீ தியாகராச செட்டியாரின் இந்த அரிய உதவியை ஐயரவர்கள் மறக்கவேயில்லை. சென்னையில் தாம் வசித்து வந்த வீட்டுக்கு 'ஸ்ரீ தியாகராஜ விலாசம்' எனப் பெயரிட்டார். கும்பகோணம் கல்லூரியில் தமிழ் பயிலும் மாணவர்கள் இரண்டு பேர்களுக்குச் செட்டியார் பெயரால் உபகாரச் சம்பளம் அளிக்கச் செய்தார். தாம் பதிப்பித்த சங்க நூல்களில் ஒன்றாகிய 'ஐங்குறுநூற்'றைத் தியாகராச செட்டியாருக்குச் சமர்ப்பணம் செய்தார். செட்டியாரவர்கள் பயன்படுத்திய மேசையைத் தரிசித்து, செட்டியார் அவர்களை நினைந்து வணங்கிய பிறகே பாடங்களைத் தொடங்குவார்.

ஒரு சமயம் ஐயரவர்கள் உடல்நலமின்மையால் சில தினங்கள் கல்லூரிக்குச் செல்லவில்லை. அப்போது கல்லூரி நிர்வாகிகள் பழைய மேசை நாற்காலி முதலிய மரச் சாமான்களைத் தேவையற்றவை எனக் கருதி ஏலம் போட்டு விட்டனர்.

ஐயரவர்கள் உடம்பு குணமடைந்து கல்லூரிக்கு வந்தார். வழக்கம்போல் செட்டியாரின் மேசை நாற்காலி இருந்த அறையைப் பார்த்தார். அவை ஒன்றுகூட அங்கில்லை. வேறு இடத்துக்கு அவைகளை மாற்றி விருப்பார்களோ என விசாரித்தார். அவை யாவும் சில தினங்களுக்கு முன் ஏலம் போட்டு விட்டதாகத் தெரிவித்தனர்.

தியாகராச செட்டியார் மேசையைக் கண்டால் அவரையே காண்பது போன்று மகிழ்ந்து வந்த ஐயரவர்களுக்கு இச் செய்தி மிகுந்த வருத்தத்தை அளித்தது. முன்னரே விவரம் தெரிய வந்திருந்தால் தாமே அம் மேசையை ஏலத்தில் எடுத்திருக்கலாமே என ஏங்கினார். அன்று முழுவதும் வகுப்பில் அவருக்கு ஒன்றுமே ஓடவில்லை. மாலையில் வீட்டுக்கு



வந்தார். ஒருவாறு மனம் தேறி அந்த மேசையை ஏலம் எடுத்தவர் யார் என்று விசாரித்தார். நல்ல வேளையாக ராமசாமி நாயுடு என்ற கும்பகோணத்தைச் சேர்ந்த ஒருவரே அந்த மேசையை எடுத்திருப்பதாக அறிந்தார். அவரிடம் சென்று மேசையைப் பற்றி விசாரித்தார். ராமசாமி நாயுடு தாம் குறைந்த விலையில் ஏலம் எடுத்த மேசையை ஐயரவர்கள் சுலபமாகப் பெற விரும்புவதாக எண்ணி மறுத்தார். ஐயரவர்கள் அவரை மிகவும் வற்புறுத்தி அந்த மேசையைத் தமக்குத் தருமாறு கேட்டார். அவர் மிகவும் இரக்கி செய்து கொண்டார்.

பின்னர் ஐயரவர்கள் தம் நிலையை விளக்கி அந்த மேசையைப் பற்றியும் மேசையைத் தமக்கு விலைக்குத் தருமாறு வேண்டியும் இரண்டு பாடல்களைப் பாடி, ராமசாமி நாயுடுவிடம் விண்ணப்பித்துக் கொண்டார். ராமசாமி நாயுடு ஒருவாறு மனமிரங்கித் தாம் ஏலத்தில் மேசைக்குக் கொடுத்த தொகை ஏழு ரூபாயைப் பெற்றுக் கொண்டு ஐயரவர்களுக்கு மேசையைக் கொடுத்தார்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றது 1900ம் ஆண்டின் பிற்பகுதியில். பாடல் பெற்ற அந்த மேசையை ஐயரவர்கள் மிகவும் அன்புடன் போற்றிப் பாதுகாத்து வந்தார். இன்றும் அந்தப் பாடல் பெற்ற மேசை ஸ்ரீ தியாகராஜ விலாசத்தை அணி செய்து வருகின்றது. ஆனால் நமது துரதிருஷ்டம் மேசை பெற்ற பாடல்கள் மறைந்து விட்டன. **—மு. கோ. ராமன்**

உதவிக் கௌரவ அமைச்சன், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையம், சென்னை - 41.

படித்துப் பாருங்கள் ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நல்வாழ்வு

வழிபாடு, நம்பிக்கை, உடம்பைப் போற்றல், எளிமை ஓர் அறம், உரிமையும், கடமையும், புலனடக்கம் போன்ற தலைப்புக்களைப் பார்க்கும் போது நமக்குத் தெரிந்த விஷயங்கள் போல் தோன்றும். ஆனால் அவற்றைப் பற்றி யாரேனும் நம்மைக் கேட்டால் நம்மால் ஒன்றுமே சொல்ல முடியாது. தமிழ்ப் பேராசிரியரான டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இம்மாதிரி பல பொருள்களைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து ஊறித் திளைத்தவர்கள். இந்நூலில் அவர் எடுத்துக் கொண்ட பொருள்கள் பற்றி அநாயசமாக விளக்கங்கள் கொடுத்து விவரமாக எழுதி யிருக்கிறார்.

இதில் உள்ள பத்துக் கட்டுரைகளும் பல முறை படித்து உய்த்து உணர வேண்டியவை; சிந்தனைக்கு விருந்தாக உள்ளவை; கருத்துக் கருவூலமாகக் கொண்டுபயன்பெறத்தக்கவை.

விற்பனை உரிமை: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1. விலை: 1.50.

இலங்கையில் சில நாட்கள்

வரலாற்றுத் தொன்மையும், வரலாற்றுச் சிறப்பும் மிக்க இலங்கைக்கும் நமக்கும் உள்ள தொடர்பும் மிக நீண்ட காலமாக வரலாற்றுச் சான்றுகளுடன் கூடியதாகும். அத்தகைய இலங்கை பற்றி இந்நூலில் பல சுவையான தகவல்கள் காணக் கிடக்கின்றன. அண்மையிலுள்ள இலங்கையைப் பற்றிய விவரங்களையெல்லாம் அறிந்துகொள்ள நமக்கு என்றுமே ஆவல் உண்டு. அத்தகைய ஆவலுக்கு ஒரு நல்ல விருந்தாக விளங்குகிறது இந்நூல்.

குடந்தை தொழில் அதிபரும், வணிகருமான திரு பி. சண்முகம் இலங்கைப் பிரயாணத்தை மேற்கொண்டு தமது அநுபவத்தைச் சிறந்த இந்நூலாக வெளியிட்டுள்ளார். இலங்கைக்குப் புறப்பட்டதிலிருந்து கொழும்பு நகரம், கதிர்காமம் முருகன் கோவில், ஸ்ரீராமகிருஷ்ண மடம், புலிகள் வாழும் யாலாக்காடு, கன்யா வெந்நீர் ஊற்று, திரிகோணமலைச் சிறப்புகள், இயற்கைவளம் நிறைந்த நுவரேலியா போன்ற இடங்களைப் பற்றிய விவரங்கள் தொகுத்து அளிக்கிறார்.

''இலங்கையிலேயே நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழும் நான் கவனியாத, கவனிக்கத் தவறிய, பல விஷயங்களை இக்கட்டுரை ஆசிரியர் அலசி ஆராய்ந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வரும் நண்பர்கள் புறப்படுவதற்கு முன்னர் இந்நூலைப் படித்து விட்டு வருவது பயனுள்ளதாக இருக்கும்...'' என்று திரு கே.வி.எஸ்.வாஸ். (பிரதம ஆசிரியர், 'வீரகேசரி', 'மித்திரன்') இந்நூலைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது தக்க பாராட்டுரையே. புகைப்படங்கள் பலவற்றுடன் வெகு அழகாக வெளி வந்திருக்கிறது.

பிரசுரம்: முத்தமிழ்ப் பதிப்பகம், 32, சண்முகம் தெரு, கும்பகோணம்; விலை: ரூ. 3.

ஹரிச்சந்திரன் எம். எல். ஏ.

திமுக அரசோ அல்லது ஆட்சியிலுள்ள வேறு எந்த ஒரு கட்சி அரசோ லஞ்ச ஊழல்களில் திளைக்கிறதென்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்கிறது என்றும் தேர்தல் தில்லுமுல்லுகளில் ஈடுபடுகிறதென்றும் பொதுவாகப் பேச்சுவாக்கில் சொல்வது எளிது; ஆனால் நிரூபிப்பது கஷ்டம். அதனால் தனி நபர் உரையாடலின்போது எவ்வளவு பேசினாலும் எழுதுவது என்று வரும்போது பின்வாங்கி விடுவர் — மான நஷ்ட வழக்கு தொடுக்கப்படும் என்பதால்.

இந்த இக்கட்டிலிருந்து மீள, கற்பனைக் கதாபாத்திரங்களைக்கொண்டு ஆட்சியிலுள்ளவர்களைப் போலவே நடிக்கவும் பேசவும் வைத்து இடித்துரைத்தார் சோ. இந்தப் பாணியைப் பின்பற்றியே 'விராஜ்'ஜும் துக்ளக்கில் 'ஹரிச்சந்திரன் எம். எல். ஏ.' என்ற தலைப்பில் ஒரு தொடர்கதை எழுதித் தற்போது அது புத்தகமாகவும் வெளிவந்திருக்கிறது.

ஆட்சியிலுள்ளவர்கள் செய்த அல்லது செய்ததாகக் கருதப்படுகிற அக்கிரமங்களைச் சாங்கோபாங்கமாகக் கற்பனைக் கதாபாத்திரங்களைக் கொண்டு நகைச்சுவையையும் கலந்து அங்கதம் (Satire) என்ற பெயரில் நம்முன் வைக்கிறார். இதில் நையாண்டியை நிரம்பக் காண்கிறோம். ஆனால் அங்கத இலக்கியமாக இதனைக் கருத முடியவில்லை.


பிரசுரம்: விவேகா பப்ளிகேஷன்ஸ், 7, முதல் மெயின் ரோடு, ஜெத் நகர், சென்னை - 28. விலை ரூ. 2-75.

17. சதிகார வாழ்க்கை

ஆயிரத்து நானூற்று எழுபத்திரண்டு அடி உயரமுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் உச்சியில் இருந்தபோதுதான் தனஞ்செயன், எந்தவிதமாக மைக்கேலின் ஒத்துழைப்பைப் பெறுவது என்பது பற்றித் தன் திட்டத்தை அனுபமாவுக்கு விவரித்தான். வேறு எத்தனையோ பல சுற்றுலாப் பயணிகளுக்கிடையில் இருவராக விளங்குகையில் அந்தரங்கமான விஷயங்களைப் பேசுவதில் ஆபத்தில்லை என்று கருதி மனம் விட்டு உரையாடினார்கள்.

அவர்களைச் சுற்றிலும் நெடிதுயர்ந்த கட்டடங்கள், அவற்றைவிட உயரமான கட்டடங்களுடன் போட்டியிட முடியாமல் சிறுமைப்பட்டுத் தோற்றமளித்தன. ஜில்லென்று வீரியத்துடன் வீசிய காற்றினால் ஆடையோ கேசமோ அல்ல, ஆளே அலைப்புறாமல் காத்துக் கொள்ள இரும்புக் கிராதிக் கம்பிகளைப் பற்றவேண்டியதாயிருந்தது. தொடுவானத்தில்பார்வையை நிலைக்கச் செய்தால் நம்மைத் தாங்கி நிற்கும் கட்டடமே இலேசாகவும்ஒருவித நிதானத்தோடும் இப்படியும் அப்படியுமாய்க் காற்றுக் கடலில் ஆடிமிதப்பதுபோல் ஒரு பிரமை உண்டாயிற்று. ஒரு கரத்தால் குழந்தையை வயிற்றில் பற்றி உயரத் தூக்கி வேடிக்கை காட்டுவதுபோல் நம்மையும் விண்ணை நோக்கி உயரும் ஒரு மாயக் கரம் ஏந்திக் கொண்டு வந்துவிட்டதுபோல் ஒரு கற்பனை !

''இந்த டெலிவிஷன் கோபுரம் ஏழு நிலையங்களின் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பப் பயன்படுகிறது'' என்றாள் அனுபமா. ''எம்பயர் ஸ்டேட் பில்டிங்கைக் கட்டி முடிக்க, திட்டமிட்டதைவிட ஒரு கோடி டாலர் குறைவாகவே செலவாகியது! காரணம், அப்போது அமெரிக்காவில் ஒரு பயங்கரமான பொருளாதாரச் சீர்குலைவும் மக்களின்



விண்ணும் மண்ணும்

கி.ராஜேந்திரன்

உள்ளங்களில் அதன்விளைவாகச் சொல்லி முடியாத மனச் சோர்வும் ஏற்பட்டது தான். 1945ல் ஒரு விமானம் இந்தக் கட்டடத்தில் தொள்ளாயிரத்துப் பதினைந்து அடி உயரத்தில் இடித்துவிட்டது. பதினறு பேர் இறந்து போனர்கள். காயமுற்றவர்கள்....''

''எனக்கு டூரிஸ்ட் கைடு தேவை என்பதற்காகவா உன்னை நான் இங்கே வரச் சொன்னேன் ?'' என்று இடைமறித்துக் கேட்டான் தனஞ்செயன்.

''இல்லை, மைக்கேலை ஏமாற்றி இந்தியாவுக்கு நான் அழைத்து வர வேண்டும். இந்த உதவியை உங்களுக்குச் செய்ய எனக்குச் சம்மதமா இல்லையா என்பதை முடிவாகச் சொல்ல வேண்டும்.''

''உம்... எனக்குச் சாதகமான தீர்மானத்துக்குத்தானே வந்திருக்கிறய்?''

''ஆமாம்.... ஆனல்....''

அவளை மேலே பேசவிடாமல் அவள் வலக் கரத்தைக் கொஞ்சம் அளவுக்கு மீறிய உரிமையுடனேயே பற்றி விரலை முத்தமிட்டான் தனஞ்செயன். ''தாங்க்யூ அனு! தாங்க்யூ! இந்த உதவியை நானும் மறக்க மாட்டேன். பாரத அன்னையும் உன்னை மனமார வாழ்த்துவாள்!''

அனுபமாவின் கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் உதிர்ந்தது. சுற்றுலாப் பயணிகளில் சிலர் திரும்பித் திரும்பிப் பார்த்து விட்டுப் பின்னர் தாங்கள் தலையிடுவது உசிதமில்லை என்பதுபோல் வேறுபுறம் நோக்கினர்கள்.

''அனு என்ன இது? தவறு செய்து விட்டால்தான் அழுவார்கள். சரியான முடிவுக்கு வந்துவிட்டு யாராவது வருத்தப்படுவார்களா ?''





அப்போதுதான் அவள் கேட்டாள்: ''பாரத நாட்டில் உல்லாசமாய்ச் சுற்றி வந்து அதன் கலைப் பாரம்பரியங்களையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் பார்க்கலாம் என்று சொல்லி மைக்கேலை என்னுடன் புறப்பட்டு வருமாறு இன்றைக்கு வற்புறுத்துவது பெரிய விஷயமில்லை. ஆனால் நாளை அங்கே போய்ச் சேர்ந்த பிறகு என் உண்மை நோக்கம் வெளிப்படத்தானே செய்யும்? அப்போது ஒரு விஷப் பூச்சியை அருவருப்புடன் ஒதுக்குவது போல் என்னை அவர் உதறி விடமாட்டாரா? அந்த அவமானத்தை நான் எப்படித் தாங்குவேன்?''

தனஞ்செயன் சிரித்துவிட்டுக் கேட்டான்: ''நீ அவனைக் காதலிக்காதபோது அவன் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வது பற்றி ஏன் கவலைப்படுகிறாய்?''

''காதல் ஒன்றுதானா உலகில் முக்கியம்?'' என்றாள் அவள். ''சிநேக தர்மம் என்பது பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? நான் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக அவர் குற்றம் சாட்டும்போது என் மனம் அடையப் போகும் வேதனையை நினைத்தால்......''

''இப்போதே இந்த எம்பயர் ஸ்டேட் பில்டிங்கின் உச்சியிலிருந்து வீதிக்குக் குதித்துவிடலாம் போல் இருக்கிறதாக்கும்! நல்லவேளை! கம்பி வலை போட்டு வைத்திருக்கிறார்கள் நாலு பக்கமும்!'' என்று கூறி அவன் மறுபடியும் சிரித்தான்.

அவள் முகம் அவனிடமிருந்து பெற்றுக் கொண்ட கைக்குட்டையில் புதையுண்டது.

''கவலைப்படாதே, அனு! உன் மீது அவனுக்கு எள்ளளவும் சந்தேகம் ஏற்படாத விதத்திலும் பாரத நாட்டின் கௌரவம் சற்றும் குலையாத முறையிலும் அவனிடமிருந்து தேவையான விஞ்ஞான விவரங்களைப் பெற்றுவிடுவோம்!''

அனுபமா கழுத்தைச் சற்று உயர்த்தியபோது கைக்குட்டையில் மறைந்திருந்த அவள் வதனத்தின் ஒரு கண்



மட்டும் வெளிப்பட்டுத் தனஞ்செயனை ஆவலும் விநோதமுமாக அழகாகப் பார்த்தது.

''‘எப்படி?’ என்று கேட்கிறாயா? சொல்கிறேன்'' என்று தொடங்கிப் பின்வருமாறு பேசினான் தனஞ்செயன் :

'' நான் எதற்காக அமெரிக்கா வந்திருக்கிறேன், நீ எதற்காக இப்போது இந்தியா புறப்பட்டிருக்கிறாய் என்பதெல்லாம் உனக்கும் எனக்கும் மட்டுமே தெரியும். மைக்கேலுக்குத் தெரியாது. அவனைப் பொறுத்தவரை வியாபார நோக்கில் நான் இங்கு வந்தேன். யாருக்கும் சிறிதளவும் சந்தேகம் உதிக்காதிருக்க நான் பிடித்துள்ள ஆர்டர்களுக்குச் சரக்குகள் தப்பாமல் ஏற்றுமதியாகும். சுற்றுலா நோக்கில் நீ அவனையும் அழைத்துக்கொண்டு இந்தியா செல்கிறாய். அங்கே போனபிறகும் நீங்கள் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளாகவே இருப்பீர்கள். தாஜ்மகாலையும் கொனாரக் சூரியன் கோயிலையும் பார்த்ததற்கு அடையாளமாக உங்கள் உறவினர், நண்பர்களுக்கு வண்ணப் படங்கள் அச்சிட்ட தபால் கார்டுகள் கூட அனுப்புவீர்கள்.

''திடீரென்று ஒருநாள் உங்கள் மீது சிலர் பாய்வார்கள். உங்கள் இருவரையும் தனித்தனியே வெவ்வேறு மறைவிடங்களுக்கு விமானங்களில் கடத்திக் கொண்டு போய்விடுவார்கள். ‘நீங்கள் இருவரும் விண்வெளி விஞ்ஞானிகளாதலால் உங்கள் மீது நாக்ஸலைட்டுகள் பாய்ந்து கடத்திக் கொண்டு போய்விட்டனர்’ என்பதாகப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடப்படும். சீனாவுக்கோ அல்லது ருஷ்யாவுக்கோ நீங்கள் இருவரும் அபகரித்துக்கொண்டு செல்லப்பட்டீர்கள் என்று உலகம் நம்பும். நீங்கள் இருவரும் அமெரிக்க விஞ்ஞானிகளாதலாலும் விண்வெளித் துறையில் ஈடுபட்டிருப்பதாலும் அத்துறையில் புதிய தகவல்களைத் தெரிந்து கொள்ள விரும்பும் கம்யூனிஸ தேசங்கள் இருப்பதாலும் நாக்ஸலைட்டுகளின் நடவடிக்கைகள் இந்தியாவில் ஏராளமானதாலும் இந்தக் கட்டுக்கதையை உலகம் மிக எளிதில் நம்பும். பின்னர் நாக்ஸலைட்டுகள் உங்களைக் கொத்திக் கொண்டு இலங்கைக்குத் தாவி அங்கிருந்து சீனாவுக்குச் சென்றுவிட்டனர் என்பதாக ஒரு வதந்தி உலவும். ஆனால் நீங்கள் இருவரும் உண்மையில் இந்தியாவிலேயேதான் தனித் தனியே வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருப்பீர்கள்.

''மைக்கேல் செயற்கைச் சந்திரனை அனுப்ப ராக்கெட் விஞ்ஞானத் துறையில் தனக்குள்ள அறிவாற்றலையெல்லாம் வெளியிட்டு உதவ வேண்டும் என்று வற்புறுத்தப்படுவான். இதற்கு அவன் இணங்காது போனால் நீ சித்திரவதைக்கு ஆளாவாய் என்பதாக மிரட்டப்படுவான். அவனையே சித்திரவதை செய்வதைவிட இது அதிகமாகப் பலன் அளிக்கும். உனக்காகப் பயந்து அவன் ஒத்துழைப்பான். இதையெல்லாம் என் யோசனைகளுக்கிணங்கி— ஆனால் நான் நேரடியாகச் சம்பந்தப்படாத வகையில் — என் சகாக்களே சாதித்துக் கொள்வார்கள். பழியை மட்டும் நாக்ஸலைட்டுகள் ஏற்பார்கள்!''

அனுபமா வியப்பும் பிரமிப்புமாகத் தனஞ்செயனை நோக்கினாள்: ''இந்தியாவின் ஒரு மூலையிலேயே இருக்கும் மைக்கேல், தான் சீனாவுக்கு வலுக் கட்டாயமாக அழைத்து வரப்பட்டிருப்பதாக நம்புவாரா ? அப்படி ஒரு நாடகத்தை எத்தனை நாளைக்கு உங்கள் சகாக்கள் தொடர்ந்து நடத்த முடியும் ?''

'' ஒரு சில நாட்களுக்குள்ளாகவே மைக்கேல் தான் பாரதத்தின் எல்லைகளைத் தாண்டி எங்கும் சென்றுவிடவில்லை என்பதையும் இந்தியாவுக்காகத் தான் உழைக்கிறோம் என்பதையும் தன்னை அச்சுறுத்திக் காரியத்தைச் சாதித்துக் கொள்வது நாக்ஸலைட்டுகளோ சீனர்களோ இல்லை என்பதையும் புரிந்து கொண்டுவிடலாம். சாமர்த்தியசாலியான அவன் என்னுடைய சகாக்கள் எவ்வளவுதான் முன்னேற்பாட்டுடன் நடந்து கொண்டாலும் அவர்களுடைய வேஷத்தை ஊடுருவிப் பார்த்து விடலாம். ஆனால் புற உலகத்துக்கு இந்த இரகசியம் அம்பலமாகாது. கொஞ்ச நாட்கள் கழித்து நீங்கள் இருவரும் சீனாவிலிருந்து மிகவும் சிரமப்பட்டு ஹாங்காங்குக்குத் தப்பித்துக் கொண்டு வந்த கதை பரவும். அங்கே பத்திரிகையாளருக்குப் பேட்டி கொடுப்பீர்கள் ! சீன அரசு இதற்கு மறுப்பு விட்டாலும் சுதந்திர உலகம் உங்களைத்தான் நம்பும் !''

''நான் சீனாவிலிருந்து தப்பி வரவில்லை. இந்தியாவிலிருந்துதான் ஹாங்காங்குக்குக் கொண்டு வரப்பட்டேன் என்று மைக்கேல் பத்திரிகை நிருபர்களிடம் கூறிவிட்டால் ?''

''ஒருநாளும் மாட்டான். அப்படிச் சொன்னால் அவன் தன் தாய்நாடான அமெரிக்காவுக்குத் துரோகம் இழைத்ததாக ஒப்புக் கொண்டதாகவும் முடியும் என்று என் சகாக்கள் அவனை மிரட்டி வைப்பார்கள். அதைவிட, சீனாவுக்குக் கடத்திச் செல்லப்பட்ட தான், எத்

மோதி

இன்பக் குளியலுக்கு இந்தியாவின் இணையற்ற சோப்



இப்போது இரண்டு சைஸ்களில் உங்களை நாடி வருகிறது. இந்த சோப் தரும் வளம் பொருந்திய பட்டுப்போன்ற நுரை உங்கள் மேனியில் பட்டுக் கொஞ்சும் போது உடல் புல்லரிக்கும். அந்த இன்பத்தில் குளித்து எழுகையில் உலகமே இன்பமயமாகத் தோன்றும். மோதி உங்களுக்கெனவே உருவாக்கப் பட்டது. மல்லிகை, ரோஜா, வெட்டிவேர் ஆகிய மூன்று நறுமணங்கள். இன்றே ஒன்றைத் தேர்ந்தெடுப்பீர். நாளை முதலே இன்பவாரிதியில் குளிப்பீர்!

மோதி

இன்பக் குளியலுக்கான
இணையற்ற சோப்


இப்போது இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது.



டாடா தயாரிப்பு.

OBM.2384 TM

நாங்கள் காட்டும் அத்தாட்சி இதோ:



இதோ நீங்கள் காட்டும் அத்தாட்சி:



ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றுதான் பற்சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்துநிறுத்திக் காட்டுகிறது

ஒப்பற்ற பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே.

பற்சிதைவை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள ஃப்ளூரைடு


ஜெர்மனியிலே பல்டாக்டர்கள் கிங்கல், ஸ்டோல்டே... 400 குழந்தைகளைக் கொண்டு பரிசோதனைகள் நடத்தி நிரூபித்தனர்: பற்சிதைவை 33 சத விகிதம் குறைத்தது ஸிக்னல் ஃப்ளூரைடு (ஆதாரம்: DAS DEUTSCHE ZAHNARZTEBLATT, 1968, 9, 445-460). எப்படி நிரூபித்தது ஸிக்னலின் ஃப்ளூரைடு? பல் எனாமலோடு அது ஒருங்கிணைகிறது: பற்கள் அரித்துப் போகவும், முடிவில் சிதைவுபடவும் முக்கிய காரணமான அமிலத் தாக்குதலை வலுவாக எதிர்த்து நிற்கிறது. ஸிக்னல் தேய்க்கும் சிறுவர்கள் பல்வலி என்றால் இன்னதென்றே அறியார். உங்கள் குடும்பத்தினருக்கும் இதுவன்றோ தக்காப்பு: ஸிக்னல் சிகிச்சையே முற்காப்பு.

வாய்நாற்றத்தை நிறுத்துகிறது ஸிக்னலில் உள்ள எஸ்-14

அமெரிக்காவிலே டாக்டர் ஹாவர்டு E. ஸினாடு ... மருத்துவப் பரிசோதனைகளை நடத்தி நிரூபித்தார்: துலக்கிய 15 நிமிடங்களில் வாய்நாற்றக் கிருமிகளிலே 95 சத விகிதத்தை ஒழித்துக் கட்டியது ஸிக்னலின் எஸ்-14. 10 மணி நேரம் ஆனபின்னரும் வாய்நாற்றம் 75 சத விகிதம் குறைந்திருந்தது (ஆதாரம்: U.S.A., நார்த் வெஸ்டர்ன் யூனிவர்ஸிட்டி அறிக்கை 23 அக் 1968)

ஸிக்னலுக்கே உரிய சுத்திகரிப்பு மூலப் பொருளால் பற்களுக்கு மருத்துவப் பரிசுத்தம்

ஸிக்னலின் ஒப்பிலா மூலப் பொருளான அலுமினியம் டைஹைட்ரேட், பல் டாக்டரே துலக்கித் தந்தது போல தூய்மை அளிக்கிறது. பல் எனாமலைப் பாதிக்காமலே (ஆதாரம்: கினிக்கல் ரிசர்ச் ரிவியூ 7 நவ 1969, வெஸ்டிமின்ஸ்டர் U.R. லெபாரட்டரீஸ், இல்வொர்த், U.K.) ஒப்பில்லாச் சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளூரைடு, எஸ்-14 -- இம் மூன்றினையும் இணைப்பிடம்: ஸிக்னல் ஒன்றுதான். இன்னொரு பற்பசை இவ்வாறு செய்யாது.



அத்தாட்சி காட்டுவது ஸிக்னல் ஃப்ளூரைடு ஒன்றே— கேளுங்களேன் பல் டாக்டரை.

தன்னையோ அபாயங்களுக்கு உட்பட்டு ஹாங்காங்குக்குத் தப்பி வந்த கதையைக் கூறவே மைக்கேல் விரும்புவான். உலகின் அனுதாபத்தைப் பெற வாய்ப்பிருக்கும் போது உலகின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள யாராவது முற்படுவார்களா ?''

'' உலகத்தின் கண்ணில் பாரதத்துக்கு இழுக்கு இல்லை; மைக்கேலின் பார்வையில் அனுபமாவிடம் அழுக்கு இல்லை.''

''புரிந்ததா இப்போது? இனி என்னுடன் ஒத்துழைக்கத் தயங்க மாட்டாயல்லவா ?''

'' நீங்கள் விவரித்தபடியே எல்லாம் கச்சிதமாக நடக்குமேயானால் நன்றாகத்தான் இருக்கும்..... '' என்றாள் அனுபமா அவநம்பிக்கையுடன்.

'' நடக்கும் அனு, நடக்கும்! என்னுடைய பத்தாவது வயதில் கணக்குப் பரீட்சை எழுதாதிருக்க டாக்டர் சர்ட்டிபிகேட்டை ஃபோர்ஜரி செய்து கொடுத்ததிலிருந்து என்னுடைய சதிகார வாழ்க்கை ஆரம்பமானது என்றால் எவ்வளவு அனுபவம் எனக்கு இந்தத் துறையில், என்று யூகித்துக் கொள்!'' என்றான் தனஞ்செயன்.

அவனுடைய இந்த முத்தாய்ப்பான வார்த்தைகளை எண்ணியபோது இப்போதும் அனுபமாவுக்குக் கவலைக்கிடையேயும் சிரிப்பு வந்தது. அந்த நகைப்பொலி அருகில் இருக்கும் மைக்கேலின் காதுக்குக்கூட எட்ட முடியாதபடி அதே சமயம் ஒரு ஜெட் விமானம் புறப்பட்டு விண்ணைச் சாடும் அசுர ஓசை கேட்டது. கென்னடி சர்வதேச விமான நிலையத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்து விட்டதை அந்தச் சத்தம் உணர்த்தியது.

18. அபசகுனம்

அனுபமாவை அழைத்துக்கொண்டு இந்தியா திரும்ப வேண்டும் என்ற கட்டளையை நிறைவேற்றும்போது அவளும் தானும் காதலர்களாகத் திரும்பினால் அவளைத் தான் அழைத்துச் செல்வது பற்றிச் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்க யாருக்கும் தோன்றாது என்று திட்டமிட்டிருந்தான் தனஞ்செயன். வர்த்தக நிமித்தம் வந்த தனஞ்செயன் எங்கு ஏற்றுமதியுடன் காதல் இறக்குமதியிலும் இறங்கியிருக்கிறான் என்றுதான் அதுபற்றி யோசிப்பவர்களுக்கு எண்ணத் தோன்றும். ரசிப்பார்கள்! அனுபமாவின் காதலை உண்மையாகவே தன்னால் பெற முடியும் என்று நம்பினான் தனஞ்செயன். உடனடியாக அது முடியாமல் போகலாம். காலதாமதமாகலாம். என்றாலும் அவளை இந்தியாவுக்கு உதவ அங்கு வந்து பணியாற்றுமாறு வற்புறுத்திச் சம்மதிக்க வைத்த பின், காதலிப்பதாக நடிக்கவேனும் அவள் ஒப்புதலைப் பெறுவது அசாத்தியமாகாது. பாதுகாப்பு நிமித்தம் இது அத்தியாவசியம் என்றால் அவள் மறுக்கப்போவதில்லை.

இந்த நோக்கில்தான் அவன் அனுபமாவின் காரில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த ஒலிபரப்புக் கருவியைக் கண்டுபிடித்ததும் அப்போதே நாடகமாட ஆரம்பித்து அவள் ஒத்துழைப்பையும் சமிக்ஞையால் கோரிப் பெற்று விட்டான். மறுபுறத்தில் தங்கள் உரையாடலைக் கேட்பவன் நாணக்கூடிய அளவுக்குக் காதல் மொழி பேசினார்கள். அதில் அவன் மனம் முழுமையாக ஈடுபட்டுத் தன் வசமிழந்தபோதிலும் அனுபமா நடிக்க மட்டுமே செய்தாள் என்பதையும் அவன் புரிந்து கொண்டிருந்தான். ஆயினும் நடிப்பு நிஜமாக மாற அதிக காலதாமதமாகாது என்று கணக்குப் போட்டான்.

இப்போது அனுபமா மட்டும் தன்னுடன் இந்தியா வந்து பயனில்லை, மைக்கேலும் உடன் வந்தாக வேண்டும் என்கிற நிலை உருவான பின் ஒரு சிக்கல். இந்தப் பயணத்தின்போது அவள் மைக்கேலுடன் அதிகமாக இழைவாளா? அல்லது தன்னுடன் ஒன்றிப் பழகுவாளா? '' என்னைக் கண்காணித்து வரும் எதிரிகள் நம்மைக் காதலர்கள் என்றே எண்ணி வருவார்கள். அப்படி அவர்கள் நம்பும்படி ஏற்கனவே நாம் நாடகமாடி இருப்பதால் அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும்'' என்று தனஞ்செயன் வாதாடினான். ''மைக்கேலுக்கும் உனக்கும் இடையே உள்ள நட்பை அவர்கள் அறிந்திருந்தாலும் என்னைத்தான் நீ காதலிக்கிறாய் என்று அவர்கள் நம்புகிறார்கள். எனவே இந்தப் பயணத்தின் போது நீ என்னுடன்தான் அதிகமாக ஒட்டி உறவாடுவது பொருத்தமாயிருக்கும்'' என்றான்.

அவள் இதற்கு நிச்சயமாக 'முடியாது' என்று மறுத்து விட்டாள். ''மைக்கேலை நான் ஏமாற்றப் போகிறேன் என்ற எண்ணமே என் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கிறது. அதற்கும் மேல் அவர் மனமுடைந்து போகுமாறு நான் நடந்து கொள்வேனேயானால் பிறகு என்னை நானே மன்னித்துக் கொள்ள முடியாது. உங்களைக் காதலிப்பதாக நான் நடிக்கப்போய், அது வெறும் நடிப்பு என்பது அவருக்கும் தெரிய வராதபோது அவர் நெஞ்சம்



கலப்பட எமன்

இந்தியாவில் விற்கப்படும் உணவுப் பொருட்களில் அறுபது சதவிகிதம் கலப்படம். கலப்பட உணவுப் பொருட்களைச் சாப்பிட்டு நமது நாட்டில் சென்ற ஆண்டு உயிரிழந்தவர்கள் ஆயிரத்து ஐம்பது! —ஹிம்மத்
—பாலி

ரொம்ப வேதனைப்படும். மேலும் இதுவே உங்கள் திட்டத்துக்கும் இடையூறாகிவிடலாம்.. என்னுடன் உல்லாசமாக இந்தியாவைச் சுற்றிப் பார்த்து விடுமுறையைக் கழிக்கலாம் என்கிற ஆசையில்தானே அவர் இப்போது புறப்பட்டு வருகிறார்? அந்த ஆசை நிராசையாகுமென்று அவர் உணர்ந்தால் கடைசி நிமிஷத்தில் அவர் தம் பயணத்தை ரத்து செய்து விட்டாலும் ஆச்சர்யமில்லை!''

தனஞ்செயன் இந்தத் தர்க்க வாதத்தில் உள்ள நியாயத்தை மறுக்க முடியாமல் அவள் போக்குப்படியே விட்டு விட்டான். டிக்கட்டுகளைத் தானே மூவருக்குமாகச் சேர்த்து வாங்கிவிட முடியுமென்றாலும் அதிலும் சந்தேகங்களைத் தவிர்க்க அனுபமாவிடம் சொல்லி அவளையும் மைக்கேலையும் தனித்தனியே அவரவர் பணத்தில் வாங்கச் செய்தான். ''விமானத்தில் ஏறு முன்னர் ஆசனங்கள் அருகருகே இருப்பதுபோல் 'போர்டிங் பாஸ்' வாங்கிக் கொள்ளலாம்'' என்றான்.

காரிலே காதல்மொழி பேசிக் களித்த தாங்கள் திடுமென்று சற்று விலகி யிருப்பதும் அனுபமா தன்னைச் சற்று ஒதுக்கிவிட்டு மைக்கேலிடம் அதிகக் கருத்தும் கரிசனமுமாக நடந்து கொள்வதும் தன் எதிரிகளிடம் சந்தேகத்தை எழுப்பும் என்று அஞ்சினான் தனஞ்செயன். காரில் டிரான்ஸ்மிட்டர் கருவியை வைத்தவர்கள், தன் அறையைச் சோதனையிட்டவர்கள் இன்னமும் தன்னைச் சதா கண்காணிப்பில் வைத்திருக்கவில்லை என்பது என்ன நிச்சயம்?


ஆனால் ஒன்று, இதோ தனது லட்சியத்தின் இறுதிக் கட்டத்தை நெருங்கியாகி விட்டது. எதிரிகள் விழிப்படைந்து செயலில் இறங்கு முன் தாம் விமானம் ஏறிப் பறந்து விடலாம்!

இப்படி நம்பிக்கையோடு எண்ணி முடிப்பதற்குள்ளேயே அது அவநம்பிக்கையாகி விடுமோ என்று அவன் கருதுவதற்குரிய நிகழ்ச்சிகளும் நடந்து விட்டன.

டிக்கெட்டுகளைக் காட்டி, பெட்டிகளை எடை போடச் செய்து, விமானத்துள் நுழைய பாஸ் பெற்றுக் கொள்ள அவர்கள் டி. டபிள்யூ. ஏ. விமான நிறுவனத்தின் 'கவுண்டர்' எதிரே க்யூவில் நின்றார்கள். மூவரில் கடைசியாக நின்ற தனக்குப் பின்னால் ஒரு நீக்ரோ வந்து சேர்ந்துகொள்வதைக் கவனித்தான் தனஞ்செயன். சாதாரணமாக இதில் ஐயமுறுவதற்கு ஒன்றுமே இல்லைதான். ஆனால் ஹோட்டலில் தன்னைத் தாக்கிவிட்டுத் தப்பி ஓடுமுன் ஓரிரு கணங்கள் வெறித்து நோக்கிய வெறுப்பை உமிழும் கண்களைத் தனஞ்செயன் இன்னும் மறக்கவில்லை. அந்தக் கண்கள் இல்லை இவை — நிச்சயம். முகச் சாயலில் ஓரளவு ஒற்றுமை இருப்பது போல் அவனுக்குத் தோன்றியது. ஆனால் எந்த நீக்ரோதான் இன்னொரு நீக்ரோ போல் ஓரளவுக்கு இல்லை? தனஞ்செயன் யதேச்சையாகப் பார்ப்பது போல் திரும்பியபோது உயர் ரக ஸூட் அணிந்து கௌரவமாகத் தோற்றமளித்த அந்த நீக்ரோ, அமைதியாகப் பண்புடன் புன்னகை புரிந்தான். தனஞ்செயனும் பதிலுக்குப் புன்னகை புரிந்து விட்டு, 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற பழமொழியை நினைவுபடுத்திக் கொண்டான். அதே சமயம் அந்த நீக்ரோவுக்குப் பின்னால் அப்போதுதான் வந்து நின்ற மற்றொருவன் மீது அவன் பார்வை மோதியது. அவன் நீக்ரோ அல்ல; வெள்ளைக்காரனும் அல்ல. இரண்டும் சேர்ந்த கலப்பு ரத்தம் அவன் உடலில் ஓடியது என்பது பளிச்சென்று புரிந்தது. தனஞ்செயனின் பார்வை தன்மீது விழுவதை விரும்பாதவன் போல் அவன் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டான்.

இவர்களை, இங்கு இந்த நேரத்தில் சந்திக்க நேர்ந்தது தனஞ்செயனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவர்கள் தனக்கோ அல்லது தன்னுடன் பயணப்பட இருக்கும் விஞ்ஞானிகளுக்கோ தீங்கு இழைக்க வருகிறார்கள் என்று கருதச் சிறிதும் இடமில்லை என்றாலும் அவனுக்கு என்னவோ இது ஓர் அபசகுனம் மாதிரிப் பட்டது. **(தொடரும்)**

சிறந்த 'டெரீன்' சூட்டிங்குகளின் அறிகுறி, எஸ். குமார் என்னும் பெயருள்ள குறி!



நவீன காலத்துக்கேற்ற மேன்மையான மனம் கவரும் துணிகள்! கைஃபி, மதுரா மற்றும் லக்ஷ்மி விஷ்ணு போன்ற பிரபல நிறுவனங்களின்மூலம் உருவான அழகிய 'டெரீன்' சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள் மற்றும் புடவைகளை வழங்குகின்றனர்: எஸ். குமார்.

நாடெங்குமுள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுடன் நாங்கள் கொண்டுள்ள பரவலான நெருங்கிய தொடர்புகளின் மூலம் கிடைத்துள்ள தகவல்கள், உங்கள் விருப்பத்தை அறிந்து கொள்ள உதவியிருக்கின்றன. இதனால் உங்கள் விருப்பமே எங்கள் விருப்பும்.

வாழ்க்கையின் வண்ண ஜாலங்களில் ஊறிய உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற துணிகளின் அறிகுறி, அழகு தோய்ந்த ஓர் அனுபவத்தின் மறு பெயர்தான்: எஸ். குமார்.

எஸ்.குமார் ® ரஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

'டெரீன்' சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள் மற்றும் புடவைகளுக்கு ஒரு நம்பகமான பெயர்.

எஸ். குமார், நிரஞ்சன், 99, மெரீன் ட்ரைவ், பம்பாய்-400 002

SISTA'S–SK–3027–TAM



பரீட்சைகளில் வெற்றி பெறும் வித்தை மட்டுமல்ல, நல்வாழ்க்கைக்கான வித்தைகளும் உதயமாகும் வித்யோதயா பள்ளிக் கட்டிடம்.

கல்வி என்பதன் கருத்து என்ன?

பல சோதனைகளைக் கடந்து ஐம்பது ஆண்டுகளாகப் பெண் கல்விக்குச் சீரிய பணியாற்றி வந்துள்ள வித்யோதயா, மார்ச் 7-ம் தேதி பொன்விழாக் கொண்டாடுகிறது.

தியாகராயநகரில் பதின்மூன்று ஏக்கரா நிலப் பரப்பினிலே, மரங்களடர்ந்த கவினுறு சூழலிலே கம்பீரமாக எழுந்து நிற்கின்றன 'வித்யோதயா' கல்விக் கூடத்தின் கட்டடங்கள். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற கருத்துப் பரவலாக நிலவி வந்த காலத்தில் அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்பு, தரமான கல்வி அறிவு பெண்களுக்கும் இன்றியமையாதது என உணர்ந்து, அதனை விழைவோர் அனைவருக்கும் குறைவற வழங்க வேண்டும் என்ற தணியாத வேட்கை திருமதி எலிசபெத் சுவர்ணம் அப்பாசுவாமியின் உள்ளத்திலே எழுந்ததன் விளைவாக உருப்பெற்றதுதான் 'வித்யோதயா''.

ஏறக் குறைய 1300 பெண்கள் தரமுயர்ந்த கல்வியுடன், தன்னம்பிக்கையும், கலைப் பயிற்சியும், பொது அறிவும் — சுருங்கக் கூறின் வாழும் வகையையே அறிந்து பயன் பெற உதவும் இப்பள்ளி பல்லாவரத்தில் தொடங்கப் பெற்றபோது இதில் சேர்ந்து பயின்றவர்கள் மூன்றே பேர்! பள்ளியின் முதல்வராகப் பொறுப்பேற்றவர் திருமதி கே. சத்தியநாதன். 'வித்யோதயா' என்ற அழகிய, பொருத்தமான பெயரை இப்பள்ளிக்குச் சூட்டியவரும் அவரே. திருமதி சுவர்ணம் 1924ல் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் சென்றிருந்தபோது, பல்லாவரத்திலே வளர்ந்து வரும் பள்ளிக்குப் பொருளுதவி தேடி அலைந்த அலைச்சல் கொஞ்சநஞ்சமன்று!

1934 முதல் 1970 வரை 'வித்யோதயா' வின் தலைமையாசிரியையாகப் பணியாற்றி வந்துள்ளவரும் திருமதி சுவர்ணம் அப்பாசுவாமியின் குமாரியுமான மிஸ். விமலா அப்பாசுவாமி இப்பள்ளியின் வளர்ச்சி பற்றிக் கூறுகிறார்: ''முதன் முதலாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்ற மகளிருள் என் தாயாரும் ஒருவர். புனாவில் எபிஃபானி பள்ளியில் அவர் பயின்று வந்த போதே சென்னையில் நல்லதொரு பெண்கள் பள்ளியை உருவாக்கும் ஆசை அவருள் எழுந்தது. பி. ஏ. பட்டம் பெற்றதும் அரசாங்க உத்தியோகம் அன்னைக்குக் கிட்டியபோதிலும் அதனை ஏற்றுக் கொள்ளாமல் ரூ. 50 சம்பளத்தில் பண்டித ரமாபாயின் 'முக்தி' என்ற நிறுவனத்திலே இளம் விதவைகளுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் பணியினை ஏற்று நடத்தி வந்தார். 1907ல் வழக்குரைஞரான என் தந்தை பால் அப்பாசுவாமியை அவர் மணந்து சென்னையிலே வசிக்கத் தொடங்கினார். 1924ல் பல்லாவரத்தில் இப் பள்ளியைத் தொடங்கும் வரையில் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.''



சிறுமிகளின் மணிப்புரி நடனம்.

பல்லாவரத்திலிருந்து 'வித்யோதயா' சாந்தோமுக்கும் பிறகு நுங்கம்பாக்கத்துக்கும் கடைசியாக மாம்பலத்துக்கும் இடம் பெயர்ந்தது.

''1932 — 33ல் என் தாயார் சென்னை நகராட்சி மன்ற உறுப்பினராக நியமனம் பெற்றதும், நகராட்சி மன்றத்துக்குச் சொந்தமாக இருந்த இந்தப் பதின்மூன்று ஏக்கரா நிலத்தை ரூ. 12,000க்கு விலைக்கு வாங்கினார், பள்ளிக்காக. முழுத் தொகையையும் ஒரே தடவையில் செலுத்தப் போதிய பண வசதி இல்லாமையால், மாதம் ரூ. 2000 வீதம் தவணை முறையில் செலுத்தி இடத்தை ஆர்ஜிதம் செய்யும்படி இருந்தது. இதற்கென இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் பல நிகழ்த்தி நிதி திரட்டி நகராட்சி மன்றத்துக்குப் பணம் செலுத்திவிட்டுக் கட்டடங்கள் எழுப்பும் பணியையும் மேற்கொள்ளும்படியிருந்தது.''

தனித் தன்மையுடன் செயல்பட்டு வரும் வித்யோதயாவின் சிறப்புக்கள் பல. ''பாடங்







இடமிருந்து வலமாக: திருமதி சொர்ணம் அப்பாசாமி, மிஸ் விமலா அப்பாசாமி, இன்றைய தலைமை ஆசிரியை மிஸ் ஜொர்க்.

கலைப் போதிப்பது மட்டுமே பள்ளியின் பணி என்றால் அது முழுமையான பலனைத் தராது. பெண்களிடம் இயல்பாக உள்ள திறமையை அறிந்து அவர்களை அந்தத் துறைகளில் ஊக்கு வித்து வருங்காலத்தில் சிறந்த தாய்மார்க ளாகவும், பிரஜைகளாகவும் திகழ உதவும் பணியினை இங்குள்ள ஆசிரியைகள் மேற் கொண்டுள்ளனர்'' என்கிறார் தற்போதையத் தலைமை ஆசிரியை மிஸ். ஜி. ஜொர்க். அமெரிக்காவிலுள்ள ஸிராக்யூஸ் பல்கலைக் கழகத்தில் பள்ளி நிர்வாகத் துறையில் எம். ஏ. பட்டம் பெற்றவர் இவர்.

''ஒழுங்கு முறை, கட்டுப்பாடுகளைப் பெண் களின் மீது ஆசிரியைகள் யாரும் இங்கு திணிப்பதில்லை. அவர்களாகவே தங்களுக்குள் ஒழுங்குமுறையை வகுத்துக்கொள்ள நாங்கள் வழிகாட்டி உதவுகிறோம். மாணவிகளுக்குப் பல கலைச் சங்கங்கள் இங்கு உள்ளன.

''ஐ. நா. கலாசார நிறுவனத்துடன் வித் யோதயா இணைந்து செயல்படும் பள்ளியாத லால் மேலை நாட்டு மாணவிகள் இங்கு வந்து பயில்கின்றனர். கனடா, அமெரிக்கா, பிரிட் டன்போன்ற நாடுகளிலிருந்து ஆசிரியைகளும் இங்கு வந்து பயிற்சி அளிக்கின்றனர். நாடு முழுவதிலுமுள்ள பெண்கள் — அவர்கள் எம் மொழி பேசுபவராயினும் — இங்கு பயில வாய்ப்பு அளிப்பதால் பயிற்சி மொழி ஆங் கிலமாக உள்ளது. ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, தமிழ் ஆகியவை இரண்டாவது மொழியாகப் பயிற்றுவிக்கப் படுகின்றன'' என்கிறார் மிஸ். ஜொர்க்.



மாணவியர் தலைவி குமாரி புஷ்பா, ''நான் ஒரு வித்யோதயா மாணவி என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். கிண்டர் கார்ட்டன் வகுப்பிலிருந்தே இங்கு தான் படித்து வருகிறேன். கைவினைப் பொருள்கள் உருவாக்குவதிலிருந்து கோலம் போடுவது வரையில் எவ்வளவோ துறை களில் எங்களுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படு கிறது'' என்கிறார்.

''எந்த ஆங்கில நூலாசிரியர் உங்களுக்குப் பிடிக்கும்?'' என்று கேட்டவுடன் ''ஏ. ஜே. க்ரானின்'' என்று பளிச்சென்று பதில் கூறு கிறாள் குமாரி புஷ்பா.

ஐந்தாவது வகுப்பில் பயிலும் சிறுமி எலிஸ பெத் மார்ட்டினின் தாய்மொழி மலையாளம். ''வள்ளத்தோள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கி றாயா?'' என்கிறேன்.


''ஓ! மகா கவியாயிற்றே!'' என்கிறாள் எலிசபெத்.

''உனக்கு இப்பள்ளியில் உள்ள ஆசிரியை களுள் யாரை மிகவும் பிடிக்கும்?'' என் கிறேன். ஆசிரியைகள் அனைவரின் பெயரை யும் கடகடவென்று ஒப்பிக்கிறாள் சிறுமி, எல்லாரையுமே தனக்குப் பிடிக்கும் என்ற வகையில்! ''ஞாயிற்றுக் கிழமைகளில் நீ என்ன செய்வது வழக்கம்?'' என்று கேட்ட தும், ''காலையில்! மலையாள மனோரமா படிப் பேன். பத்து மணிக்குச் சர்ச்சுக்குப் போவேன். சாப்பிட்டுவிட்டுப் பாடப் புத்தகங்கள் படிப் பேன். 'பாலரமா' பத்திரிகையும் படிப்பேன்'' என்று மணிக்கு மணி தன் அலுவல்களை அட்டவணை போட்டுக் கூறுகிறாள் சிறுமி மார்ட்டின். பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

— **ருக்மிணி பாலகிருஷ்ணன்**

விளையாட்டிலே ஊக்கம்! விஞ்ஞானத்திலே ஆர்வம்!





ஒளியூட்டிய கை!

அன்னம்.

மாலைப் பிரார்த்தனைக்காக மாதா கோவிலுக்குப் போயிருந்த தங்கம் வாசலில் நின்றிருந்த ஸ்கூட்டரைப் பார்த்தவுடனே தன் கணவன் வீடு திரும்பி விட்டான் என்பதை உணர்ந்து கொண்டாள். அவன் அறையில் ஏன் இன்னும் விளக்கு எரியவில்லை?

தன்னுடன் வந்தவர்களிடம் அவசரம் அவசரமாக விடைபெற்றுக் கொண்டு தங்கம் உள்ளே நுழைந்தாள். சேகரை எங்கும் காணவில்லை. அவன் அறைக் கதவு திறந்திருந்தது. உள்ளே சென்று விளக்கைப் பொருத்தினாள்.

ஜன்னல் ஓரமாக ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடி சிகரெட்டும் கையுமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் சேகர். அந்த அறையில் தங்கம் பொருத்திய விளக்கின் ஒளிகூட அவன் எண்ண ஓட்டத்தைத் திசை திருப்பவில்லை.

சில நாட்களாக அவன் அப்படித்தான் இருக்கிறான். காரணம் தங்கத்துக்குத் தெரியும். தான்தான் அவனை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டதாக அவள் பலமுறை வருந்தியிருக்கிறாள்.

கல்லூரி விழா ஒன்றில் முதன் முதலில் சேகரைச் சந்தித்தது. அவனிடம் அவள் கொண்ட ஈடுபாடு காதலாகப் பரிணமித்தது. ஒரு நாள் துஷ்டப் பிள்ளை கட்டவிழ்த்துக் கொண்டது போல் ஏற்பட்ட மன எழுச்சியில் விளைந்த தவறு — ஆகியவை அவள் கவனத்துக்கு வந்தன.

சேகர் சிறிதுகூடத் தயங்கவில்லை. மறுதினமே ஊர் அறிய அவளை மணந்துகொண்டு விட்டான். திருமணம் முடிந்தவுடன் தன் பெற்றோர்களுக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான் — அவர்கள் தன்னை மன்னிப்பார்கள் என்ற நம்பிக்கையில்.

அந்த நம்பிக்கை பொய்த்து விட்டது. தாலுகா அலுவலகத்தில் சேவகனாக இருந்தார் அவன் தந்தை பஞ்சாட்சரம். திருநெல்வேலி வேளாளப் பிள்ளை அவர். ஒரே மகனை சேகரைத் தம் சக்திக்கு மீறிச் செலவழித்துப் படிக்க வைத்தார்.

கடைசி இரண்டு ஆண்டுகள் அவன் படிப்புக்குப் பணம் போதவில்லை. ஊரில் பெருந்தனக்காரரான சிதம்பரம் செய்த உதவியால் சேகர் தொடர்ந்து படித்து முடிப்பது சாத்தியமாயிற்று.

அதற்குக் கைம்மாறாக— இல்லை — நன்றிக் கடனாகப் பஞ்சாட்சரம் சிதம்பரத்துக்குத் தம் தோலைச் செருப்பாகக் கூடத் தைத்துப் போடத் தயாராக இருந்தார். சிதம்பரம் அத்தனை சிரமத்தை அவருக்குக் கொடுக்கவில்லை. தம் மூத்த மகளான மீனாவை, அவர்கள் வீட்டில் விளக்கேற்ற அனுமதித்தால் போதும் என்று சொன்னார். பஞ்சாட்சரத்துக்குத் தம் பிள்ளை மேல் அத்தனை நம்பிக்கை. சிதம்பரம் நிச்சயதார்த்தத்துக்கு ஏற்பாடு செய்யலாமென்றும், தம் பிள்ளைக்குக் கடிதம் எழுதி உடனே ஊருக்கு வரச் சொல்வதாகவும் உறுதியாகக் கூறிவிட்டுத் தாம் வீடு திரும்பியிருந்தார்.

அவர் கடிதம் எழுத உட்காரு முன்பே சேகர் எழுதிய கடிதம் அவருக்குக் கிடைத்தது. பஞ்சாட்சரம் எதுவுமே பேசவில்லை. புறக்கடைக்குப் போய்க் கிணற்றிலிருந்து பத்து வாளித் தண்ணீரைத் தம் தலைமேல் ஊற்றிக் கொண்டார்.

''ஞானம்! எல்லாம் முடிந்து விட்டது!'' என்றார் ரத்தினச் சுருக்கமாக.

சேகர் ஒரு வாரம் காத்திருந்து பார்த்தான். தந்தையிடமிருந்து கடிதம் ஏதும் வரவில்லை. தன்னுடன் தங்கத்தையும் அழைத்துக் கொண்டு ஊருக்குப் போனான்.

வண்டியிலிருந்து இறங்கித் தன் வீட்டு வாசற் படிகளில் ஏறியவன் கண்களில் நெஞ்சை உறைய வைக்கக் கூடிய காட்சிதான் தெரிந்தது. ஒரு முக்காலியின் மேல் ஏறி நின்று தம் கழுத்தில் உத்தரத்திலிருந்து தொங்கிய சுருக்கை மாட்டிக் கொள்ளத் தயாராக நின்றார் பஞ்சாட்சரம்.

''ஞானம்! அந்தப் பயல் இன்னும் ஓர் அடி வீட்டுக்குள் எடுத்து வைத்தான் என்றால் நான் நிச்சயம் தொங்குவேன். இது காந்திமதி சத்தியம்!'' என்றார் அவர்.

ஞானம் கண்களில் நீர் மல்கக் கரங்கள் இரண்டையும் கூப்பித் தன் பிள்ளையை அங்கிருந்து போகும்படி கெஞ்சினாள்.

சேகரும் தங்கமும் திரும்பி விட்டார்கள்.

சேகருக்கு நல்ல வருமானம் வந்தது. தன் தந்தை வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்ட

தாகவும் ஜீவனத்துக்குச் சிரமப்படுவதாகவும் கேள்விப்பட்டான்.

தன் தாயின் பெயருக்கு ரூபாய் ஐந்நூறு அனுப்பி வைத்தான்.

தபால்காரர் — அவர் எதைக் கண்டார், பாவம் — மணியார்டர் பாரத்தைப் பஞ்சாட்சரத்திடம் நீட்டியிருக்கிறார். பஞ்சாட்சரம் கோபத்தில் அதை வாங்கித் தூள்தூளாகக் கிழித்துப் போட்டு விட்டார். தபால்காரர் பதறிப் போனதைப் பார்த்த பிறகுதான் தம் செய்கையின் விபரீதத்தை உணர்ந்து வருந்தினார். தபால் ஆபீசுக்குப் போய் மன்னிப்புக் கேட்டுவிட்டுத் திரும்பினார்.


சேகரின் நிலை பரிதாபத்துக்குரியது. தான் காதலித்துக் கைப்பிடித்த மனைவியிடம் குற்றம் காண முடியவில்லை. அதே சமயத்தில் தன்னை மலைபோல் நம்பியிருந்த பெற்றவர்களுக்குத் துரோகம் செய்து விட்டோமோ என்றுபயந்தான். அவர்கள் மனம் பட்ட வேதனைதானோ என்னவோ — எதற்குப்



பார்த்து அவசரம் அவசரமாகக் கல்யாணம் செய்து கொண்டார்களோ — அந்தக் குழந்தை உயிருடன் பிறக்கவே யில்லை. திருமணம் மூன்று நான்கு ஆண்டுகள் கழித்துக்கூட அவர்கள் இன்னும் இருவராகவே இருந்தார்கள்.

சென்ற வருஷம் ஒருநாள் தன் தாயாருக்கு உடல் நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டான் சேகர். உடல் பதறியது. மாதக் கடைசியில் எத்தனை நாட்கள் அவன் அவனுக்குப் பாலும் சோறும் வைத்துத் தான் வெறும் நீராகாரத்துடன் திருப்திப்படுத்திக் கொண்டு இருந்திருக்கிறாள்? அந்தத் தாயின் நினைவு அவனுக்கு அடிக்கடி வந்தது.

ஊருக்குப் போகத் துணிவு இல்லை. தனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் அந்த ஊரில் இருப்பது கவனம் வந்தது. அவருடன் தன் தாயின் சிகிச்சைக்காக டெலிபோனில் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்தான். பஞ்சாட்சரத்துக்குக் கூர்மையான அறிவு. காலையில் போய்க் கூப்பிட்டபோது பணம் ஒன்றையே பிரதானமாக வைத்து மறுத்த டாக்டர் மாலையில் தாமாகக் கார் போட்டுத் தேடிக்கொண்டு வந்தால்? அவரைப் பின்னிருந்து எந்தச் சக்தி உந்தி யிருக்கிறது என் பதைச் சுலபத்தில் ஊகித்து விட்டார். ''நான் பார்த்த வேலையில் எத்தனையோ பேர் எப்படி எப்படியோ நடந்து கொண்டு வருகிறார்கள். ஆனால் நான்கண்ணியம் தவறியதுஇல்லை. எவரிடமும் எதற்காகவும் கைநீட்டியது இல்லை. அந்தப்பழக்கம் எனக்கு அறுபது வயதில் வர வேண்டாம்!'' என்று திடமாக மறுத்தார்.



காந்தியவாதி. அவ்வளவுதான்!

"நான் ஒரு சாதாரண, உண்மையான காந்திய வாதி. என் சொத்துக்களைப் பற்றிக் கூற எனக்குப் பயமில்லை. என் சொத்தின் மதிப்பு 2,46,31,287 ரூபாய் அவ்வளவுதான்."

-ஒரு காங்கிரஸ் அமைச்சர் கூறுவதாக

பாலி — டைம்ஸ் ஆப் இந்தியா கார்ட்டூன்

அந்தச் சிதம்பரம் கூட நேரில் வந்து சொல்லிப் பார்த்தார். "இதோ பாரும் பிள்ளைவாள்! முடிச்சுப் போடறவன் மேலே இருக்கான். என் மகளுக்கு உங்கள் வீட்டில் வாழக் கொடுப்பினை இல்லை. மகனையும் தாயையும் கடைசி நேரத்தில் பிரிக்காதீங்க. அவன் நெஞ்சு வேகாது!" என்று மன்றாடிப் பார்த்தார்.

"உமக்குத் தெரியாது. என்னிக்கு அவன் அப்படிக் கடுதாசி எழுதினானோ, அன்னிக்கே எங்கள் ரெண்டு பேர் நெஞ்சும் எரிந்து சாம்பலாயிற்று!" என்றார் அவர்.

கடைசியில் ஞானம் தன் பிள்ளையைப் பார்க்காமல்தான் விழிகளை மூடினாள். மூன்றும் மனிதர் மூலமாகச் சேகருக்கு அவள் இறந்த செய்தி எட்டியபோது, அவள் போய் நான்கு நாட்களாகி விருந்தன.

சேகர் கதறினான். தங்கத்தால் அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை. "உன்னால் தான் இவ்வளவும்" என்று ஒருமுறை அவனைச் சுட்டிக்காட்டி விருந்தாலும் அவனுக்கு எத்தனையோ நிம்மதியாக இருந்திருக்கும். ஆனால் அவனோ மௌனமாகத் தனக்குத் தானே மருகிப் போனான்.

தன் தாயார் இறுதியாக ஐக்கியமான அந்தப் புனிதமான இடத்தில் ஒரு மாலையை இரவோடு இரவாகத் தன் கண்ணீரால் நனைத்த பின்னர் அர்ப்பணித்துத் திரும்பினான். மறுநாள் காலை அந்த மாலையைப் பார்த்த பஞ்சாட்சரம் தம் கைத்தடியால் அதை எடுத்துச் சாக்கடையில் வீசினார்.

தன் கணவன் பின்னால் நின்று பார்த்த தங்கம் அவன் தோள்களை மெதுவாகத் தொட்டாள்.

"நீ எப்போது வந்தாய்?" என்று கேட்டான் சேகர், உறக்கத்திலிருந்து விழித்து விட்டவன்போல.

அவன் கண்களில் வழிந்திருந்த நீரைக் கண்ட தங்கம் பதறினாள். "கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மன உளைச்சலுக்கு இந்தப் பாவிதானே காரணம்!" என்று வருத்தப்பட்டாள்.

"நீ என்ன செய்வாய்? இது என் தலை விதி!" என்றான் அவன்.

"ஊரிலிருந்து ஏதாவது சேதி வந்ததா?" என்று கேட்டாள் தங்கம். இப்படி அவன் சோகச் சித்திரமாக அமர்ந்திருந்தால் அப்படி ஏதோ நடந்திருக்கிறது என்று அவள் அனுபவம் உணர்த்தியது.

"ஆமாம். ஐயாவுக்குக் கண் பார்வை மங்கி விட்டதாம். யாரிடமும் கைநீட்டக் கூடாது என்ற வீம்பில் பல நாட்கள் பட்டினியாகக் கிடக்கிறாராம். இதைக் கேட்டபிறகு என்னால் ஒரு கவளம் கூடச் சாப்பிட முடியவில்லை. பகல் சாப்பாட்டை அப்படியே திருப்பி விட்டேன்" என்றான் சேகர்.

"ஆமாம்; பார்த்தேன்!" என்றாள் தங்கம்.

"இப்படியே நான் என் ஆயுள் முழுவதும் மருகி மருகித்தான் சாகப் போகிறேனோ, என்னவோ!" என்று எழுந்தான் சேகர்.

டெலிபோன் மணி அடித்தது. எடுத்துப் பேசி முடித்தவன் தங்கத்திடம் திரும்பினான்.

"மறுபடியும் 'காம்ப்' வேலை... மாற்றி மாற்றிப் போய் எனக்கு அலுத்து விட்டது. இந்த முறை போகப் போவதில்லை. நாளைக்குக் காலை வர இயலாது என்று தந்தி கொடுத்து விடப் போகிறேன்" என்றான் சேகர் அலுப்புடன்.

"வேண்டாம். நீங்கள் போய் வாருங்கள். அங்கே போனால்தான் நீங்கள் உங்கள் கவலைகளை மறக்கிறீர்கள். போய் வந்தபிறகு நீங்கள் மனத் திருப்தியுடன் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன்!" என்றாள் தங்கம்.

'**கா**ம்ப்' போய்வந்த சேகர், "தங்கம்! தங்கம்!" என உற்சாகத்துடன் அழைத்தான். அத்தனை அவசரத்துடன் அவன் அதுவரையில் அழைத்ததில்லை.

"என்ன? மறுபடியும் ஏதாவது பிரமோஷனா?" என்று கேட்டாள் தங்கம்.

"இல்லை...மன நிம்மதி... பரம திருப்தி... நான் இனி மனம் தொய்ந்து போக மாட்டேன். ஐயாவைக் காம்ப்பில் பார்த்தேன். அவர் பாதங்களின் மேல் என் கைகளை வைத்து மன்னிப்புக் கேட்டேன். என் மனம் சாந்தி அடையும்வரையில் அவர் பாதங்களைத் தொட்டு என் கண்களில் ஒத்திக் கொண்டேன்.....!"

"என்ன சொல்கிறீர்கள்? ஐயா உங்களுடன் பேசினாரா?" என்று கேட்டாள் தங்கம் உற்சாகத்துடன்.

"இல்லை... நான் அங்கு வந்தது அவருக்குத் தெரியாது. இரண்டு கண்களும் கட்டப்பட்ட நிலையில்தான் அவரை நான் பார்த்தேன். இந்தக் கைகள் எந்த மருத்துவத்தைக் கற்க வேண்டும் என்று விரும்பினாரோ, அதைக் கற்று அந்தக் கரங்களால் — அந்த விழிகளுக்கு ஒளியைத் திருப்பித் தந்துவிட்டேன்" என்றான் சேகர்.


ஆமாம்! பிரபல கண் டாக்டர்களில் ஒருவனாகிய அவன் கண் சிகிச்சை முகாம் ஒன்றில் பணி புரிந்துவிட்டு அப்போதுதான் திரும்பி விருந்தான்!

போஷாக்கு அவசியம்

குழந்தை முதல் முதியோர் வரை குதூகல வாழ்க்கைக்கு

உங்கள் உணவில் பல ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் இருக்கலாம். ஆல்போ-சாங் அக்குறையைப் போக்கி, அச்சத்துக்களை உங்களுக்கு அளிக்கிறது. கால்ஷியம், பாஸ்பேட்டுகள், கனிச்சத்துக்கள், அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள், சக்தி மிக்க இந்திய ஔஷதங்கள் ஆகியவற்றினும் ஆன ஆல்போ-சாங் நல்ல ஆரோக்கியத்தைப் பெற சிறந்த ஒரு டானிக். வளரும் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், வயதானவர்கள் மற்றும் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே ஏற்றது ஆல்போ-சாங்.

ஆல்போ-சாங் நீங்கள் உண்ணும் சாதாரண உணவை முழுமையாக்கி, ஜீரணசக்தியைத் தூண்டி விடுகிறது. உணவுச் சத்துக்கள் உடலில் நன்கு கிரகிக்கப்படுவதற்கு உதவுகிறது. அத்துடன் உங்கள் நரம்புகள் சோர்ந்து விடாதபடி பாதுகாக்கிறது. ஆல்போ-சாங் பவுடர் வடிவிலும், மாத்திரை வடிவிலும் கிடைக்கிறது. மாத்திரைகள் சர்க்கரை சேர்க்கப்படாதவை, எனவே நீரிழிவு நோய் உள்ளவர்களும் சாப்பிடலாம்.





ஆல்போ-சாங்

உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் இயற்கையான ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்கிறது.

ஜே & ஜே. டிஷேன்
லேபொரேட்டரீஸ் பிரைவேட் லிமிடெட்.
ஹைதராபாத்

சென்னைக்கு அடுத்த கும்மிடிப் பூண்டியில் 1953ஆம் வருடம் நிறுவப்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சித்தர்கள் மடத்தைச் சார்ந்த ஜலகண்டீஸ்வரர் ஆலயக் கட்டிடத் திருப்பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இதில் பங்கு பெற விரும்பும் அன்பர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி அளிக்க வேண்டுகிறோம்.

பொருளுதவி அனுப்ப வேண்டிய முகவரி :

சாதுகுரு திருஞானசம்பந்தம்
42, பொன்னப்ப செட்டித் தெரு
பூங்கா நகர், சென்னை - 3

ஸ்ரீ டிராவல்ஸ்

23, ஆண்டர்சன் தெரு, சென்னை-600001
(தொலைபேசி எண் : 33730 & 24518)

வட இந்திய யாத்திரை

அரிய வாய்ப்பு 45 நாட்களில் 10,000 கி.மீ. காசி, கயா, பத்ரி, காஷ்மீர் பஞ்சதுவாரகைகள் மற்றும் 30 முக்கிய தலங்களுக்குச் சென்னையிலிருந்து 15-4-74 அன்று புறப்பட சகல வசதிகள் அடங்கிய பிரத்தியேக ரயில் பெட்டி (CTT S Rly. 4169 II 1127/74) 9-1-74 ஏற்பாடாகி உள்ளது.

பிராட்கேஜ் ரயில் கட்டணம், 2 வேளை சாப்பாடு மட்டும் ரூ. 950/-

வேண்டுமானாலும் காஷ்மீர், பத்ரி, பஞ்ச துவாரகைகள் சென்று வர மேலும் தங்கும் வசதிக்காக மட்டும் ரூ. 360/-

காசி பலகாரங்களும் கிடைக்கும்

செல்லுமிடங்களில் சுற்றுலா ஏற்பாடுகள் உண்டு. வாகன வசதி கட்டணம் தனி.

S. பானு, B. A., (Govt. of India approved Tourist Guide)

குறிப்பு : பதிவுக் கட்டணம் ரூ. 100/- முன் பணமாகச் செலுத்த வேண்டும்

மேடையில் பீடுநடை போட்ட ''டைகர் தாத்தாச்சாரி'' மிகவும் குறுகிய காலத்தில் தயாராகி வெளிவந்திருக்கிறது; பதினைந்து நாட்களில் படமாக்கப் பட்டிருக்கிறது! இதை விட இப்படத்தில் குறிப்பிடத் தக்க அதிசயம் நாடகத்தில் நடித்தவர்களே படத்திலும் நடித்திருப்பதுதான்! சாதாரணமாக ஒரு வெற்றி நாடகம் படமாக்கப்படும்போது மேடையில் நடித்தவர்கள் நீக்கப்பட்டுவிடுவார்கள்; மேடைக் கதையும், திரைக் கதையில் பல மாறுதல்கள் அடைந்து விடும். முதலில் தலைப்பை மாற்றி விடுவார்கள்; பிறகு ஒரு 'பெரிய நடிக'ருக்குக் கதாநாயகன் பாகம் கொடுக்கப்பட்டு விடும். இப்படத்தில் இம்மாறுதல் செய்யப்படாததே பெரிய வெற்றி, அதிசயமும் கூட!

நாடகத்தில் நடித்த மேஜர் சுந்தரராஜனே தாத்தாச்சாரியாக அற்புதமாக நடித்திருக்கிறார். கண்டிப்பும், கறாருமாக நடந்து கொள்ளும் அப்பாத்திரம் உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் விடும் சந்தர்ப்பங்களும் வருகின்றன. சுந்தரராஜன் மிகவும் சிறப்பாக அந்தப் பாத்திரப் படைப்புக்கு ஏற்றம் தருகிறார்.

டைகர் தாத்தாச்சாரியின் மகள் சீதா கடுமையான சோதனைக்குள்ளாகும்பாத்திரம். நாடக நடிகை எம். பானுமதி மிகவும் உருக்கமாக நடித்துப் பாராட்டைப் பெறுகிறார். முதல் படமே அவரது வெற்றிப் படமாக அமைந்துவிட்டதே! சபாஷ் பானுமதி!

(நாடகத்தில் சீதா அவப் பெயருடன் இறந்து விடுகிறாள். நல்ல வேளை, படத்தில் சீதா சாகவில்லை. அந்த மாற்றம் நியாயமானதுதான் என்று எனக்குப் பட்டது.)

சிவகுமார் ஏற்ற பாத்திரம் மிகவும் அருமையானது. தங்கை பருவத் துடிப்பில் ஏமாந்து போனதை அறிந்து பதறிப் போய்ப் பரிகாரம் தேட முயலும் சந்தர்ப்பங்களில் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

நிலக் என்ற மேடை நடிகர் படத்தில் சக்கைப் போடு போட்டு விட்டார். திறமை வாய்ப்பிருந்தால் பளிச்சிடும் என்னும் உண்மை இதன் மூலம் தெளிவாகிறது.

மேடை அனுபவமும் திரைப் பட அனுபவமும் கொண்ட சுகுமாரி மிக இயல்பாக, அருமையாக நடித்திருக்கிறார். டைகர் தாத்தாச்சாரி அகத்து மாமியைப் பார்ப்பது போலவே இருக்கிறது! வக்கீல் வீட்டு அம்பியை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். அற்புதமான நடிப்பு. நகைச்சுவை ததும்பும் இயற்கையான நடிப்பு. ராஜகோபால் திரையுலகில் நல்ல வரவேற்புப் பெறும் புதுக் காமெடியன்! வக்கீலின் மாப்பிள்ளையாக வரும் சசிகுமார் மிகவும் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறார். பி. ஆர். வரலட்சுமி பருவத் துடிப்பில் ஏமாந்து விட்ட பெண்ணாக வருகிறார். ஆனால் நடிப்பில் துளியும் ஏமாந்து விடவில்லை!


சினிமாவுக்காக ஒரு 'கிளப் டான்ஸ்' சேர்த்திருக்கிறார்கள். — இது சினிமா ரசிகர்களை அவமதிப்பது போல் இல்லையா?

டி. கே. டி. துரைராஜனின் கதை, வசனம் சிறப்பான அம்சம். டைரக்ஷன், வி. டி. அரசு. அவருக்கு நமது பாராட்டு.

வக்கீல் குமாஸ்தா பிச்சாமி ஒரு தனிக் 'காரெக்டர்'. 'அண்ணா, நீங்கள் சொல்றது 'சென்ட் பர்சென்ட்' கரெக்ட். ஆனா ஒண்ணு' என்று பாவத்துடன் சொல்லும் அழகு ஒன்றே போதும். வீரராகவன் 'சென்ட் பர்சென்ட்' ஒரு குண சித்திர நடிகர்.

அதிர்ச்சி தரும் சம்பவங்களைப் புகுத்தாமல் உணர்ச்சி ததும்பும் திருப்பங்களைக் கொண்ட படம் செந்தூர் பிலிம்ஸின் ''டைகர் தாத்தாச்சாரி.''

—காந்தன்



ஆசைகள் மடிவதில்லை

கதை: கௌசிகன்

சித்திரம்: சூர்யா..




மேனகா! உன் கணவனை எதற்காகக் கொன்றாய் என்பதை நீ சொல்ல மாட்டாய். நான் சொல்லுகிறேன். அவர் தம் முதல் உயிலை மாற்றி வேறு உயில் எழுதிவிட்டார்...
ஏன்? அவர் அன்பை, ஆசையை நீ நாசமாக்கிக் காலால் மிதித்து அழித்தாய், அதனால் தான். அன்று இரவு அவருடைய காரியதரிசியை இங்கு கண்ட நீ...
..பொறுமைப் பேயாக மாறினாய். குழ வெறியும் குரோதமும் சேர்ந்து கொண்டன. கொலை வெறி, தலை தூக்கியது. கணவனைக் கொன்று விட்டாய்..
... அதன் பிறகு, நீயும் சோமசுந்தரமும் சேர்ந்து அந்தக் கொலையை மல்லிகாவின் மீது சுமத்தி நாடகமாடினீர்கள். இல்லையா மேனகா...?
இல்லை... இல்லை.. நான் என் கணவனைக் கொல்லவில்லை. அவர்கள் என்னைக் குற்றவாளியாக்கப் பார்க்கிறார்களா? நீ இங்கிருந்து போய் விடு.. போ.. போ..!
அவர்கள் என்கிறாளே? ம்... மதுவின் அரவணைப்பில் இவளிடமிருந்து ஏதோ ஓர் உண்மை துள்ளி விழுந்திருக்கிறது...
தொடரும்

இதுதான் என் முடிவு

கே. எஸ். விஜயலக்ஷ்மி



"ஹாய், விதூ!" ஒரு துள்ளலுடன் அரவிந்த் என் அருகில் வந்து நின்றான்.

"ஹல்லோ, அரவிந்த்." — ஒரு மாத இடைவெளிக்குப்பின் அவனைப் பார்த்த மகிழ்ச்சியை முகத்தில் தேக்கியவண்ணம் வரவேற்றேன் அவனை.

"வா, வா! எப்போது வந்தாய், பம்பாயிலிருந்து? ஒரு கடிதாக போடக் கூடாது?" என்று கேட்டேன்.

"கடிதாக என்ன? தந்தியே அடிக்கலாம் என்றுதான் நினைத்தேன். அப்புறம் நீ, "கார்ட் ஆப் ஆனரு"க்கு ஏற்பாடு பண்ணி விடுவாய். எனக்குத்தான் ஆடம்பரம் என்றாலே பிடிக்காதே!" என்றான் அரவிந்த் தன் கண் சிமிட்டியபடியே.

"சரிதான், சமர்த்து வழிகிறது. பம்பாயிலிருந்து எப்போது வந்தாய் என்ற கேள்விக்குப் பதிலைக் காணோம்!"

"இன்று மாலைதான் வந்தேன்."

"சரி, சரி! அப்புறம் பேசலாம். உள்ளே வா!" அரவிந்தை அழைத்துக் கொண்டு உள்ளே போனேன்.

"விதூ! தலையை ரொம்ப வலிக்கிறது. ஒரு மாத்திரை கொண்டு வா. அதோடு ஸ்குவாஷ் என்ற பெயரில் ஏதோ கலர் கலராகத் திரவங்கள் பண்ணி வைத்திருப்பாயே. அதில் கொஞ்சம் கொண்டு வா. நானாவது சீண்டுகிறேன் அதை."

சிரித்துக் கொண்டேன். லாரிடானும் ஸ்குவாஷுமாக நான் வந்தபோது அரவிந்த் தன் கையிலிருந்த பாக்கெட்டைப் பிரித்து ஒரு மால் கலர் ஷிபான் புடவையை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டிருந்தான்.

"ஏய், விதூ! இங்கே வா. இதைச் சுற்றிக் கொள் உடனே. உன் நிறத்துக்குப் பொருத்தமாக ஒரு கலரும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அதனால் எந்தக் கண்ணைறுவிக் கலரானால் என்ன என்று இதைப் பொறுக்கினேன்."

நான் ஒரு கேள்விக் குறியுடன் அவனைக் கூர்ந்து நோக்கினேன்.

"முறைக்காதே, முறைக்காதே! பணம் செலவழித்ததென்னவோ உண்மைதான். ஆனால் அநாவசியமாகச் செலவழிக்கக் கூடாது என்றுதானே சொல்லியிருக்கிறாய்? உனக்கு நான் வாங்கி வருவது அநாவசியச் செலவென்றால் சொல்லு. இப்போதே மூர்மார்க்கெட்டில் எத்துக்கோ பத்துக்கோ விற்று விட்டு வந்து விடுகிறேன்."

அவனுடைய களங்கமற்ற முகத்தைப் பார்த்து எனக்குக் கோபிக்க மனம் வருமா என்ன? என் மனம் இளகிவிட்டதைக் காட்டிக் கொள்ளாமல், "அிருக்கட்டும் அரவிந்த்! உன் அப்பாவுக்கு என்ன வாங்கி வந்தாய்?" என்று கேட்டேன்.

"முட்டு மனுஷன்! அவருக்கு என்ன வாங்கி வருவது?"

அவன் நெற்றியிலிருந்த கையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டேன். அதை மீண்டும் பற்றித் தன் நெற்றியில் வைத்து அழுத்திக் கொண்டான் அரவிந்த்.

"என் விதூவுக்குக் கோபம் வந்தால் காடு கொள்ளுமா? அதுதான் அவருக்கு ஒரு காஷ்மீர் சால்வையும், ரம்பாவுக்கு ஒரு புடவையும் வாங்கிக் கொண்டு வந்தேன்."

"ஓகே. அரவிந்த். நான் சொல்வதைக் கேள். நேரே வீட்டுக்குப் போய் அப்பாவுடனும், ரம்பாவுடனும் கொஞ்சம் பேசிக் கொண்டிரு. பம்பாயைப் பற்றி விரிவாக அவரிடம் சொல். அவருடன் சேர்ந்து சாப்பிடு. என்னதான் ஆள் படை இருந்தாலும் சொந்தப் பிள்ளையாகுமா? நான் நாளைக்கு ஆபீஸில் உன்னைப் பார்க்கிறேன்."

"என்ன விதூ, துரத்துகிறாய்?"


"ப்ளீஸ் அரவிந்த்! நான் சொன்னபடி செய்" என்றேன் குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டு.

"ஆல் ரைட், விதூ!" என்று என் கையை ஒரு முறை குலுக்கிவிட்டு அகன்றான் அரவிந்த்.

*   *   *

இந்த அரவிந்த் இப்படி ஒரு குழந்தையாய் இருப்பான் என்று முதலில் நினைக்கவே இல்லை நான். போன வருடம் என் ஆபீஸில் வேலைக்குச் சேர்ந்த போது 'டிரிம்'மாக உடையணிந்த ஒரு வாலிபனைத்தான் நான் சந்தித்தேன். நான்தான் முதலில் வேலை கற்றுக் கொடுத்தேன். என் அதிகாரி என் முன் அவனை அழைத்து வந்து, "மிஸ்டர் அரவிந்த்! மீட் மிஸஸ் வித்யா ரமணன்" என்று சொன்னதும் கைகளைக் குவித்தான் அரவிந்த். மிக ஆவலுடனும் விரைவாகவும் வேலையைக் கற்றுக் கொண்டான். அவன் 'நீங்கள் உங்கள்' என்று அழைத்ததையும், நானும் அவனை மரியாதையுடன் நடத்தியதையும் இப்போது நினைத்தாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது.

என்னைப் பற்றியும் என் கணவரைப் பற்றியும் கேட்டான். மூன்றாண்டுகளுக்குமுன் எனக்குத் திருமணமானது. ஒரே ஆண்டில் என் கணவரை இழந்தது. தாய் தந்தையர்



கிராமத்தில் இருக்க, கிராமத்துக் கட்டுத் திட்டங்கள் பிடிக்காமல் சென்னையில் கணவரது அலுவலகத்திலேயே வேலை பெற்றது, ஒரு நல்லிதயம் கொண்ட பெண்மணியின் வீட்டில் அவுட் ஹவுஸில் குடியிருப்பது எல்லாவற்றையும் சுருக்கமாகச் சொன்னேன்.

எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்கும் என் மலர்ந்த முகத்தைப் பாராட்டினான். தனக்கும் அந்தப் பெருந்தன்மை வரவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஞாயிற்றுக்கிழமைகளில் என் வீட்டுக்கு வந்தான். என்னை வீணை வாசிக்கச் சொல்லிக் கேட்டான். மிஸஸ் வித்யா வெறும் வித்யாவானாள். இரண்டு மூன்று நாட்களுக்கொரு முறை வந்த போது வித்யாவை வித்தூவாக்கினான். பிறகு தினமும் மாலை நேரங்களில் வரலானான். இப்போது நான் 'ஏய் வித்தூ'வாகிவிட்டேன். 'ஆபீஸை விட வீட்டில் மனம் விட்டுச் சுதந்திரமாகப் பேச-முடிகிறது' என்றான். அவனுடன் பழகுவதில் எனக்கும் ஒருவித மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்பட்டன.

அவனுக்கு யாரிடமும் ஒட்டுதல் இல்லை. வீட்டில் தங்கை ரம்யாவுடனும் தந்தையுடனும் ஏனோதானோவென்றுதான் பழகுவான். ஆபீஸில் நண்பர்களுடனும் அப்படித்தான். ஆனால் உதவி என்று வருபவருக்குக் கைவிரிக்க மாட்டான். தினமும் அவனது ஒவ்வொரு செயலையும் ஒவ்வொரு சொல்லையும் மாலையில் என்னிடம் ஒப்பித்து விடுவான். என்னைத் தவிர யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என்று குறைப்பட்டுக் கொள்வான். யாருக்கும் தன்னிடம் உண்மையான அன்பில்லை என்று வருத்தப்படுவான்.

நான் சொல்வேன்: ''அரவிந்த், மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரி இருப்பார்களா? சிலர் அன்பை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வார்கள். சிலருக்கு வெளியே சொல்லத் தெரியாது. உன் உறவுக்காரர்கள்தானே உன் சுக துக்கங்களில் கடைசிவரையில் பங்கு பெறப்போகிறவர்கள்? அவர்களை அலட்சியம் பண்ணாதே!''

நான் மெதுவாக எடுத்துச் சொன்னதன் பேரில் வீட்டில் அதிகம் தங்க ஆரம்பித்தான். தந்தையுடன் சேர்ந்துஉணவருந்தினான். இப்போதெல்லாம் அவர் தன்னிடம் பிரியமாக இருப்பதாகக் கூறி மகிழ்ந்தான்.

நானும் இரண்டொரு முறை அவன் வீட்டுக்குச் சென்றேன். அவன் தங்கை ரம்யா என்னுடன் ஒட்டிக் கொண்டுவிட்டாள். அவன் தந்தையோ எல்லோருடனும் சிரிக்கச் சிரிக்கப் பேசி வீட்டையே கலகலப்பாக்கினார்.

அவனுக்கும் அவன் குடும்பத்தினருக்கும் இடையே இருந்த திரையை அகற்றிய பெருமையை எனக்கு அளித்தான். இப்போதும் பம்பாயில் இருக்கும் அவன் சகோதரியைக் காண அவனை அனுப்பி வைத்தது நான்தான்.

ஒரு மாத லீவுக்குப் பிறகு அரவிந்த் அன்றுதான் ஆபீஸுக்கு வந்தான். ஆனால்

அன்றே எங்கள் நட்பில் ஒரு நெருடல் ஏற்படும் என்று நான் எண்ணவில்லை. மதிய உணவு வேளையில் பெண்கள் அறை அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு சிலர் என் அருகில் வந்து, "என்ன வித்யா! இன்று சந்தோஷமாய் இருக்கிறாய் போலிருக்கிறதே" என்றார்கள் கண்களைச் சிமிட்டியபடி.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. எல்லோரும் போனதும் வனிதா என் அருகில் வந்தாள். அவள்தான் அலுவலகத்தில் என் நெருங்கிய தோழி.

"சொல்கிறேன் என்று தப்பாய் நினைக்காதே வித்யா. அரவிந்துடன் பழகுவதைக் கொஞ்சம் குறைத்துக் கொள். ஆபீஸிலும் வெளியிலும் உங்களைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று உன் காதால் கேட்டால் தாங்கமாட்டாய் நீ" என்றாள்.

"வனிதா! என்னைப் பற்றித் தெரியாதா உனக்கு" என்றேன் வருத்தத்துடன்.

"தெரிந்ததால்தான் சொல்கிறேன், வித்யா. உன் தூய மனத்தைப் புரிந்து கொள்ள முடியாத கறைபட்ட உள்ளங்கள் இவை. ஊருடன் ஒத்து வாழ வேண்டாமா நீ?" என்றாள்.

நொந்த உள்ளத்துடன் இடத்துக்குத் திரும்பினேன். எனக்காக இல்லாவிட்டாலும் அரவிந்தின் எதிர்காலத்துக்காக எங்கள் சந்திப்பைக் குறைத்துக் கொள்ளத் திட்டம் போட்டேன். அரவிந்த் என் விசித்திர நடவடிக்கைக்கு விளக்கம் கேட்க முற்படவில்லை. ஆனால் இரண்டு பேரும் முள் மேல் இருப்பது போல் இருந்தோம்.

எங்கள் கண்ணாமூச்சி விளையாட்டு தொடங்கி இரண்டு மாதங்களாகிவிட்டன. அன்று அரவிந்தின் பிறந்த நாள். அன்று மாலை அவன் வீட்டுக்கு வருவான் என்று தெரியும். நானும் வீட்டில் தங்கினேன். சுமார் ஐந்தரை மணிக்கு அரவிந்த் வந்தான்.

"சீக்கிரம் கிளம்பு விது. தேவியில் இரண்டு டிக்கெட் புக் பண்ணியிருக்கிறேன்!"

"மன்னித்துவிடு அரவிந்த். நான் வரவில்லை. நீ ரம்யாவை அழைத்துக் கொண்டு போ. இனிமேல் என்னை எங்கேயும் கூப்பிடாதே."

"விது, கடைசியில் நீயும் மற்றவரைப் போலத்தானா? உன் நட்பிருந்தால் உலகமே ஒரு பொருட்டில்லை என்று பெருமையுடன் இருந்த என்னை இப்படித் தவிக்க விடுகிறாயே. இதைத் தவிர எனக்கு வேறு ஏதாவது தண்டனை கொடு. ஆனால் என்னுடன் பேசாமல் மட்டும் இருக்காதே."

என்னால் இதற்கு மேல் தாங்க முடியவில்லை. மனத்தைத் திறந்து கொட்டி விட்டேன். அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டான் அவன்.

"ஆல் ரைட் விது. நாளைக்கு இதற்கு ஒரு முடிவுடன் வரேன். தயாராக இரு" என்று கூறி விர்ரென்று சென்று விட்டான்.

மறுநாள் மாலை ஆறு மணி அளவில் என் வீட்டுக்கு வந்தான் அரவிந்த். உடன் தன் தந்தையையும் அழைத்து வந்திருந்தான்.

"உட்காருங்கள்" என்று நாற்காலியை இழுத்துப் போட்டேன்.

"விது! ஒரு முடிவுடன் வருகிறேன் என்று சொன்னேனில்லையா? கேள். என் அப்பா உன்னைத் தன் மருமகளாக ஏற்றுக் கொள்கிறேன் என்கிறார்."

"அரவிந்த்!" — கத்தினேன் நான்.

"நானும் சொல்லிப் பார்த்து விட்டேன், விது. இவர் கேட்க மாட்டேன் என்கிறார். வித்யாவைவிட அழகான புத்திசாலியான பெண்ணை நான் பிடித்துக் கொண்டு வருகிறேன். அவளையே எனக்குக் கல்யாணம் பண்ணி வையுங்கள் என்றேன். 'அதற்குள் உனக்கு நூறு வயசாகி விடும்' என்கிறார்."

"அரவிந்த்!"

"அது மட்டுமில்லை. நம் அந்தஸ்துக்கு ஏற்றபடி வரதட்சிணை கொடுக்க முடியாதே அவளால் என்றேன். உன் மனமும் குணமும்தான் வரதட்சிணையாம், சீராம். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பிறக்க வேண்டியவர் இருபதாம் நூற்றாண்டில் அதுவும் என் தந்தையாகப் பிறந்து விட்டார். இது நான் பத்தொன்பதாவது நூற்றாண்டில் எடுத்த ஜன்மத்தில் செய்த பாவம்தானே!"

"வழக்கம்போல் விளையாட்டாகப் பேசுகிறான், வித்யா. உன்னை ஏற்கத் தயாராய் இருக்கிறான். இந்த விஷயத்தில் அவன் அளவுக்கு நானும் தீவிரமாக இருக்கிறேன். என் பிள்ளையை எனக்கு மீட்டுக் கொடுத்தவளே நீதான். எங்களுக்கு வாழ்க்கையில் இப்போதுதான் பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நீதான். நேற்று உனக்கு ஏற்பட்ட அவப்பெயரைச் சொல்லி அரவிந்த் வருத்தப்பட்டான்."

இதற்குள் அரவிந்த் குறுக்கிட்டான்: "'ஏனப்பா அவளையே நான் திருமணம் செய்து கொண்டு விட்டால் என்ன? வித்யா எப்போதும் நம்முடனேயே இருப்பாளே. நம் ரம்யாவுக்கு ஒரு மன்னி, ஓர் அம்மா, பீஸ் வாங்காத ஒரு டியூஷன் டீச்சர், உங்களுக்குச் சம்பளம் இல்லாத ஒரு நர்ஸ் எல்லாம் ஒரே கல்லில் கிடைக்குமே' என்றேன். கொஞ்சம் யோசித்தார்."

"மாமா! நீங்கள் யோசித்திருக்கவே வேண்டியதில்லை. நான் அவனை விட வயதில் பெரியவள். ஏற்கனவே கல்யாணமாகி, கணவனையும் இழந்தவள். உடனே அவன் மண்டையில் நீங்கள் இரண்டு தட்டுத் தட்டியிருக்க வேண்டாமா?"

"நான்தான் அவரைவிட நாலு அங்குலம் உயரமாயிற்றே! எப்படித் தட்டுவாராம்?"

"மாமா! முதல் முறையாக நேற்று என் கண்களில் கண்ணீரைப் பார்த்ததும் இவனால் பொறுக்க முடியவில்லை. ஏதோ ஒரு வெறியில் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கிறான்."

"அம்மா, வித்யா! அரவிந்தின் பிடிவாதம் எனக்கு நன்றாகத் தெரியும். அவனை மீண்டும் நான் இழக்க விரும்பவில்லையம்மா. உன்னை மணக்க அவன் சொன்ன விளக்கம் என்ன தெரியுமா? 'மனைவியை இழந்த ஆண்கள் திருமணம் செய்து கொள்ளலாம், கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ளக் கூடாதா? தனக்கு மகளைப் போலவும், பேத்தியைப் போலவும் வயதில் குறைந்தவர்களை ஆண்கள் மணக்கலாமென்றால் தன்னை விட

நாலைந்து வயதே குறைவான ஒருவனை ஒரு பெண் மணக்கக் கூடாதா?' என்றான். அவனுடைய வாதம் எனக்குச் சரி யென்று பட்டது. நீ என்றும் எங்களுடன் இருந்தால் என் வீடு சொர்க்கமாகி விடும், அம்மா!'' என்றார் பெரியவர்.

''அப்பா! அவளுக்கு ஏன் ஐஸ் வைக்கிறீர்கள்? என்னால் அவனைப் பார்க்காமல் இருக்க முடியாது. அவனால் ஊர் அம்பைப் பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால் தான் இந்தக் கல்யாணம்.''

''மாமா! நான் நன்றாக யோசிக்க வேண்டிய விஷயம் இது. நாளைக்கு மாலை அரவிந்திடம் சொல்லி யனுப்புகிறேன்.''

அவர்கள் போனதும் அப்படியே அசைவற்று நாற்காலியில் உட்கார்ந்து விட்டேன். என் தம்பியாய் நினைத்து நான் தொட்டவன், பேசியவன், விளையாடியவன் இனி என் கணவன்! அரவிந்தின் கேள்விக்கு என் விடை ஒன்றுதான். அதை அவன் மனம் நோகாதபடி தெரிவிக்க வேண்டும். என் லெட்டர் ஹெட்டை எடுத்தேன். எழுதினேன்.

''அன்புள்ள அரவிந்த்!

நான் யோசிக்க அவகாசம் கேட்டது என் மனத்தில் உள்ள குழப்பத்தினாலல்ல. உன் மனம் நோகாதபடி என் பதிலை எப்படிச் சொல்வது என்று தீர்மானிக்கத்தான். உன் சகோதரியை மன்னித்தேன் என்று ஒருமுறை கூறிவிட்டு மேலே படி.

அரவிந்த்! உன் மனம் பூப்போன்றது. உன் உள்ளம் களங்கமில்லாதது. நீ என் நண்பனானதே நான் செய்த அதிர்ஷ்டம்தான்.

நான் உன்னுடன் பழகிய ஒவ்வொரு நிமிடமும் எனக்குச் சகோதரன் இல்லாத குறையை மறந்தேன். உனக்கு இப்போதுதான் இருபத்து மூன்று வயதாகிறது. இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் உன் வயதுக்கேற்ற, உன் மனமறிந்து, குணமறிந்து நடக்கும் ஒரு பெண்ணை நானே அருகிலிருந்து உனக்கு மணம் முடித்து வைக்கிறேன். அப்போது நினைத்துக் கொள்வாய், இந்த வித்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாதது எவ்வளவு நல்லதாயிற்று என்று...


கடைசியாக ஒரு வார்த்தை. நீ அனுமானைப் போல. உன் திறமை உனக்குத் தெரியவில்லை. இனி வித்யா அருகிலில்லாமலே உன் வாழ்வு மணக்கப் போகிறது. அப்போது என்னை மறக்காமல் இருந்தால் போதும்.

உன் அப்பாவையும் ரம்பாவையும் சந்தோஷமாக வைத்துக் கொள்.

அன்றும், இன்றும், என்றும் உன் வித்யா.

பி.கு.: ''இத்துடன் வைத்திருக்கும் என் ராஜிநாமாக் கடிதத்தை ஆபீசில் சேர்த்துவிடு. நான் கிராமத்துக்குத் திரும்புகிறேன்.''

என் கடிதத்தைப் படித்துவிட்டு அரவிந்தின் முகம் எப்படி மாறும் என்று எனக்குத் தெரியும். ஆனால், கடைசியில், 'என் வித்யா செய்வது எப்பொழுதும் சரியாகத்தான் இருக்கும்' என்று கூறிக் கண்களில் கசியும் நீரைத் துடைத்துக்கொள்வான். அதுவும் எனக்குத் தெரியும்.



ஐரோப்பாவில் ஒரு புதிய கடவுள்



பாம்பீடு மூக்குக்கு ஒரு 'கிளிப்'!




எண்ணெய் நெருக்கடி!




“யுத்தத்தில் நம்முடைய செலவுகளை அவர்கள் ஏற்பார்கள்!”





“மழு பரிசீலனை செய்ததில் இஸ்ரேல்தான் ஆக்கிரமிப்புச் செய்ததாக எண்ணுகிறோம்!”



“அல்லாவின் ஆசி இருந்தால் சமாதானத்துக்கான அடுத்த நோபல் பரிசை நாம் மோஷே தயானுடன் பகிர்ந்து கொள்ளலாம்!”



எண்ணெய் நெருக்கடியையொட்டி உலகின் பல்வேறு பத்திரிகைகளில் வெளியான கணக் கற்ற கார்ட்டூன்களில் சிலவற்றின் தொகுப்பு.


SUPER
Surf
ஒரே ஒரு சலவையில்
ஸூப்பர் ஸர்ஃப்,
வேறெந்த சலவைப்
பவுடரையும் விட
அதிக வெண்மை தருகிறது!
அமோகமான சலவைத் திறன் படைத்தது ஸூப்பர்
ஸர்ஃப். கண்மறைவான அழுக்குகளையும் அகற்றிவிடும்.
காண்போர் பொறாமைப்படும் கற்பனை கடந்த
வெண்மை. கேட்பானேன், இந்தியாவின் தலைசிறந்த
ரகம்: ஸூப்பர் ஸர்ஃப்!
ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவைக்கே ஸூப்பர்ஸர்ஃப்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-ஸு.116-140 TM (R)



மன்னர்களிடம் தோற்ற மன்னர்கள்!

"ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜகம்பீர ராஜ கோலாகல..." என்று கட்டியக்காரன் மன்னர் வருகையை அறிவிப்பது போல் போலந்து ஹாக்கி மன்னர்களின் வருகைக்கு அவர்களது மானேஜர் கோஹேஜாக் ஜெனன் கட்டியம் கூறினார்: "இன்று டெஸ்டில் ஆடப்போகும் போலந்து ஹாக்கி மன்னர்களில் ஒன்பது பேர் மியூனிக் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டு இந்திய ஹாக்கி மன்னர்களைத் திணற அடித்து 2–2 'டிரா'வாக்கியவர்கள். கிறைஸ்ட் சர்ச் சர்வதேசப் போட்டியில் போலந்து ஹாக்கி மன்னர்கள் ஐந்தாவது இடத்தைப் பெற்றவர்கள்!"

இதைக் கேட்டு விட்டுப் போலந்து ஹாக்கி மன்னர்களின் ஆட்டத்தில் அபார நம்பிக்கையுடன் நேரு ஸ்டேடியத்தில் குழுமினோம். ஆனால்...

ஒன்று, இரண்டு, மூன்று என்று சரமாரியாகக் 'கோல்'கள் விழுகின்றன.—போலந்து கோஷ்டியின் மீதுதான்! இந்த ஹாக்கிப் பந்துக்கு இத்தனை ஓரவஞ்சனை கூடாது! இந்திய ஹாக்கி மன்னர்களின் 'ஸ்டிக்'குக்குள் புகுந்து நர்த்தனமாடி வெளிப்பட்டு எதிராளி காக்கும் 'கோலை'ச் சரணடைவதில்தான் எத்தனை ஆர்வம் காட்டுகின்றன! இந்தியக் கோஷ்டியின் முன்னணி ஆட்டக்காரர் கணேஷ் முதல் கோல் அடித்துப் பிள்ளையார் சுழி போட்டார்! இரண்டாவது கோலை 'பவர்' அடித்துத் தம் 'சக்தி'யைக் காட்டினார். மூன்றாவது முறையாக 'ஹாக்கி மந்திரவாதி' தயான்சந்தின் புதல்வர் அசோக் குமாரின் மாயாஜாலத்துக்குப் பந்து கட்டுப்பட்டுக் கோலுக்குள் புகுந்தது!

போலந்து ஹாக்கி மன்னர்களின் முதல் டெஸ்ட் படையெடுப்பை இந்திய ஹாக்கி மன்னர்கள் மூன்று 'கோல்' போட்டு முறியடித்தனர். ஹாக்கி உலகில் நம் 'முடிசூடா மன்னர்' பட்டம் அவ்வளவு எளிதில் ஆட்டம் கண்டுவிடாது என்ற நம்பிக்கையைக் கொடுத்தது!

"இந்தியப் பயணத்தில் ஹாக்கி ஆட்டத்தின் நுணுக்கங்களைத் தெரிந்துகொள்ள எங்களுக்கு நல்ல வாய்ப்பு!" என்று போலந்து மானேஜர் கோஹே ஜாக் பெருந்தன்மையுடன் கூறிய வார்த்தைகளை மெய்ப்பிக்க வைத்தது இந்தியக் கோஷ்டியின் ஆட்டம்.

—குண்டுமணி

புதுக்கோட்டை புதுக்கோயில்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள், கணபதியையும், முருகனையும், சிவபெருமானையும், திருமாலையும், சூரியனையும் சக்தியையும் கடவுளாகக் கொண்ட ஷண்மதங்களை நிலைநாட்டினார். ஸ்ரீகாஞ்சிப் பெரியவர்களின் ஆசி பெற்று, ஸ்ரீசாயி மாதா சிவ. பிருந்தா தேவி, திருச்சி மாவட்டம், புதுக்கோட்டையில் ஷண்மத ஆலயத் திருப்பணிகளை ஆரம்பித்துள்ளார். ஆறு ஆலயங்களும், ஒரு பெரிய நடு வட்டத்தினைச் சுற்றி அமைய இருக்கின்றன. மைய மண்டபம் ஒரு மாபெரும் குடை போல் அமைய இருக்கின்றது. நன்னைத் தானே மனிதன் ஒருசுற்று வந்தால், ஷண்மத ஆலயங்களையும் அந்தச் சுற்றிலே தரிசித்து விடலாம். ஓர் ஆலயம் அமைத்து, மூர்த்தி ஸ்தாபிதம் செய்ய ஐந்து ஆயிரங்கள் ஆகிவிருக்கின்றன. மேலும் கல்யாண மண்டபம், யாகசாலை, நூலகம், திருக்குளம், திரு மதில் முதலியனவும் எழுப்பப் பட்டுள்ளன. பொன்னாகவும், பொருளாகவும் நிலமாகவும், வேறு எந்த விதச் சொத்தாகவும் உதவியளிக்க முன்வருவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஸ்ரீ சாயி மாதா சிவ. பிருந்தா தேவி, மச்சுவாடி, புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.

நெல்லை மாவட்டம் கோவில்பட்டியில் தனியாக ரயில் ஏறி, சென்னைக் கல்லூரி தங்கும் விடுதிக்கு வந்து சேருகிறாள் சண்முகத் தாய். இதிலென்ன அதிசயம் என்கிறீர்களா? சண்முகத்தாய் பார்வையற்றவள்!

''தேனாம்பேட்டையில் உள்ள செவிடர் ஊமைப் பள்ளியில், அந்தகர் பிரிவில் படிக்கும் போதிலிருந்து லீவு நாட்களில் சொந்தக் கிராமம் சென்று வருவேன். கோவில்பட்டிக்குப் பக்கத்தில் உள்ள நாலாட்டின் புத்தூர் என் சொந்த ஊர். நான் வணங்கும் வேங்கடாசலபதி அருளால் இதுவரை எந்த ஆபத்தும், துன்பமும், சங்கடமும் வந்த தில்லை...'' என்கிறாள் பார்வையற்ற மாணவி சண்முகத்தாய்.

அவளுக்கு உள்ள ஒரே ஆதரவு தாயார். கிராமத்தில் விவசாயக் கூலி வேலை செய்து ஜீவனம் நடத்துகிறாராம்.

வட சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்புப் படிக்கும் மாணவி சண்முகத் தாயை, விடுதித் தலைவியின் அனுமதி, உதவியுடன் பேட்டி காண்கிறேன்.

சூரியோதயத்தையும், சந்திரோதயத்தையும், மின்னும் நட்சத்திரக் கூட்டத்தையும் சிறகடித்துப் பறக்கும் புள்ளினங்களின் கூட்டத்தையும் பார்த்துத்தான் இருக்கிறாள் சண்முகத்தாய் - ஐந்து வயது வரையில்! அப்புறம் பெரியம்மை பார்வையைப் பறித்துவிட்டது.

''வகுப்பில் பாடம் நடக்கும்போது எப்படிக் குறிப்பெடுத்துக் கொள்வாய்?''

இந்தக் கேள்விக்குச் செயல் முறையில் விளக்கம் கொடுக்கிறாள் சண்முகத்தாய். முக்கால் அடி நீளமும், இரண்டு அங்குல அகலமும் கொண்ட பித்தளைத் தகடு இரண்டு மடிப்பாக இருக்கிறது. அதில் சிறு சிறு துவாரங்கள், சதுரங்களில் காணப்பட்டன. சிறிய கைப்பிடி கொண்ட ஊசியால் மட மடவென்று குறிப்பு எடுத்துக் காண்பிக்கிறாள் சண்முகத்தாய்.

''எனக்கு வெள்ளைத் தாள்களில் இப்படிக் குறிப்பெடுக்கப் பணச் செலவு அதிகம் ஆகும். ஆகவால் பழைய பத்திரிகைகளைத்தான் கல்லூரி நடக்கும்போது எடுத்துப் போய்க் குறிப்பெடுப்பேன். அதையே ஹாஸ்டலிலும் எடுத்துப் படிப்பேன்...''

''பரீட்சை எப்படி எழுதுவாய்?''

''மாதாந்திர, அரசாங்கத் தேர்வுகளின் போது, கேள்விகளைப் படிக்கச் சொல்லிக் கேட்டு, பிரெய்லி முறையில் நான் எழுதிக் கொள்வேன். விடைகளைத் தயாரித்துப் பேராசிரியர்களிடம் படித்துக் காட்டுவேன். மதிப்பெண் பெறுவேன்.''

ஆண்டுக்கு அறுநூறு ரூபாய் அரசாங்க உதவித் தொகை பெறும் மாணவி சண்முகத்தாய், பட்டம் பெற்றதும் ஆசிரியை வேலைக்குப் போக விரும்புகிறாள்.

படிப்பு என்னும் பார்வை இருக்கிறது!

- உடலில் ஊனம்
- உள்ளத்தில்
- ஊக்கம்

மாணவி சண்முகத்தாய் கூறுகிறாள்: ''என் தந்தை எனக்கு இரண்டரை வயதாக இருக்கும்போதே இறந்து விட்டார். ஏழைகளான எங்களுக்கு உதவி செய்ய உறவினர்களும் இல்லை..... ஊர்ப் பிள்ளைகள் 'குருடி' என்று பரிகாசம் செய்தார்கள். சிறுமியாதலால் அப்போது எனக்கு இது துன்பமாகப் படவில்லை..... ஆனால் என் அம்மா மனம் நொந்து போய்ப் புலம்பினாள்.''

கேள்வி: சென்னையில் படிக்க உனக்கு யார் உதவினார்கள்?

''ஆசிரியை பராசக்தி என்பவர் என்னைச் சென்னை தேனாம்பேட்டை உடல் ஊனமுற்றோர் பள்ளியில் சேர்த்தார். முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையில் இலவசமாகப் படித்தேன். இலவசமாகத் தங்க இடமும் உணவும் அளித்தார்கள்.''

வகுப்புப் பாடங்களில் மட்டுமல்லாமல், விளையாட்டுப் போட்டிகளிலும் முதற் பரிசு பெற்றிருக்கிறாள் சண்முகத்தாய். ஓட்டப் பந்தயங்களில் கூடச் சேர்ந்து ஓடியிருக்கிறாள்! 'புனித அன்னம்மாள், பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றாள்.

'பிரெய்லி' முறை எழுத்துக்களைத்தான் பார்வையற்றவர்கள் எழுதவும், படிக்கவும் முடியும். பிரெய்லி முறையில் கல்லூரிப் பாட நூல்கள் கிடையாது.

''பார்வை இழந்த மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் டைப்ரைட்டர் உண்டு. அதை எங்களைப் போன்ற ஏழைகளுக்கு அரசாங்கம் தர வேண்டும். படிப்புக்குப் பேருதவியாக இருக்கும்'' என்று கூறுகிறாள் மாணவி சண்முகத்தாய்.

பேட்டி: ஏ. சுவாமிநாதன்



உங்களுடைய பார்சல்கள் எங்களுடைய வாழ்வு.



எனவேதான் உங்கள் பார்சல்களைப் பத்திரமாகவும், குறித்த நேரத்திலும், ஒழுங்காகவும் கொண்டு சேர்க்கிறோம்.

எப்படி என்று கேட்கிறீர்களா?

வேகமாக: ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு நேரிடையாகச் செல்லும் பார்சல் சர்வீஸ் இருப்பதனால் உங்கள் பார்சல்கள் வழியில் ஏற்றி இறக்கப்படுவதில்லை. மேலும் எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமானவை. எனவே காத்திருக்கத் தேவையில்லை. டிரெய்லர்களும் நிறைய இருப்பதால், அதிக பார்சல்களை விரைவில் ஏற்றிச் செல்ல முடியும். இவை தவிர, மின்னல்வேக சர்வீஸ்களும் உண்டு. வண்டிகள் நடுவழியில் பழுதடைந்தால், உடனடியாகச் செப்பனிட பட்டறைகளையும் நிறுவியிருக்கிறோம்.


பத்திரமாக: எங்கள் டிரைவர்கள் அனைவரும் திறமைசாலிகள். அவர்களை அவ்வப்போது சோதனைகளுக்கும் உட்படுத்துகிறோம். அபாயம் இருக்கக் கூடிய நள்ளிரவு நேரங்களில் வண்டி ஓட்ட அனுமதிப்பதில்லை. மேலும் எங்களது ஏற்றி-இறக்கும் பணியாட்கள் அனுபவம் மிகுந்தவர்கள். உங்கள் பார்சல்களை பூப்போல கையாளக் கூடியவர்கள். எனவே பார்சல்கள் பத்திரமாகப் போய்ச் சேர்கின்றன.

ஒழுங்காக: எங்கள் ஊழியர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அனுபவசாலிகள். திறமையுடன் பணியாற்றுவதையே லட்சியமாகக் கொண்டவர்கள். இன்முகமும், புன் சிரிப்பும், இணையற்ற செயல் திறனும் இணைந்தவர்கள்.

இப்படித்தான் 60 ஆண்டு காலமாக உங்களுக்குத் தொண்டாற்றி வருகிறோம். இனியும் தொடர்ந்து பணி புரிவோம்.

TVS உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)



FDS SR 2008 TAMA

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

"நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்."—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)